Thanjavur Sarasvati Mahal – Series No. 345

|| ஸ்ரீ: ||

கணபதி உபாசனை

அல்லது

மஹாகணபதி விதானம்

பதிப்பாசிரியர் :

நேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்
மேனிலை ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

1998] [விலை: ரூ. 25—00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: கணபதி உபாஸனை அல்லது மஹா கணபதி விதானம்
பதிப்பாசிரியர்	: தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.
வெளியீட்டு எண்	: 315
மொழி	: சம்ஸ்கிருத மூலம் தமிழாக்கத்துடன்
பதிப்பு	: மூன்றாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	: ஆகஸ்ட், 1998.
தாள்	: 14.2 கிலோ-சேஷசாயி
நூல் அளவு	: 21 X 14 செ.மீ.
பக்கங்கள்	: 114
படிகள்	: 500
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	: மெலிந்த அட்டை
பொருள்	: சமயம்
விலை	: ரூ. 25—00

வெளியீட்டாளர் முகவுரை

(மூன்றாம் பதிப்புரை)

சரஸ்வதி மகால் நூலக வெளியீடான கணபதி உபாசனை அல்லது மகாகணபதி விதானம் என்னும் நூலின் மூன்றாம் பதிப்பு இப்போது வெளியிடப்படுகிறது.

கணபதி ஒரு முழு முதற் கடவுள். இந்துக்களின் முக்கிய கடவுளர்களுள் ஒருவர். ஆலயங்களிலும், மதச் சடங்குகளிலும் இந்துக்கள் கணபதிக்கே முதலில் பூஜை நடத்துவர். கணபதி வழிபாட்டின் சிறப்பியல்களும், போற்றப் படுகின்ற முறைகளும், அவற்றால் அறியப் படுகின்ற அடிப்படைத் தத்துவங்களும், அவரை வழிபடுவதின் பயனும் இந்நூலில் கூறப் பட்டுள்ளன.

மூன்றாண்டு இடைவெளிக்குப் பின் இந்நூல் வெளிவருகிறது. வாசகர்களிடையே இந்த நூலுக்குச் சிறந்த வரவேற்பிருப்பதை அறிந்து மகிழ்கிறேன். பண்டைய சமஸ்கிருத நூலில் மறைந்துள்ள செய்திகள் தமிழ் மொழியில் வெளி வருவது தமிழ் வாசகர்களுக்குப் பேருதவியாய் இருக்கும்.

இந்த நூலை வெளியிடுவதற்குப் பொருளுதவி புரிந்த மைய அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாம் பதிப்பை விரைவில் அச்சுக்குக் கொணர ஆக்கப் பூர்வமான பணிகளை மேற்கொண்ட நூலக நிர்வாக அலுவலர் திரு. கே. ஆர். சீனிவாசன் அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூல் விரைவில் வெளிவரவேண்டும் என்ற எண்ணத்தில் 'காப்பி பிரிண்டர்' சாதனத்தின் வாயிலாக அச்சிட்டு மூன்றே நாட்களில் வெளிவரும் முதல் நூல் என்பதை வாசகர்களுக்கு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

து. நா. இராமநாதன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
9—8—1998

பதிப்புரை

(இரண்டாம் பதிப்பு)

சரசுவதி மகால் நூலகம், "கணபதி உபாஸனை" அல்லது "மகாகணபதி விதானம்" எனும் நூலின் இரண்டாம் பதிப்பினை வெளியிடுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டாண்டு இடைவெளியில் இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளியிடப்படும் வாய்ப்பு ஏற்பட்டதிலிருந்து வாசகர்களிடையே இந்நூலுக்கு உள்ள வரவேற்பையும் மதிப்பையும் புரிந்துகொள்ள முடிகிறது. பண்டைய ஸம்ஸ்க்ருத நூல்களில் மறைந்துள்ள இதுபோன்ற அரிய செய்திகளை ஸம்ஸ்க்ருத மொழி அறியாதோரும் அறிந்துகொள்ளும் வண்ணம் தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிடப்படும் நூல்களுக்கு வாசகர்களிடையே நல்ல வரவேற்பு உண்டு என்பதும் இதன் மூலம் உணரமுடிகிறது.

அரிய நூல்களை வெளியிடுவதற்குப் பொருளுதவி நல்கும் மைய அரசுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிட ஊக்கமளித்த நூலக நிருவாக அலுவலர் திரு. எஸ். ஸ்ரீநிவாஸராகவன் அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த நூலக அச்சகப் பிரிவினருக்கு எனது பாராட்டுக்கள்.

தேவ. ஜோதி ஜெகராஜன், இ. ஆ. ப.
மாவட்ட ஆட்சியர் மற்றும் நூலக இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
4—7—1995

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
18—7—98

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

PUBLISHER'S PREFACE

Sarasvati Mahal presents to the public a small but good and useful work named Mahaganapathi Vidhanam, the procedure of worship of Lord Ganesa.

It is known to all that there is definite procedure of worship to each God, eventhough many do not observe it in these modern days. But the secrets are treasured up in Tantric Texts which are in Sanskrit language.

I had an anguish that the numerous good thoughts and principles which are treasured in ancient Sanskrit Texts are not properly translated and not brought to the light. Now, Sri S. Krishnamurthy Sastry, the Senior Sanskrit Pandit of Sarasvati Mahal has come forward to disclose the proper methods of worship in general, to the public in Tamil language by way of editing the old manuscript Maha Ganapathi Vidhanam of this Library.

In this work, he has given a list of serviceable articles for the worship and has explained the meaning of Mantras, the procedure for chanting mantras and the rules to be adopted in this regard. I hope that this worthy book will be very useful to the public and it will be welcomed by all.

It is my sincere hope that many Sanskrit works must be brought out in the same way.

I appreciate and I thank Sri S. Krishnamurthy Sastry for his endeavour in bringing out this work in an excellent way.

I appreciate Sri A. Panchanathan, M. A., M. L. I. S.. the Administrative Officer in-charge, the members of the staff and the members of printing section of Sarasvati Mahal for the neat execution of printing.

T. SHANMUGA RAJESWARAN, I. A. S.,
District Collector and Director,
Sarasvati Mahal Library.

Thanjavur,
04—3—1993

***
**
*

பதிப்புரை

சரசுவதி மகால் நூலகம் சம்ஸ்கிருத மொழியிலுள்ள "மகாகணபதி விதானம்" என்னும் நூலை எண். 7147/681 தமிழாக்கத்துடன் வெளியிடுகிறது.

அருவ வழிபாடு, அருவ — உருவ வழிபாடு, உருவ வழிபாடு, "யந்திர" வழிபாடு என்பதாக வேறுபட்ட வழிபாடுகளுக்கு ஏற்ப வழிபாட்டு விதிமுறைகளும் பலவாறாகப் பிரிந்துள்ளன. அருவ வழிபாடே சிறந்ததாயினும் அந்த நிலையை அடைவதற்கு அருவ — உருவ வழிபாடும், உருவ வழிபாடும் துணைபுரிபவையே.

மகாகணபதி, திருமால், சிவபெருமான், சக்தி, கிராம தேவதைகள் என்ற உட்பிரிவுகள் உள்ள நிலையில் உருவ வழிபாடு வழிமுறைகள் (ஊருக்கு ஊர்) இடத்திற்கு இடம் மாறுபட்டுள்ளன.

ஆனால் ரேகை வடிவிலான யந்த்ர வழிபாடு பற்றிக் கூறும் "தந்த்ர" நூல்கள் யாவும் ஒரே மாதிரியான வழிபாட்டு விதிமுறைகளையே வகுத்துள்ளன. உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் அவர்கள் யாராக இருந்தாலும் "யந்த்ர" வழிபாடு செய்யும் விதிமுறைகளில் வேறுபாடு இருக்காது. உதாரணமாக மூலமந்த்ரம், ஜபம் செய்யும்முறை, பூத சுத்தி, நியாஸங்கள் முதலான அடிப்படை விதிகளில் எவ்வித மாற்றமும் இருப்பதில்லை. அதுபோல ஆவரண பூஜையிலும் மாற்றமிராது.

இந்நூலைத் தமிழில் வெளியிட்டுள்ள நூலக மேநிலை சம்ஸ்கிருத பண்டிதர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் வழிபாட்டுப் பொது விதிகளை அதிகம்

விரிவு படுத்தாமலும், அவசியமான கருத்துக்களை விட்டு விடாமலும் கூறியிருப்பதுடன் மகாகணபதி வழிபாட்டு முறைகளை வரிசைப்படுத்தி விளக்கங்களுடன் தந்துள்ளார்கள்.

சம்ஸ்கிருத நூல்களில் பொதிந்துள்ள இதுபோன்ற அரிய செய்திகள் பலவும் மக்களுக்குப் பயன்படும் வகையில் தமிழில் வெளிக்கொணர வேண்டும் என்ற எனது அவா இந்த நூல் வாயிலாக நிறைவு பெறத்தொடங்குவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்து மேலும் பல நூல்கள் இதுபோல் வெளியிடப்படுவதை விரும்புகிறேன், பக்தர்களுக்கு இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இதன் பதிப்பாசிரியர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளைப் பாராட்டுகிறேன். இந்த நூலை வெளியிடுவதற்கு ஊக்கம் அளித்த நூலக நிர்வாகப் பொறுப்பில் உள்ள திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களுக்கும், நூலைப் பிழையின்றி அச்சிட்டுள்ள நூலக அச்சகப் பிரிவு உறுப்பினர்களுக்கும் எனது நன்றி.

தி. சண்முக ராஜேஸ்வரன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.
30—3—93

முன்னுரை

வழிபாடு எனும் பொருளைக் கொண்ட உபாஸனம் அல்லது உபாஸனை என்ற ஸம்ஸ்கிருதச் சொல்லிற்கு உப — அருகில் (அ) ஆஸன இருத்தல் என்று பொருளாகும். இதனையனுசரித்து யாருடைய அருகில்? என்ற வினா எழுகிறது. "வழிபடுகிற தெய்வத்தின் அருகில் இருத்தல்" என்பதாக மேலோட்டமாக இதற்குப் பொருள் இருப்பினும் ஊன்றிக் கவனிக்குமிடத்து இச்சொல்லின் பொருள் கருத்தாழம் உள்ளதாக இருக்கிறது.

'ஈசாவாஸ்யமிதம் ஜகத்' (ईशावास्यमिदं जगत्) என்பது போன்ற ச்ருதி வாக்யங்களின்படி கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும், எல்லாமாக, எப்பொழுதும் வியாபித்துள்ள பொழுது 'அருகில் இருத்தல்' என்ற பொருள் கொண்ட உபாஸனம், உபாஸனா என்ற சொல்லிற்கு இன்னும் சற்று அழுத்தமான மாறுபட்ட பொருள் இருந்தாக வேண்டும்.

அக்ஞானத்தின் ப்பயனாக எத்தனையெத்தனையோ பிறவிகளை எடுத்துள்ள ஜீவன் அஹங்காரத்தின் விளைவாக தாம் வேறு தாம் காணும் உலகம் வேறு, உலகிலுள்ள ஜீவர்கள் வேறு என்ற எண்ணத்திலேயே, த்வைத பாவத்திலேயே ஊறிவிட்டிருக்கிறான். உதாரணமாக, காவிரி ஆறு, அதிலிருந்து பிரிந்து செல்லும் வாய்க்கால் வழியாக நீர் நிரம்பிய குளம் இரண்டையும் எடுத்துக் கொள்வோம். காவிரியில் ஓடும் நீர்தான் அந்த வாய்க்காலிலும் ஓடுகிறது. அதன் வழியே சென்ற நீர்தான் குளத்திலும் நிரம்பியுள்ளது.

உண்மையில் காவிரிநீர்தான் குளத்தில் தேக்கப்பட்டுள்ளது. அவ்விரண்டு இடங்களிலும் உள்ள நீர் வேறுபட்டதல்ல. எனினும் காவிரிநீர் வேறு, குளத்துநீர் வேறு என்பதாகவே கருதப்படுகிறது. இதே போன்று குளத்துநீரில் பிரதிபலிக்கும் சூரியனும் சட்டியில் உள்ள நீரில் பிரதிபலிக்கும் சூரியனும் வேறு வேறல்ல. எனவே எங்கும் வியாபகமாயுள்ள பரமாத்மவஸ்து வேறல்ல. மனித உடலில் பிரதிபலிக்கும் ஜீவன் வேறல்ல. பரம்பொருள், பரமாத்ம வஸ்து என்று கருதப்படும் கடவுள் காவிரி நீர் போன்றது என்பதும் பரம்பொருளினின்றும் வேறுபடாத இந்த ஜீவன் குளத்து நீர் போன்றது என்பதுமே உண்மை. வானில் சுடர்விடும் சூரியன் போன்று பிரம்மாண்டத்தில் பிரகாசிக்கும் பரமாத்ம வஸ்துவே, சட்டி நீரில் பிரதிபலிக்கும் சூரியன் போன்று பஞ்சபூத உடலில் பிரதிபலிக்கும்பொழுது ஜீவன் எனப்படும். அக்ஞானத்தின் விளைவாக ஜீவன் தன்னை வேறுபடுத்திக் கொண்டாலும் உண்மையில் பரமாத்ம வஸ்துவினின்றும் வேறுபட்டதல்ல. 'தத்வமஸி' (तत्त्वमसि), 'அயமாத்மா ப்ரம்ம' (अयमात्मा ब्रह्म), 'ப்ரம்மைவாஹம்' (ब्रह्मैवाहम् अस्मि) என்பது போன்ற மஹாவாக்யங்களின் கருத்துக்களும் இதுவே.

. . . . . .

அக்ஞான வயப்பட்டு காலம் காலமாகப் பரம்பொருளையும் தன்னையும் வேறுபடுத்திப் உணர்ந்துவிட்ட இந்த ஜீவன் எத்தனை காலம்தான் இந்த மார்க்கத்தில் இருப்பது? மாயையின் திருவிளையாடலின் பயனாக பரம்பொருளினின்றும் பிரிந்து, தன்னை வேறுபடுத்திக்கொண்டு, தனிப்படுத்தி உணர்ந்துகொண்டு "யாத்திரை" தொடங்கிவிட்ட ஜீவன் பலப்பல வகையிலான பிறவிகளையெடுத்து, வளர்ந்து நோய்வாய்ப்பட்டு, பிரிவு, முதுமை, மரணம்

முதலானவற்றிற்கு ஆட்பட்டு, ஜனன மரண வட்டத்தில் எத்தனை காலம்தான் சுழல்வது ?' இதற்கு முடிவுதான் வேண்டாமா ? எனவே இச்சுழற்சிக்கு முடிவுகாணும் முகமாக கர்மா — பக்தி — ஞானம் — உபாஸனம் — உபாஸனை என்னும் உபாயங்களை மஹரிஷிகள் கண்டனர். உலகோருக்கும் அளித்தனர். அவ்வாறான உபாயங்களில் ஒன்றே உபாஸனம் என்பதாகும் !

எங்கோ இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கும் கடவுளின் அருகில் - மிகமிக அருகில், இடைவெளியின்றி— தாம் வேறு — கடவுள்வேறு என்ற வேறுபாடின்றி கடவுளாகவே ஒன்றிய நிலையில் இருப்பது. நிலைத்து இருப்பது என்பதே உபாஸனம் எனும் சொல்லின் கருத்தாகும். இந்த நிலையில் நின்று பேறுபெற்ற மகான்கள் 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நல்லுணர்வுடன் கூறிய முறைதான் உபாஸனாமார்க்கம் எனப்படுகிறது.

தெய்வம் ஒன்றேயாயினும் அதனை ஜீவர்கள் தம் தகுதி—விருப்பம் இவற்றிற்கு ஏற்பு பலவாறாகக் கற்பித்துக் கொண்டு வழிபாடு செய்ததை ஒரு நிலைவரை அங்கீகரிக்கப் பட்டது. காசித்தலம் நோக்கிப் பயணப்படும் பலர் தத்தம் வசதிகளுக்கேற்ப ப்யணமுறைகளை மேற்கொண்டாலும் வேவ்வேறு வழிகளில் சென்றாலும் அவர்கள் போய்ச் சேருமிடம் ஒன்றேயல்லவா ! இதே போன்று கர்மமார்கம், பக்திமார்கம், ஞான மார்கம், உபாஸனாமார்கம் என கடவுள் வழிபாட்டு முறைகள்-வழிகள் வேறுபட்டாலும் ஜீவர்கள் தத்தமக்குப் பிடித்த வழிகளில் வழிபாடுகளைச் செய்தாலும் பிறவி இறப்பில்லாத விடுதலை நிலை — முக்தி நிலை யென்ற லக்ஷ்யத்தையே முடிவில் அடைகின்றனர்.

ஸ்ரீ மஹாகணபதியே மூலக்கடவுள் என்ற தத்துவத்தில் நிலைத்து நின்று வழிபாடு செய்து இஹ—பர நலன்களைப் பெற்றுள்ள மஹான்கள் நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக இருப்பினும் மஹாராஷ்டிரா, குஜராத் போன்ற பகுதிகளில்தான் அதிகம் இருக்கிறார்கள்.

ஸ்ரீ மஹாகணபதியின் வழிபாட்டு விதிமுறைகளைக் கூறும் "கணபதி விதானம்" எனும் சிறிய நூல் நமது சரஸ்வதி மகால் நூலகத்தில் காகிதச் சுவடி வடிவில் உள்ளது. இந்நூலைப் பதிப்பித்ததோடு — வழிபாட்டு விதிமுறைகள் பற்றிய விளக்கங்களும் இதில் தமிழ் மொழியில் தரப்பட்டுள்ளன.

வழிபாடு இரண்டுவிதமாகச் செய்யப்படுகிறது. தகுந்த குருநாதரிடம் தீக்ஷை முறையில் மந்த்ரத்தைப் பெற்றுக் கொண்டு பூஜிப்பது ஒருவகை. தீக்ஷையின்றி உபதேசம் மட்டும் பெற்றுக்கொண்டு பூஜிப்பது வேறுவகை. முதலில் கூறப்பட்ட பூஜை முறையில் அதிகம் கட்டாயமான கட்டுப் பாடுகள் உண்டு. மற்றதில் கட்டாயமில்லை. விதிவிலக்கு உண்டு. எந்த தெய்வ உபாஸனையானாலும் பூஜை விதிகள் ஒருநிலைவரை மாற்றமில்லாது இருக்கும். அவற்றுள் சில:—

பொதுவாக உபாஸனையில் மந்த்ரஸ்நானம் — மந்த்ர ஸந்த்யா, (தாந்த்ரிக ஸந்த்யா) பூஜைக்கான பொருள்கள்; திக்பந்தனம், ஆஸனம், ஸங்கல்ப்பம், விக்ன உத்ஸாரணம்; கண்டா பூஜை, தீபபூஜை, கலசபூஜை, ஸாமான்ய அர்க்யம் சங்க(கு) பூஜை இவைகளுடன் பூதசுத்தி, பஹிர் மாத்ருகாதி நியாஸங்கள், விசேஷார்க்கியம் பீடபூஜை—பீடசக்தி பூஜை 64 வகை உபசாரங்கள் கொண்ட பூஜை — ஆவரண பூஜை, அர்ச்சனை பலிதானம் பூஜாங்கமான ஹோமம் இவைகள் உண்டு. இவை யாவும் எல்லா தெய்வ

உபாஸனையிலும் பொதுவானவையே. மந்த்ரங்களும் — ஒரு சில திரவியங்களும் மாறுபடலாம். அவ்வளவே.

உதாரணமாக பூஜைக்கான சந்தனம் தயார் செய்யப் படுவதில் சிறிது மாறுபாடுகள் உண்டு. எட்டு வகைப் பொருள்கள் கொண்டு பூஜைக்காகத் தயார் செய்யப்படும் சந்தனம் 'அஷ்டகந்தம்' என்பர். இது எல்லா தெய்வங் களுக்கும் ஒரே மாதிரியானதாக இருக்காது. மகாகணபதிக் கான அஷ்டகந்தம் வேறு. ஆனால் கூட்டுப் பொருள் களில் மாற்றம் இருப்பினும் சந்தனம் இல்லாது பூஜை இல்லை. இதே போன்று புஷ்பங்களில் சில வகையே சில தெய்வங்களுக்கு உகந்ததாக இருக்கும். வெண்ணிற புஷ்பம் திருமாலுக்கும், சிகப்பு நிற மலர்கள் துர்கை, மகாகணபதிக்கும் உகந்தவை. தாழம்பூ சிவபெருமானுக்கு உகந்ததல்ல. துளஸி கணபதிக்கு உகந்ததல்ல இப்படிச் சில மாற்றம் இருப்பினும் பூஜையில் புஷ்பம் இருந்தாக வேண்டும்.

இதேபோல் எல்லா தெய்வ வழிபாட்டிலும் அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பொது அம்சங்களும் உண்டு. பூஜையின் பயன்களைப்பெற விரும்புவோர் **பூதசுத்தி, மாத்ருகா நியாஸங்கள்** இவைகளைக் கருத்துடன் செய்த பிறகே பூஜையைத் தொடங்குவர்.

பூத சுத்தி

பூதங்கள் — மண், நீர், அக்னி, வாயு, ஆகாயம் ஆகியவை ஐந்து பூதங்கள். இவை யாவும் ஒன்றிலிருந்து மற்றது என்ற முறையில் தோன்றியவை. ஆத்ம வஸ்துவி னின்று வானமும், அதிலிருந்து காற்றும், அதிலிருந்து அக்னியும், அதிலிருந்து நீரும், நீரினின்று மண்ணும் தோன்றியவை. மண்ணிலிருந்து பச்சிலைகளும் (தான்யங்

களும்) அதிலிருந்து உணவும் உணவினின்று மனிதனும் தோன்றியவையாகும். இவ்வாறு தோன்றிய இப்பிரபஞ்சம் - லயகாலத்தில் தோன்றிய முறையிலேயே — பின்னோக்கி ஒன்று மற்றதில் லயமடையும். மண் நீரிலும், நீர் அக்னி யிலும், அக்னி வாயுவிலும், வாயு வானிலும், வான் ஆத்மா விலும் லயமடையும். (तस्मादात्मन आकाशः सम्भूतः, अकाशाद्वायुः, वायोरग्निः, अग्नेरापः, अद्भ्यः पृथिवी, पृथिव्या ओषधयः । ओषधीभ्योऽन्नम् । अन्नात् पुरुषः ॥ அது சமயம் ஆத்மா தவிர வேறு எதுவும் இல்லாத நிலை ஏற்படும்.

பிரம்மாண்டத்தில் நடைபெறக்கூடிய இதே நிகழ்ச்சியை ஸாதகன் தமது பௌதிக உடலில் பிண்டாண்டத்தில் பாவனையாக அநுஸந்தானம் செய்ய வேண்டும், எதற்காக? பூஜை விதிமுறைகளில், மனம் சொல்லுக்கு எட்டாத், மிகப் புனிதமான தெய்வத்தைப் பூஜிப்பவன் அழுக்கான மனம், உடலுடன் பூஜை செய்யலாகாது. தாமும் தூய்மை பெற்றுத் தான் பூஜிக்கவேண்டும். எனவேதான் "नादेवो देवमर्चयेत्" "தெய்வத்தன்மை பெறாதவன்—அற்றவன் தெய்வத்தைப் பூஜிக்கலாகாது" என்று சொல்லப்படுகிறது.

இதற்காக ஸாதகன் பூஜை செய்ய ஆசனத்தில் அமர்ந்த வுடன், "பூதவிலாபம்" எனும் இந்த வழிபாட்டினைச் செய்ய வேண்டும். முதலில் பிராணாயாம முறையில் ஜீவ சிவனை மூலத்தானத்தினின்றும் ஸ்வாதிஷ்டானம்/ மணிபூரகம் முதலான ஆறுவகை சக்ரங்களின் வழியாக பரசிவத்துடன் இணைத்திட வேண்டும். பின்னர் 'லம்' எனும் 'பீஜத்தை' ஜபித்துக்கொண்டு பாவனையாக உடலின் மண்பகுதியை நீரில் லயமடைவித்து, நீரை 'லம்' எனும் பீஜத்தை மனதில் சொல்லியவாறு அக்னியிலும், அக்னியை 'ரம்' எனும் பீஜத்தைச் சொல்லியவாறு வாயுவிலும்,

வாயுவை 'யம்' என்று சொல்லியவாறு ஆகாயத்திலும், ஆகாயத்தை 'ஹம்' எனும் பீஜத்தைச் சொல்லியவாறு ஆத்மாவிலும் லயமடையச் செய்யவேண்டும். யாவும் வலுவான பாவனையுடன் செய்தல் வேண்டும். இப்பொழுது சாதகனின் (பூதவுடல் இல்லை) இவ்வளவுக்கும் பிறகும் கரையாத ஒன்று உண்டு. அதுவே "பாபபுருஷன்" எனப்படுவது. அவனைச் சுட்டுப் பொசுக்கியாக வேண்டும். தங்கத்தைத் திருடுதல், கள் குடித்தல், குருநாதரின் படுக்கையைப் பகிர்தல், ப்ரம்மஹத்யா இவற்றைச் செய்தோருடன் தொடர்புகொள்ளுதல் ஆகிய *ஐம்பெரும் பாதகங்களையும் உபபாதகங்களையும் உடல்பாகங்களாகக் கொண்ட அப் பாப புருஷன் உடலின் உள்ளே இருக்கும் வரையில் சுப சிந்தனைகளோ தூய செயல்களில் ஈடுபாடோ, நிலைத்த மனமோ ஏற்படாது என்பதால் அந்த பாப புருஷனை ஸம்ஹரித்தாக வேண்டும். இதற்கான உபாயம் பிராணாயாம முறையில் சொல்லப்பட்டுள்ளது. (இதனை குருமூகமாகத் தெரிந்து செய்தல் வேண்டும்.)

ஒரு நாசித்துவாரத்தை மூடிக்கொண்டு மற்ற துவாரத்தினால் சுவாஸத்தை உள்ளிழுக்கும்பொழுது 16 முறை 'ரம்' என்ற அக்னி பீஜத்தை மானஸிகமாக ஜபம் செய்ய வேண்டும். பிறகு 32 முறை அதே பீஜத்தை மானஸிகமாக ஜபித்தவாறு இருநாசித்துவாரங்களையும் மூடிக்கொண்டு

---

* पापपुरुषस्वरूपं तन्त्रेषु—

दक्षकुक्षिस्थितं कृष्णमङ्गुष्ठपरिमाणकम् ।
ब्रह्महत्याशिरोयुक्तं कनकस्तेयबाहुकम् ।
मदिरापानहृदयं गुरुतल्पकटीयुतम् ।
तत्संसर्गिपदद्वन्द्वमुपपातकरोमकम् ॥

மூச்சை அடக்கி, அக்னி பீஜபிரபாவத்தால் பாப புருஷனை எரிக்கவேண்டும். பிறகு மறு நாசித்துவாரத்தைத் திறந்து மெதுவாக 16 முறை 'யம்' என்ற வாயு பீஜத்தை மனதிற்குள் ஜபித்தவாறு எரியூட்டப்பட்ட பாபபுருஷனின் சாம்பலை வெளியேற்றவேண்டும். மறுபடி, ஒரு நாசித்துவாரத்தை மூடிக்கொண்டு 'வம்' என்ற அமிருத பீஜத்தை உச்சரித்தவாறு மறு நாசியால் காற்றை உள்ளுக்கு இழுத்து, பாப புருஷன் இருந்த பகுதியை சுத்தம் செய்ய வேண்டும். இந்தப்படி பாப புருஷனின் நாசம் ஆன பிறகு பூதவிலாபம் ஆனதால் உடலற்ற நிலையில் இருக்கும் ஸாதகன் மறுபடி பிண்ட சரீரத்தை உண்டுபண்ண வேண்டும். முன்போலவே ஆத்மாவிலிருந்து வானம், வாயு, அக்னி, நீர், மண் முதலானவற்றைப் படைத்து இந்தப் புனித உடலில் இதய பாகத்தில் ஜீவனை பிரதிஷ்டை செய்து, பாபங்களற்ற புது மனிதனாக இருந்து பூஜை தொடங்க வேண்டும். இவ்வாறு தினந்தோறும் பூதசுத்தியுடன் பூஜை நடத்தப்படுமாகில், இந்த அனுஸந்தானத்தின் பயனாக ஸாதகன் உயர்நிலை அடைவது திண்ணம்.

இவ்விதமே இருவகை மாத்ருகா நியாஸங்கள்-மந்த்ர வர்ண நியாஸங்கள், மந்த்ர பாத நியாஸங்கள் போன்ற நியாஸங்களும் செய்து அகமும் புறமும் தூய்மையுறச் செய்துகொண்டு பூஜை செய்தல் வேண்டும். ஆவரண பூஜை செய்யும் பெரியவர்கள் இதில் எல்லாவற்றையும் செய்வது உண்டு.

மேலும் வழிபடும் தெய்வத்திற்குப் பிடித்தமான முத்ரைகளையும் சில பொதுவான முத்ரைகளையும் குருநாதர் மூலம் தெரிந்துகொண்டு பூஜையிலும் ஹோமத்திலும் பயன் படுத்தினால் ஸாதகன் வழிபடு தெய்வத்தின் திருவருளுக்குப்

பாத்திரமாகி இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையானவற்றை எவ்வித பிரார்த்தனையோ வேண்டுதலோ இன்றி அடைவதுடன் 'மறுபிறவி' என்று ஒன்று இல்லாத நிலையையும் பெறுகிறான்.

உபாஸனை விஷயத்தில் ஈடுபடுவோர் முக்யமாக குருநாதரைத் தாம் உபாஸிக்கும் தெய்வமாகவே பாவித்து உபாஸிக்க வேண்டும். இதில் விதிவிலக்கு இல்லை. பிழை செய்யின் மன்னிப்பும் இல்லை என்பதையறிந்து கொள்ள வேண்டும். "பூஜை ஜபம் செய்வது நம் கடமை" என்ற உணர்வுடன் சிரத்தை (முழுநம்பிக்கை)யுடன் எவ்வித பலனையும் எதிர்பாரர்து பக்தியுடன் வழிபடும் ஸாதகன் காலப்போக்கில் அவன் கற்பனையும் செய்திருக்காத அரிய நன்மைகளையும், பெருமைகளையும், எதிர்பாராதபடி பெற்றுத் திகழ்வான். ஆனால் சிரத்தைக் குறைவும் குருநாதரிடம் அவமதிப்பும், தேவதா விச்வாஸக் குறைவும் அலட்சியமும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனையும் தெரிந்துகொண்டு குறைவின்றி வழிபடுவோர் இகபர நலன்களைப் பெறுவது நிச்சயம்.

நமது நூலகத்தில் 7147 எண்ணுள்ள இந்த "கணபதி விதானம்." என்னும் சிறு நூலை வெளியிடும் முகமாக உபாஸனையின் அரிய பொது அம்சங்களைத் தமிழில் கூறுவது பலருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்துடன் இதனைப் பதிப்பிக்க ஊக்கமளித்த இந்நூலக இயக்குனரும் (பொ.) தஞ்சை மாவட்ட ஆட்சியருமான திரு. T. ஷண்முகராஜேஸ்வரன் இ. ஆ. ப. அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'கணபதி விதானம்' நூலைப் பதிப்பிப்பதுடன் மந்த்ர சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள உபாஸனையின் உட்கருத்துக்களையும் வழிமுறைகளையும் பலரும் அறிந்துகொள்ள

உதவும் வகையில் தமிழில் எழுதுவதற்கு ஊக்கமளித்த நூலக நிர்வாகப் பொறுப்பில் உள்ள திரு. A. பஞ்சநாதன் அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சிறுநூலைப் பிழையின்றி அச்சிட்டுக்கொடுத்த நூலக அச்சகத்தின் அனைத்துப்பிரிவுப் பணியாளர்களுக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்
02—03—93

தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,
மேநிலை சம்ஸ்கிருத பண்டிதர்.
ஸரஸ்வதி மகால் நூலகம்.



கணபதி உபாசனை அல்லது மஹாகணபதி விதானம்

வேதங்களும் அவற்றின் வழி வந்த நூல்களும் அனைத்தும் அறம், பொருள், இன்பம் ஆகிய இம்மைப் பொருள்களையும், வீடு எனும் மறுமைப் பொருளையும் ஜீவர்கள் பெறுவதற்கான வழிமுறைகளைக் கூறவே செய்கின்றன. பூர்வ புண்யப் பயனால் சிலர் அவற்றைப் பெறுகிறார்கள். அவற்றின் வழி நடந்து நற்பேறு பெறவும் செய்கிறார்கள். ஒரு சிலர் அவற்றால் நிச்சயம் பலன் இல்லை என்ற 'அப்பிரதிபத்தி' எண்ணத்தாலும், மற்றும் சிலர் பலன் கிடைக்குமா கிடைக்காதா என்ற 'விப்ரதிபத்தி' எண்ணத்தாலும், வேறு சிலர் நாம் இவற்றைப் பின்பற்றப்போய் ஏதாவது பாதக விளைவுகள் வந்து இதுவரை உள்ள நிலைக்கும் பாதகம் விளைந்து விட்டால் ... என்ற 'அந்யதாபிரதிபத்தி' எண்ணத்தாலும் அவ்வுபாயங்களை நாடுவதில்லை. இவர்களும் உண்மையில் சுகத்தைப் பேரின்பநிலையை நாடுகிறவர்கள்தான். அவர்களின் கர்மப்பயன் அவர்களைத் தாமதமாக அந்த உபாயங்களை அணுகச் செய்யும், அவ்வளவே. பக்தி, ஞானம், கர்மா எனப்படும் அவ்வழிவகைகளில் கர்மா, பக்தி இரண்டும் கலந்த வழியான உபாஸனா மார்கம் விரைந்து நற்பயன் அளிப்பதாகும்.

தெய்வம் ஒன்றே என்பதில் ஐயப்பாடு இல்லை. அது ஒன்று என்னும் நிலையை உணருவதற்கு உதவும் வகையில் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு தெய்வத்தின் பல அம்சங்கள் பல தெய்வங்களாக போதிக்கப்படுகின்றன. அந்த ஒரு தெய்வத்தின் ஆற்றலை, இயல்பினை உணருவது

எளிதல்ல என்பதால் அந்த நிலையை எட்டுவதற்குத் துணை புரியும் வகையில் முதலில் தெய்வத்தைப் பற்றிய உணர்வினை ஊட்டி அதனை நிலைப்படுத்தும் முகமாகவே பல தெய்வ வழிபாடு அமைந்தது.

அரசாங்க அலுவலர்களை எடுத்துக்கொள்வோம். ஒருவர் தமது ஒரு சிறு காரியத்தை முடித்துக் கொடுக்க ஒரு அலுவலக கீழ்நிலை அலுவலரிடம் சென்று புகழ்ந்து பேசுகிறார். அவர் ஒருவராலேயே அதனை நிறைவேற்ற முடியும் என்பது போல் பேசியும், பழங்கள், பிஸ்கட்டுகள் போன்ற பொருள்களைக் கொடுத்தும் மகிழச் செய்து காரியத்தை சாதிக்கிறார். அவருக்கு மேல் நிலையில் உள்ள வர்கள் அவருக்குத் தெரிந்தவராக இருந்துவிட்டால் கீழ் நிலையில் உள்ள அந்த அலுவலரை அவர் விட்டுவிடுகிறார். இப்படியே ஒரு வட்டத்தில் தலைமை அலுவலர், மாவட்டத் தலைமை அலுவலர் பிரதேசத் தலைமை அலுவலர் நாட்டின் தலைமை நிலையில் உள்ளவர் வரை யில் சிந்தித்துப் பார்த்தால் ஜனாதிபதியாக உள்ளவருக்கு அடுத்த பெரிய மேல்நிலை அதிகாரி இல்லை யென்ற நிலை யில் அவருக்கு நெருக்கமானவர் என்று ஏற்பட்டுவிட்டால் அவருக்கு எதிரே பிற அலுவலர்கள் அதிகாரமற்றவராகி விடுகிறார்கள் என்பதால் அவருடைய வேலைகள் வேண்டுகோள் இல்லாமலேயே நிறைவேறிவிடுகின்றன. அடிநிலையில் உள்ள அதிகாரிகள் தாமாகவே அவரை நாடி வந்து அவருக்குத் தேவையானது ஏதும் உண்டோ என்று கேட்டும், கேட்காமலும் அவருடைய காரியங்களை நிறைவேற்றிவிடுகிறார்கள் என்பதுடன் அவரையே பெரிதாக மதிக்கவும் தலைப்படுகிறார்கள். ஜனாதிபதி அவருக்கு மிகவும் வேண்டியவராகிவிட்டார் என்பதற்காகப் பிற கீழ்நிலை அதிகாரிகளே இல்லை என்றும் சொல்ல இயலாது. அவர்களின் அன்பும் பரிவும் வேண்டியதில்லை யென்றும் சொல்லிவிடமுடியாது. அதே போன்று பர வஸ்து என்ற ஒன்றை நாம் எப்படி எப்படியோ கஷ்டப் பட்டு உணர்ந்துவிட்டாலும் அவருக்கு கீழ் நிலையில்

யாருமே இல்லை என்று கூறவும் முடியாது. அவ்வாறு உள்ள தெய்வாம்சங்களை நாம் வழிபடாமல் விட்டுவிடவும் முடியாது. பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், சதாசிவன் என்பவர்கள் உண்மையில் பரசிவத்தினால் படைக்கப் பட்டவர்களே என்பதற்காக பிரம்மாதியரை நாம் வழிபடாமல் விட்டுவிடுவதில்லை, விடவும் கூடாது. பிரம்மாதியர்தான் உயர்ந்தவர்கள் என்ற நிலையில் இருப் பவர்களும் காலப்போக்கில் வழிபாட்டு நிலை பலமடையும் காலத்தில் இவர்களுக்கும் மேலே ஒன்று உள்ளது என்ற உண்மையை உணரவே செய்வர்.

பரவஸ்துவை — பரசிவத்தை உணர்ந்துவிட்டோம் என்பதற்காக பிரம்மாதியரைப் புறக்கணிக்கவும் கூடாது. பரவஸ்துவாகவே — பரசிவமாகவே ஆகிவிட்ட முக்தி நிலையில் உள்ளவர்களைப் பற்றி நாம் பேசவில்லை. அவர்களின் நிலை வேறு. அந்த நிலைக்கு வரும் வரையில் கீழ் நிலையிலுள்ள பிரம்மாதியர் அவசியம் வேண்டும். ஏணியின் மேல் படிக்கு வரும்வரையில் அடுத்துள்ள கீழ் நிலையிலுள்ள படிகள் அவசியம் தேவையல்லவா!

திருமாலையே பரசிவமாக வழிபடுகிறவர்களும் உண்டு. இதுபோல் சிவபெருமானே, பராசக்தியே, சூரியநாராயணனே, கந்தப்பெருமானே பரசிவம் என்று வழிபடுகிறவர்களும் உள்ளனர். "மஹா கணபதி" எனும் தெய்வத்தையே எல்லாவற்றிற்கும் மேலான பரசிவமாக — பரமார்த்த வஸ்துவாக வழிபடும் மரபினரும் உளர். இந் நிலையில் உள்ள மரபினர்கள்தான் வைஷ்ணவர், சைவர், சாக்தர், ஸௌரர், கௌமாரர், காணபதர் எனப்படு கிறார்கள். அம்மரபுகள் வைஷ்ணவம், சைவம், சாக்தம், ஸௌரம், கௌமாரம், காணபதம் எனப்படுகின்றன.

வைநாயகம் காணபதம் எனும் மரபினர், விநாயகர்— வி - நாயகர் விசிஷ்ட - நாயகர்தாம் எல்லோரிலும் உயர்ந்த நாயகர் — தலைவர் எனும் பொருள் கூறுவர்.

இவ்விதமே கணேசர் — கண - ஈசர், கண - பதி கணங்களின் — பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், சதாசிவம் எனும் ஐந்து ப்ரம்மங்களின் ஈசர் தலைவர் என்றும் கூறுவர். மஹா கணபதி எனப்படுகிறவரும் இவரே.

கணேசரை - கணபதியை உபாஸிப்பது எளிது. மிக மிக எளிது. மண்ணை அல்லது மஞ்சளைப் பிடித்து வைத்து அருவ உருவமாகவும், யானைத் தலை மனித உடல் என்ற விசித்ர உருவமாகவும் வழிபடலாம். இதேபோல் மண்டலத்தின் நடுவிலும் (யந்த்ர மத்தியிலும்) உபாஸிக்கலாம்.

எந்த வகையிலான தெய்வாம்சத்தையும் பூஜித்து வழிபடுவதற்கு ஆரம்ப நிலையில் ஒலி வடிவமாகவுள்ள மந்த்ரங்கள், மந்திர ஜபங்கள் அவசியம் வேண்டும். [1] மந்த்ர ஜபம் இல்லாமல் பூஜையும் இல்லை. பூஜையின்றி மந்த்ர ஜபமும் இல்லை. இரண்டும் ஒன்றுடன் மற்றொன்று இணைந்ததே.

இதனால்தான் எந்த ஒரு மந்திர ஜப சமயத்திலும் "லமித்யாதி பஞ்ச பூஜை" என்ற பூஜைப் பகுதி தவறாமல் இணைக்கப்பட்டிருக்கிறது. பஞ்ச பூஜை செய்த பிறகு தான் ஜபமும் செய்யவேண்டும் என்ற வழிமுறையும் அமைந்தது.

மந்த்ரம் என்பதாவது [2] எந்த ஒலி நினைப்போரைக் காப்பாற்றுகிறதோ அல்லது நினைக்கப்படுவதால் பாதுகாப்பு ஏற்படுகிறதோ அந்த ஒலி மந்திரம் எனப்படும். மந்த்ர ஒலிகள் யாவுமே அகாரம் முதற்கொண்டு

---

1. जपान्ते पूजयेद्देवं पूजान्ते च जपेन्मनुम् ।

2. मन्तारं त्रायते यस्मान्मन्त्र इत्यभिधीयते ।
   मननात् त्रायत इति वा मन्त्रः ।

க்ஷகாரம் வரையிலான ஒலிகள். அவையாவுமே மந்திரங்களாகும். அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலான ஒலிகள் "மாத்ருகாக்ஷரங்கள்" எனப்படும். இந்த மாத்ருகாக்ஷரங்கள்தான் ஒன்றோடொன்று இணைந்து பலவகை மந்த்ர ஸ்வரூபங்களாகின்றன. அவ்வொலிகளை வாயினால் சொல்ல, சரியாக— சொல்ல வேண்டிய முறைப்படி சொல்ல இயலாது என்பதால்தான் மனதால் நினைக்குமாறு சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவ்வொலி வடிவமான மந்த்ரங்களை மனதால் தொடர்ந்து லக்ஷக்கணக்கில் "ஆவர்த்தி" (திரும்பத் திரும்பச் சொல்வது) செய்வதினால் ஸித்தி ஏற்படுகிறது. அந்த மந்த்ரத்திற்கான தெய்வத்தின் திருவருளையும் பெறமுடிகிறது.

[1]மந்த்ரங்கள்: புருஷ தேவதா மந்த்ரங்கள் மனு என்றும் ஸ்த்ரீ தேவதா மந்த்ரங்கள் வித்யை என்றும் இரு வகை உண்டு. இதுதவிர [2]ஹூம் — ப்பட் என்ற ஒலியைக் கொண்டவைகள் புருஷ மந்த்ரங்கள் என்றும் ஸ்வாஹா, வௌஷட் என்றும் ஒலியுடன் உள்ள மந்த்ரங்கள் ஸ்த்ரீ மந்த்ரம் என்றும், நம: ஹூம் என்ற ஒலியுள்ள மந்த்ரங்கள் நபும்ஸகம் என்றும் சொல்லப்படுகிறது. மந்த்ரங்களில் 'ச்சின்னம்' ருத்தம். சக்திஹீனம் பதிரம் முதலான 49 தோஷங்கள் உண்டு என்பர். மந்த்ர தோஷங்களை நீக்கும் முறைகளும் தந்த்ர நூல்களில் கூறப்பட்டுள்ளன.

மந்த்ர ஸ்வீகாரம்: மந்த்ரங்களை ஸ்வீகரிப்பது எப்படி? மந்த்ரங்களை புஸ்தகங்களில் எழுதப்பட்டுள்ளதைப் பார்த்துப் படித்து ஜபம் செய்வது முற்றிலும் தவறு.

---

1. मनुर्विद्येति च द्वेधा पुंस्त्रीदेवक्रमात्पुनः ।
त्रिविधा इति विज्ञेया पुंस्त्रीक्लीबविभेदतः ॥

2. हुंफडन्ताः फडन्ताश्च पुमांसः परिकीर्तिताः ।
स्वाहान्ता वौषडन्ताश्च स्त्रीमन्त्रा इति कीर्तिताः ।
नमोऽन्ताश्च हुमन्ताश्च क्लीबमन्त्राः प्रकीर्तिताः ॥

தீக்ஷா முறைப்படி ஏற்பதுதான் சிறந்தது. தீக்ஷா முறை பற்றி எழுத முற்படின் அதுவே தனி நூலாகிவிடும் என்பதால் பிற நூல்களில் கண்டு தெளியலாம். குல வழிப்படி மந்த்ரங்களைப் பெறுவதும் உண்டு. சில. குரு வழியாகத்தான் ஏற்கத்தக்கவை. குரு முகமாக இல்லாமல் மந்த்ர ஜபம் செய்வதும் தாற்காலிக தீவிர ஆர்வமுடன் வேறு வேறு முறைகளில் கற்றுக்கொள்ள முனைவது தவறாகவே முடியும்.

தகுந்த குருநாதரைத் தேர்வு செய்து அவரிடமிருந்து முறைப்படி மந்த்ரங்களைப் பெறுவதுதான் சிறந்தது. நல்ல குருநாதர் யார் என்பது பற்றி சாஸ்திரங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இதுபோல் உத்தம சிஷ்யன் யார், எப்படிப்பட்ட சிஷ்யனுக்கு மந்த்ரம் உபதேசிக்க வேண்டும் என்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது. அது பற்றிக்கூற முற்படின் நூல் விரிவாகும் என்பதால் விரித்துக் கூற இயலவில்லை.

மந்த்ர – உபாஸனையில் [1]குருவிற்கும் சிஷ்யனுக்கும் பல லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன. அவ்வகையிலான சத்குரு தன்னை நாடிவரும் சிஷ்யனை [2]நன்கு பரீக்ஷை செய்து "உபதேசிக்கப்படும் மந்த்ரத்தினை இம்மாணவன் சிரத்தையுடன் ஜபம் செய்து சித்தி பெறுவான" என்று உறுதி செய்துகொண்டு மந்த்ர உபதேசம் செய்ய வேண்டும்.

---

1. शुद्धान्तःकरणः शुद्धवंशजः सत्यभाषणः । जितसर्वेन्द्रियः शान्तो दान्तोऽविक्लवमानसः । सर्वशास्त्रार्थकुशलः तत्सारज्ञोऽरिषड्जयी...
 - शिष्योऽपि शास्त्रमार्गोक्तः सूरिभिर्ग्राह्य ईरितः । सत्कुलोत्थः शुद्धचित्तः पुरुषार्थेप्सुरञ्जसा । लब्धवेदस्तु कुशलः मितृमातृहितप्रदः । (सर्वमन्त्रोपयुक्तपरिभाषा M.S. 7143, T M.S.S M.L. Tanjore)
2. अपरीक्षितशिष्याय नैव दद्यात्कदाचन ॥
3. न गुरोरधिकं न गुरोरधिकं न गुरोरधिकं शिवशासनतः ॥

அதே போன்று "இவ்வாசிரியர் தேவதா உபாஸனை செய்து சித்திகளைப் பெற்றவர். இவரை நாடி மந்த்ர உபதேசம் பெற்றால் நாம் கட்டாயம் சித்தி பெறுவோம்" என்ற நம்பிக்கையுடன் மாணவன் குருநாதரை அணுக வேண்டும். எக்காலத்திலும் குரு — சிஷ்ய பாவத்திற்கு பங்கம் வருதல் கூடாது. ஆசிரியருடன் சம ஆசனத்தில் அமருதல் கூடாது. ஆசிரியர் நிற்க, மாணவன் அமர்ந் திருக்கலாகாது. மந்த்ர உபதேசம் பெற்ற மாணவன் தம் குரு. உபாஸிக்கும் தெய்வம், மந்த்ரம் இம் மூன்றையும் ஒன்றாக பாவித்து தன்னையும் ஐக்யப்படுத்திக்கொண்டு உபாஸிக்கவேண்டும் என்பதால் குரு சிஷ்ய ஸம்பந்தத்திற்கு எக்காலத்திலும் பாதகம் ஏற்படுவதற்கு இடம் தரலாகாது. "ஆகாசபைரவ கல்ப்பதந்த்ரம்" எனும் நூல் "குருவிற்கு மேற்பட்டது எதுவுமில்லை" என்று [1]மும்முறை கூறுவதன் பொருள் இதுவே.

நல்ல குருநாதரிடம் தீக்ஷை முறையிலோ வேறு வகை யிலோ மந்த்ரத்தைப் பெற்று நித்யானுஷ்டானத்தை வழு வாமல் செய்து வருதல் வேண்டும். பெற்ற மந்த்ரத்தை ஒருநாள்கூட விட்டுவிடாமல் ஜபம் செய்துவரவேண்டும். நினைத்தபோது ஜபம் செய்வதும். "எம் குருநாதர் அப்படி யெல்லாம் தவறாக நினைக்கமாட்டார்" என்று தமக்குத் தாமே பொய்யான சமாதானம் செய்துகொண்டு அலட்சிய மனப்பாங்குடன் இருத்தலும் தீராத ஏழ்மையைத் தந்து விடும்.

தினந்தோறும் சூரியன் உதிப்பதற்கு முன்பாகப் படுக்கையைவிட்டு எழுந்து குருநாதரை நினைத்து வணங்கி விட்டு காலைக் கடன்களையும் ஸ்நானத்தையும் விதி முறைப்படி செய்தபிறகு தூய ஆடை அணிந்து தம் குலாசாரப்படி விபூதி. திலகம் அணிந்து தந்திர நூல்களில் கூறப்பட்டுள்ளவாறு நல்லதோர் ஆசனத்தில் அமர்ந்து குருநாதனை வணங்கிவிட்டு ஜபம் செய்யத் தொடங்க

---

1. न गुरोरधिकं न गुरोरधिकं न गुरोरधिकं शिवशासनतः ॥

வேண்டும் (அமர்ந்து ஜபம் செய்வதற்கான ஆஸன வகைகள் தந்திர நூல்களில் கூறப்பட்டுள்ளன. ஆசிரியரின் அறிவுரைப்படியும் உரிய ஆஸனத்தில் அமரலாம்)

குருவந்தனம்

'குருபாதுகா மந்த்ரம்' என்ற ஒன்று உண்டு. அது மந்த்ரத்தை தீக்ஷா முறைப்படி பெறுகிறவர்களுக்கு மட்டும் உரியது. பின்வரும் மந்திரத்தைத் தன் தலைக்கு மேல் அஞ்ஜலி செய்துகொண்டு சொன்னாலே போதுமானது.

"நமஸ்தே நாத பகவன் சிவாய குரு ரூபிணே ।
வித்யாவதாரஸம்ஸித்யை ஸவீக்ருதாநேகவிக்ரஹ ॥
ஸர்வாவயவபேதேன நமஸ்குர்யாமஹம் ஸதா ।
ஸதா மச்சித்த(தே) ஏவாத்ர விதேஹி பவதாஸனம் ॥
ஸ்ரீ பவந்தம் ப்லவமிவ ப்ராப்தவானஸ்மி அதஸ்ச்ச மாம் ।
அனுக்ருண்ணன் உத்தரேதி குரும் விக்ஞாபயேத் ஸுதீ: ॥

பிறகு மந்த்ர ஜபம் தொடங்கவும்.

தத்வசோதனம்

பஞ்ச பாத்திரத்திலிருந்து உத்தரணியால் தூய நீர் எடுத்து குவித்த வலது கையில் விட்டுக்கொண்டு பின்வரும் மந்திரங்களைச் சொல்லி அருந்த வேண்டும்.

ஓம் அல்லது ஔம் ஆத்மதத்வம் சோதயாமி நம: ஸ்வாஹா
" " வித்யாதத்வம் " "
" " சிவதத்வம் " "
" " ஸர்வதத்வம " "

பிறகு மந்த்ர ஸந்த்யாவந்தன முறைகள் செய்யப்பட வேண்டியதுண்டு. அவற்றைப்பற்றி குருநாதரிடம் கேட்டறிந்து அதன்படி செய்து முடித்தவுடன் ஜபம் செய்யத் தொடங்கவேண்டும்.

ஸ்ரீ மஹா கணபதி மூலமந்த்ரம் இங்கு எழுதப் பட்டாலும் அதனை விதி முறைப்படி குருமுகமாகப் பெற்ற பின்னர்தான் ஜபம் செய்வது பலன் தருவதாக இருக்கும் என்பது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது

ஸ்ரீமஹா கணபதி மூல மந்த்ரம்

இம்மந்திரத்தைக் கண்டவர் 'கணகர்' எனும் ரிஷி யாவர். ஒவ்வொரு மந்த்ரத் (ஒலி சமூகத்)திற்கும் தனித் தனி 'சந்தம்' உண்டு. அதனைச் 'சந்தஸ்' என்பர். அதற் கேற்ப இந்த மந்திரத்திற்கானச் சந்தஸ் 'நிச்ருத்காயத்ரீ' என்பதாகும். இம்மந்திரத்திற்கான தெய்வம் ஸ்ரீமஹா கணபதியாவார். தவிர, பீஜம்—சக்தி—கீலகம் என்றுமீ உண்டு. பீஜம் விதை, சக்தி, திறன் — கீலகம் — மந்த்ர தோஷங்களை நீக்கம் செய்வது). பிறகு இன்ன பயன் கருதி ஜபம் செய்கிறோம் என்பதனை 'விநியோகம்' என்று சொல்வர். [1]மந்த்ரத்தின் ரிஷியைக் குறிப்பிட வலது கட்டை விரலை மடக்கி மீதி நான்கு விரல்களுடன் நீட்டிய கையைத் தம் உச்சந்தலைமீது வைக்கவேண்டும். ரிஷி என்பவர் குருவாகிறபடியால் தலையால் அம்மந்திரத்தை ஏற்கும் முகமாக இவ்வாறு செய்தல் வேண்டும். (சந்தம்)— ச்சந்தஸ் என்பது வாயால் சொல்லப்படுவது என்பதால் வாயின் மேற்புறம் (கையில் எச்சில் படாதவாறு) அதே முறையில் கையை வைத்தல் வேண்டும். தெய்வம் குடி யிருக்குமிடம் இதயம் என்பதால் இதயம் இருக்கும் பகுதி யான [2]நடுமார்புப் பகுதிக்குமேல் இருகைகளின் கட்டை

---

1. ऋषिर्गुरुत्वात् शिरसैव धार्यः
 छन्दोऽक्षरत्वाद् रसनागतं स्यात् ।
 धियावगन्तव्यतया सदैव
 हृदि प्रदिष्टा मनुदेवता च ॥

2. நெஞ்சுக்குழிக்கு ஒட்டை அளவு கீழ்ப்புறமும்; தொப்புழ் பகுதிக்கு ஒரு ஒட்டை அளவு மேல்புறமும், (உட்புறம்) இதயம் இருக்கும் இடமாம்.

விரல் தவிர்த்த இரு நான்கு விரல்களையும் வைத்தல் வேண்டும். பீஜம் எனும்போது அதே வலது கைவிரல் களை — வலது ஸ்தனத்தின் மீதும், சக்தி எனும்போது இடது ஸ்தனத்தின் மீதும் கீலகம் எனும்போது நடுமார்பு மீதும் முன் கூறப்பட்ட சுட்டை விரல் நீக்கிய வலது கையின் நீட்டிய நான்கு விரல்களையும் வைத்தல் வேண்டும். 'விநியோக' எனும்பொழுது இருகைகளாலும் தலை முதல் கால் வரை தொடுதல் வேண்டும். இவ் விடத்தில் மூன்று முறை ப்ராணாயாமம் செய்துவிட்டு மாத்ருகாந்யாஸங்கள் செய்யப்படுவதும் உண்டு.

கர - அங்க ந்யாஸங்கள்

இந்த நியாஸ மந்த்ரங்கள் குருநாதர் கூறியபடியே தான் செய்தல் வேண்டும். குருநாதர் கூறியதற்கும், புஸ்தகத்தில் கூறப்பட்டிருப்பதற்கும் வேறுபாடு இருக்கும். இந்த வேறுபாடு பற்றி சிறிதும் ஐயம் கொள்ளவேண்டிய தில்லை. தத்தம் குருநாதர் கூறிய வழியே சிறந்ததென்று முழு நம்பிக்கைகொண்டு அந்த முறையில் செய்வதுதான் சரியாகும்.

நியாஸம் எனும் சொல்லிற்குத் தொடுதல் என்று பொருள். தொடுதலின் பயன்பற்றி சிந்தித்துக்கொண் டிருக்கவேண்டாம். ஆனால் இந்த நியாஸ முறையைச் செய்யாமல் விடுவது தவறு. இது புறத்தூய்மையுடன் உடலின் உட்புறத்தையும் நாடி—நரம்புகள் வழியாகத் தூய்மைப்படுத்துவதாகும். இந்த *கர - அங்கந்யாஸங் களைச் செய்யாமல் விடுத்து நேரடியாக மூல மந்த்ரத்தை ஜபிக்கத் தொடங்கினால் ஜபத்தின் பலன் ஏதும் கிட்டாது என்பதுடன் இடையூறுகளும் சம்பவிக்கும் என்பது தந்த்ர நூல்களின் கருத்து.

---

* जपा अन्यफला मन्त्राः विफला न्यासमन्त्रा ।

கர ந்யாஸங்கள் — 6

இது இரு கை விரல்கள் இரு உள்ளங்கைகள் இரு கைகளின் பின்புறங்கள் இவற்றின் தூய்மை கருதிச் செய்யப்படும். முதலில் இரு ஆட்காட்டி விரல்களின் நுனி கொண்டு இரு கட்டைவிரல்களின் அடிமுதல் நுனி முடிய. பிறகு கட்டை விரல்களின் நுனியாலேயே நடுவிரல்கள் மோதிர விரல்கள் நுனி விரல்களைத் தொட வேண்டும். பின்னர் இடது கையின் உட்புறங்கொண்டு வலது கையின் உட்புறத்தையும், வலது கையின் உட்புறங்கொண்டு இடது கையின் உட்புறத்தையும் துடைப்பது போல் தொட வேண்டும். பிறகு இடது கையின் உட்புறத்தால் வலது கையின் பின்புறத்தையும், வலது கையின் உட்புறத்தால் இடது கையின் பின்புறத்தையும் தொடுதல் வேண்டும். இதுவரைக்கும் கர ந்யாஸங்கள் எனப்படுவது கூறப் பட்டது.

ஹ்ருதயாதிந்யாஸங்கள் — 6

இதில் 1. மார்புப் பகுதி, 2. முன்தலை (உச்சந் தலை), 3. தலையின் பின்புறம். 4. இருதோள்பட்டைகள், 5. மூன்று கண்கள் (வலது இடது கண்களுடன் புருவ நடு விலும் கண் ஒன்று உள்ளது அறிவுக் கண். 6. விரல்களால் கையை அடித்தல் என்று 6 அம்சங்கள் உண்டு.

1. ஹ்ருதயாய நம: என்று சொல்லி வலது கைக் கட்டை விரல் நடு விரல் ஆட்காட்டி விரல் இம்மூன்றாலும் இதயத்தைத் தொடுதல்.

अङ्गुष्ठतर्जनीमध्यमात्रयेण हृदि विन्यसेत् ।

2. சிரஸே ஸ்வாஹா — வலதுகைக் கட்டை விரல் ஆட்காட்டி விரல்கள் கொண்டு முன் உச்சந்தலையைத் தொடுதல்.

अङ्गुष्ठतर्जनीभ्यां तु न्यसेच्छिरसि साधकः ।

3. சிகாயை வஷட் — வலதுகைக் கட்டை விரலால் மட்டும் (பிற விரல்களை மடக்கிக்கொண்டு) பின் தலையைத் தொடுதல்.

अङ्गुष्ठेन शिखायां तु —

4. கவசாய ஹும் — இரு கைகளின் 10 விரல்களினாலும் இடது வலது மாற்றித் தோள்களைத் தொடுதல்.

दशाङ्गुलिभिरंसयोः ।

5. நேத்ர த்ரயாய வௌஷட் — வலது ஆட்காட்டி விரல், நடுவிரல், மோதிர விரல்கள் கொண்டு மூன்று கண்களையும். இடது கண்ணை மோதிர விரலாலும், புருவ மத்தியை நடு விரலாலும், வலது கண்ணை ஆட்காட்டி விரலாலும் தொடவேண்டும்.

तर्जनीमध्यमानामनाम्नीभिर्नेत्रयोर्न्यसेत् ।

6. அஸ்த்ராய ப்பட் வலதுகைக் கட்டைவிரல் ஆட்காட்டி விரல்களைக் கொண்டு தலையைச் சுற்றி இடது உள்ளங்கையில் அடித்தல்.

अङ्गुष्ठतर्जनीभ्यां तु ह्यस्त्रं

திக்பந்தனம்

இது ஜபம் செய்யும் இடத்தில் சாதகனைச் சுற்றிலும் பாதுகாப்பிற்காக பாவனையாகச் செய்யப்படுவது. சொடுக்குப் போட்டுக்கொண்டே தன்னைச் சுற்றிச் செய்தல்.

अङ्गुष्ठतर्जनीभ्यां तु ह्यस्त्रं शीर्षाभितो न्यसेत् ॥

தியானம்

சாதகன் எந்த தெய்வத்தை உபாஸிக்கிறானோ அந்த தெய்வத்தின் ஸகுண மூர்த்தியை தியானம் செய்தல்.

பஞ்சபூஜை

பூஜை செய்துவிட்டு அதன் பிறகுதான் எந்த மந்திர ஜபமும் செய்யப்பட வேண்டும் என்பதால் இவ்விடம் தியானம் செய்யப்பட்ட தெய்வத்திற்குப் பூஜை செய்யப்பட வேண்டும். பூஜைமுறை பல வகைப்படும். 64 உபசாரங்கள் உள்ள பூஜை முறையே மிகவும் சிறந்ததாகும். 32 உபசாரங்கள், 16 உபசாரங்கள், 10 உபசாரங்கள். குறைந்த பக்ஷமாக 5 உபசாரங்களாவது செய்து பூஜை செய்தாக வேண்டும். பூஜை செய்யப்படும்பொழுது அதற்கென கூறப்பட்டுள்ள பொருள்களில் பல கிடைக்காமல் இருக்கும். தயார் செய்ய இயலாமல் இருக்கும். ஆனால் எந்த ஒரு தெய்வ பூஜையிலும் கட்டாயம் இருந்தாக வேண்டிய பொருள்கள் ஐந்து. சந்தனம், புஷ்பம், வத்தி அல்லது சாம்பிராணி புகை, தீபம், நிவேதனம் — (தாம்பூலம்). இவை நீங்கலாக வேறு ஏதும் பூஜைப் பொருள் கிடைக்காவிட்டால் அந்தந்த உபசாரத்தின்பொழுது நல்ல சிவந்த முழு அக்ஷதைகளைப் பயன்படுத்தலாம். சந்தனம், மலர், தூபம், தீபம், நிவேதனம் (தாம்பூலம்) இவை மட்டும் அவசியம் பூஜையில் கட்டாயம் இருந்தேயாக வேண்டும். இதற்கு அக்ஷதை பிரதிநிதியாகமாட்டாது என்பதால் இவை இல்லையேல் பூஜை பயனில்லை. இது பாஹ்ய பூஜை முறையில் உள்ள விஷயமாகும். ஆனால் மந்த்ர ஜப காலத்தில் செய்யப்படும் தியான (மானஸிக) பூஜையில் இந்த சந்தனம் முதலானவை நேரிடையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. மனதில் தியானம் செய்யப்பட்ட தெய்வத்திற்கு மானஸிக பூஜையே செய்யப்பட வேண்டும். எனவே இது இரு கை விரல்களாலும் முத்ரை முறையில் செய்யப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

முதலில் கந்தம் : சந்தனம் சமர்ப்பிக்கும் முகமாக நீட்டிய இரு கைக் கட்டை விரல்களின் நுனியால் இரு கை நுனி விரல்களின் நடுக்கணுவை மட்டுமே தொட

வேண்டும். நுனி விரலின் அடி முதல் நுனி வரை அரைத்தல் போல் செய்தல் கூடாது. இப்படிச் செய்து மானஸிகமாக தெய்வத்திற்குச் சந்தனத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

பிறகு மலர் : நீட்டிய இரு கை ஆட்காட்டி விரல்களின் நுனிகளைக்கொண்டு சுட்டை விரல்களின் நடுக்கணுவைத் தொடுதல் வேண்டும். இது தெய்வத்திற்கு மலர்களை அர்ப்பணிப்பதற்கான முத்ரையாகும்.

தூபம் (நறுமணப்புகை) : நீட்டிய இரு கைக்கட்டை விரல்களின் நுனிகளால் இரு ஆட்காட்டி விரல்களின் நடுக்கணுவைத் தொடுதல் வேண்டும். இது தூப முத்ரை.

தீபம் : நீட்டிய இரு கைக்கட்டை விரல்களின் நுனிகளால் இரு நடுவிரல்களின் நடுக்கணுவைத் தொடுதல் வேண்டும். இது தீப முத்ரை.

நிவேதனம் : நீட்டிய இரு கைக் கட்டை விரல்களின் நுனிகளால் மோதிர விரலின் நடுக்கணுவைத் தொடுதல் வேண்டும். இது நிவேதன முத்ரை.

ஸர்வ உபசார முத்ரை : (தாம்பூல முத்ரை) கை கூப்புதல்; இதுவரையிலான பஞ்சபூஜை உபசாரத்தை தியானிக்கப்பட்ட தெய்வத்திற்குச் செய்துவிட்டு குருநாதனை மனதால் வணங்கிய பிறகு மூல மந்த்ர ஜபம் செய்தல் வேண்டும். இது பிரதி தினமும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை மாற்றாமல் செய்வதுதான் நல்லது. 108, 336,1008 என்று கணக்கிட்டுச் செய்தல் வேண்டும்.

இந்த மந்த்ர ஜபத்தை எண்ணிக்கொண்டுதான் செய்தல் வேண்டும். மேலும், மேல் துண்டின் ஒரு நுனியை இடது தோள் மீது போட்டுக்கொண்டு, மறு நுனியினைத் தன் மடிமீது விழச்செய்து அத்துணியால் கைகளை மூடிக்கொண்டுதான் ஜபம் செய்தல் வேண்டும்.

ஜபத்தை எண்ணும் முறை

கையால் விரல்களை விட்டு எண்ணுவது கூடாது. மாலை கொண்டு ஜபம் செய்வது உகந்ததே. ஆனால், ஒவ்வொரு தேவதைக்கும் தனித்தனி மாலைகள் வைத்துக் கொள்ள வேண்டும். மாலையை அமைப்பதிலும், அமைக்கப்பட்ட மாலையை (ஸம்ஸ்காரம்) சுத்தம் செய்வதிலும் கையாளுவதிலும் பிரச்னைகள் ஏற்பட்டுவிடலாம். மாலையைத் தம்மைத்தவிர தம்குருநாதர் மட்டுமே பார்க்கலாம், தொடலாம். கை தவறிக் கீழே தரையில் விழுந்து விடக்கூடாது. விழுந்தால் மறுபடி ஸம்ஸ்காரம் செய்யப் படவேண்டும். தாமரை மணிமாலை எல்லாவற்றிற்கும் உகந்தது. ருத்ராக்ஷ மணி மாலை சிவ மந்த்ரங்களுக்கு மட்டுமே உகந்தது. தந்தத்தால் (தந்தமணிகளால்) ஆன மாலை மஹா கணபதிக்கும், துளஸி மணிமாலை விஷ்ணு மந்த்ரங்களுக்கும் உகந்தது. மணிமாலையை உருட்டுவதிலும் விரல் நியமம் உண்டு. மாலையைத் தனியாக, பட்டு அல்லது கம்பளத்தால் ஆன பையில்தான் பாதுகாக்கவேண்டும். ஜபம் செய்வதற்கான மாலையைக் கழுத்தில் அணிந்துவிடக் கூடாது. பிறர் காணவும், தொடவும் கூடாது. எனவே மணிமாலை கொண்டு ஜபம் செய்வதில் பிரச்னைகள் ஏற்படலாம் என்பதால் கரமாலை கொண்டு எண்ணிச் செய்வதுதான் நல்லது.

கரமாலை எண்ணும் முறை

மோதிர விரலின் நடுக்கணுவை (இரு கோடுகளுக்கு இடைப்பகுதியை) ஒன்று என்றும் அடிக்கணுவை இரண்டு என்றும் அப்படியே வலமாக நுனி விரலின் அடிக்கணு, நடுக்கணு நுனிக்கணு, மோதிரவிரலின் நுனிக்கணு, நடு விரலின் நுனிக்கணு, ஆட்காட்டி விரலின் நுனி நடு அடிக்கணு முடிய 10 எண்ணாகும். மறுபடியும் ஆட்காட்டி விரலின் அடிக்கணுப்பகுதி (அடிக்கோட்டிற்கும் நடுக்கோட்டிற்கும் இடைப்பகுதி) 11. நடுப்பகுதி (நடுக்கோட்டிற்கும்

மேல்கோட்டிற்கும் இடைப்பகுதி 12. நுனிப்பகுதி 13. நடுவிரல் நுனிப்பகுதி 14. மோதிர விரலின் நுனிப்பகுதி 15. நுனி விரலின் நுனிப்பகுதி 16. நடுப்பகுதி 17. அடிப்பகுதி 18. மோதிரவிரலின் அடிப்பகுதி 19. நடுப்பகுதி 20 என்று ஒருமுறை சுற்றிவரின் 20 எண்ணிக்கையாகும். 10 என்று ஆட்காட்டி விரலின் அடிக்கணுப் பகுதியை எண்ணியதும் நடு விரலைத்தாண்டி 11 என்று மோதிர விரலின் நடுப்பகுதியை எண்ணலாகாது.* நடு விரலின் நடுக்கணுப்பகுதி, அடிக்கணுப்பகுதி இரண்டும் 'மேரு' எனப்படும் அதனைக் கடந்து எண்ணலாகாது. அதே போல விரல்களில் உள்ள குறுக்குக்கோட்டின் மீது விரல் வைத்து எண்ணவும் கூடாது. விரல்களின் நுனியைத் தொட்டுக் கணக்கிடவும் கூடாது. அப்படி எண்ணிச் செய்வது பயனற்றதாகும்.

எனவே, அங்குலிமாலை, (விரல்மாலை) கரமாலையைக் கொண்டு எண்ணும் முறையை நன்கு புரிந்துகொண்டு கைகளை மேல் துண்டினால் மறைத்துக்கொண்டு ஜபம் செய்வது அவசியம். ஒரு சில மகான்கள் 'அக்ஷ' மாலை கொண்டு ருத்ராக்ஷ மாலையல்ல-'அ' தொடங்கி 'ள' முடிய 50 'க்ஷ' மேரு என்பதாகக் கொண்டு மனதிற்குள் எண்ணும் திறன் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு ஜபம் செய்வது மனம் ஒருநிலைப்படவும், மன அடக்கம் ஏற்படவும், விரைவில் மந்திர ஸித்தி ஏற்படவும் உதவும். ஆனால் அலைபாயும் மனம் படைத்தவர்களுக்கும் மனதைத் தம் ஆளுகைக்கு உட்படுத்தாதவர்களுக்கும் இது மிகவும் கடின மாகும். எனவே கரமாலைகொண்டு எண்ணி ஜபிப்பது மிகவும் எளிதானதே.

குறிப்பிட்ட எண்ணிக்கையளவு ஜபம் செய்து முடித்தவுடன். முன் கூறப்பட்டவாறு ஹிருதயாதி நியாஸங்கள்

---

* अङ्गुल्यग्रेषु यज्जप्तं यज्जप्तं मेरुलङ्घितम् ।
पर्वसन्धिषु यज्जप्तं त्रिविधं निष्फलं भवेत् ॥

செய்துவிட்டு 'விமோசம்' தம்மைச் சுற்றித்தானே போட்டுக்கொண்டிருந்த 'கட்டினை' 'அறணை' விலக்கிக் கொள்ள வேண்டும். தலையை அப்பிரதக்ஷிணமாக வலது கட்டை விரல் ஆட்காட்டி விரல்களகொண்டு சொடுக்குப் போட்டவாறு சுற்றல் வேண்டும். இதற்கு 'விமோகம்' என்று பெயர். மறுபடியும் முன்போலவே தேவதா தியானமும், *பஞ்ச பூஜையும் செய்தல் வேண்டும். முதலில் (ஜபம் தொடங்குவதற்கு முன்பாக) தேவதையை தியானித்து பூஜை செய்த பிறகு ஜபம் ஆரம்பிக்கப் பட்டது. ஜபம் செய்த பிறகும் பூஜை செய்ய வேண்டும் என்பதால் பஞ்ச பூஜை செய்யப்படவேண்டும்.

முக்கிய குறிப்பு

சாதகன் தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்து விட்டு சுத்தமான ஆடை திருநீறு முதலானதை அணிந்து பிற 'காலை சந்தி' போன்ற வழிபாடுகளை முடித்துவிட்டு. விதிப்படிக்கான பூஜை செய்யவேண்டும். பூஜையை குருநாதர் அனுக்ரஹித்து அளித்த மூர்த்தியிலோ பீடத் திலோ செய்தல் வேண்டும். பூஜைக்கான இடத்தை சுத்தம் செய்துவிட்டு உரிய முறையில் 64, 32 அல்லது 16 உபசாரங்களுடன் பூஜையைச் செய்து புஷ்பாஞ்ஜலி செய்த பிறகு ஜபம் செய்ய வேண்டும் என்பதுதான் முறை யானதாகும். காலரீதியில் சந்தர்ப்பசூழ்நிலை அனுகூலப் படாத நிலையிலும் ஜபம் செய்யாமல் இருந்துவிட லாகாது என்பதால் தியானம் செய்து பஞ்ச பூஜை முறையி லாவது பூஜித்து ஜபம் தொடங்கவேண்டும் என்று விதி முறை தளர்த்தப்பட்டுள்ளது என்பதையறியவேண்டும்.

ஜப ஸமர்ப்பணம்

மந்த்ர ஜபத்தை, குறிப்பிட்ட எண்ணிக்கை செய்து முடித்துவிட்டு அந்த ஜபத்தினை தேவதையிடமே சமர்ப்

---

* जपान्ते च सपूजयेत् ।

பித்துவிடுதல் வேண்டும். தேவதையின் திருப்தியே ஜபத்திற்கான பலன் எனக் கருதி ஜபம் செய்துவந்தால் காலக்ரமத்தில் ஜபம் சித்தியானதற்கான அறிகுறிகளைக் காணலாம். இதனைச் செய்யும்பொழுது ஒரு மந்திரம் சொல்லப்பட வேண்டியதுண்டு. அதனைப் பின்னால் காணலாம்.

* ஸ்ரீ கணேசாய நம:

மூல மந்த்ரத்தால் மூன்று பிராணாயாமங்கள் செய்துவிட்டு, ... பிராண – ஆயாமம் என்பது பற்றி விரிவாக எழுதப்பட வேண்டியதுண்டு. எனினும் சுருக்கமாகவேனும் கூறப்படுவது அவசியம் என்பதால் விளக்கம் தரப்படுகிறது.

நல்ல ஆசனத்தில் அமர்ந்து முதுகை நிமிர்த்தி வலது கையின் சுண்டு விரல், மோதிர விரல் இரண்டினால் மூக்கின் இடது துவாரத்தினையும், கட்டை விரலால் மூக்கின் வலது துவாரத்தினையும் (மற்ற இரு விரல்களையும் உள்ளடக்கிக் கொள்ளவேண்டும்) பொத்திக்கொள்ள வேண்டும். அது சமயம் மூலமந்திரத்தை மூன்று முறை ஒரே சீராக மனதில் சொல்லியவண்ணம் இடது நாசியால் மெதுவாகச் சீராகக் காற்றை உள்ளிழுத்தல் வேண்டும். (அதுசமயம் சுண்டுவிரல் மோதிரவிரல்களைச் சற்றே தளர்த்திக்கொள்ளவும்) உடனே இடது நாசியை இரு விரல்களால் அடைத்து (வலது நாசி கட்டை விரலால் அடைக்கப்பட்டபடி இருக்கும்) பிராணனை சுவாஸத்தைத் தேக்க – கட்டுப்படுத்த வேண்டும் அது சமயம் 3 முறை மூல மந்திரத்தை மனதிற்குள் சொல்லிக்கொள்ள வேண்டும். சொல்லிமுடித்த பிறகு இடது நாசி இரு விரல்களால் மூடியபடி இருக்க, வலது நாசியை, அடைத்திருக்கும் கட்டைவிரலை மெதுவாகத் தளர்த்தி சுவாஸத்தைச் சீராக

* 'ஸ்ரீ மஹாகணபதி விதானம்' கையெழுத்துச் சுவடி எண் M. S. 7147-ல் உள்ளவாறு ஏமகப்படுகிறது.

வெளிவிடுதல் வேண்டும். இது சமயமும் 3 முறை மூல மந்த்ரத்தை மனதிற்குள் சொல்லிக்கொள்ள வேண்டும். இது சமயமும் 3 முறை மூல மந்த்ரத்தை மனதிற்குள் சொல்லிக்கொள்ள வேண்டும். இது பிராணாயாமம் ஆகும். இவ்வாறு மூன்று முறை பிராணாயாமங்கள் செய்துவிட்டு (மூச்சை உள்ளிழுக்கும்பொழுதும், நிறுத்தும் பொழுதும் வெளிவிடும்பொழுதும் மூலமந்த்ர எண்ணிக் கையை வாரத்திற்கு ஒரு முறை சிறிது சிறிதாகக் கூட்டிக் கொள்ளலாம். ஆரோக்ய நிலைக்கு ஏற்ப கூட்டிக் குறைத்துக்கொள்ளலாம். இந்த ப்ராணாயாம முறையில் தான் "பூத சுத்தி" எனப்படும் உடலின் உட்புறத்தைச் சுத்தி செய்யும் முறை அமைந்துள்ளது. பூஜை முறையில் "பூத சுத்தி" மிக முக்கியமானதொன்றாகும். பிராணாயாமம் பற்றியும் "பூதசுத்தி" பற்றியும் விரிவாகப் பிற நூல்களைப் படித்தும் தக்க சான்றோரையும் குருநாதரையும் அணுகிக் கேட்டும் தெளியலாம்.

அஸ்ய ஸ்ரீ மஹா கணபதி மந்த்ரஸ்ய, கணக ரிஷி: (உச்சந்தலையில்) நிசிருத் காயத்ரீ ச்சந்த: (நாவில்) மஹா கணபதிர் தேவதா (இதயத்தில்) கம் - பீஜம் (மறைவிடத்தில் ஆடைக்கு மேலாக) ஸ்வாஹா சக்திஹி (மூலாதாரத்தில்) ஹ்ரீம் கீலகம் (இரு கால்களில், சதுர்வித புருஷார்த்த ஸித்யர்த்தே ஜபே விநியோக: । (அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்களைப் பெறுவதற்காக இந்த ஜபம் செய்யப்படுகிறது) பிறகு கர ந்யாஸங்கள். (கைகளை சுத்தி செய்து கொள்ளுதல்) [முன்னால் கூறப்பட்டதை நினைவில் கொள்க.]

श्रीगणेशाय नमः । मूलेन प्राणायामत्रयं कृत्वा — ॥

अस्य श्रीमहागणपतिमन्त्रस्य — गणक ऋषिः (मूर्ध्नि) निचृद्गायत्रीछन्दः (जिह्वायां) । महागणपतिर्देवता (हृदये) । गं बीजं (गुह्ये) । स्वाहा शक्तिः (आधारे) । ह्रीं कीलकं (पादयोः) । चतुर्विधपुरुषार्थसिद्ध्यर्थे जपे वि० (नियोगः) ।

ஓம் ஶ்ரீம் ஓம் அங்குஷ்ட்டாப்யாம் நம: ।

(இரு கட்டை விரல்கள்)

ஓம் ஹ்ரீம் ஓம் தர்ஜனீப்யாம் நம: ।

(இரு ஆட்காட்டி விரல்கள்)

ஓம் க்லீம் ஓம் மத்யமாப்யாம் நம: ।

(இரு நடுவிரல்கள்)

ஓம் க்லௌம் ஓம் அநாமிகாப்யாம் நம: ।

(இரு மோதிர விரல்கள்)

ஓம் கம் ஓம் கனிஷ்டிகாப்யாம் நம: ।

(இரு நுனி விரல்கள்)

ஓம் கணபதயே ஓம் கரதலாப்யாம் நம: ।

(இரு உள்ளங்கைகள்)*

ஓம் வர ஓம் கரப்ருஷ்ட்டாப்யாம் நம: ।

(இரு புறங்கைகள்)

ஓம் வரத ஓம் ஹ்ருதயாய நம: । (இதயத்தை தொடவும்)

ஓம் ஸர்வ ஜன [ம்] ஓம் சிரஸே ஸ்வாஹா

(உச்சந்தலையை தொடவும்)

अथ करशुद्धिः । ओं श्रीं ओं अङ्गुष्ठाभ्यां नमः । ओं ह्रीं ओं तर्जनीभ्यां नमः । ओं क्लीं ओं मध्यमाभ्यां नमः । ओं ग्लौं ओं अनामिकाभ्यां नमः । ओं गं ओं कनिष्ठिकाभ्यां नमः । ओं गणपतये ओं करतलाभ्यां नमः । ओं वर ओं करपृष्ठाभ्यां नमः ।

ओं वरद ओं हृदयाय नमः । ओं सर्वजन [नं] शिरसे स्वाहा ।

* இந்தச் சுவடியில் இந்தப்பகுதி புதுமையானதாகச் சொல்லப் படுகிறது. இரு உள்ளங்கைகளையும், இரு புறங்கைகளையும் சுத்தி செய்வதற்கு தனித்தனி மந்த்ரம் சொல்லப்படுகிறது. எனினும் இது விஷயத்தில் மந்த்ரம் உபதேசிக்கும் குருநாதர் கூறும் முறையே பின்பற்றுதற்குரியது. சந்தேகம் வேண்டாம்.

ஓர் மே ஓம் சிகாயை [வஷட்]
(பின் தலையைத் தொடவும்)

ஓம் வச[ம்] ஓம் கவசாய [ஹும்] (இரு தோள்களையும் கை மாற்றித் தொடவும்)

ஓம் ஆனய ஓம் நேத்ர த்ரயாய (வ;[வௌஷட்]
(மூன்று கண்களைத் தொடவும்)

ஓம் ஸ்வாஹா ஓம் அஸ்த்ராய [ப்பட்] கை தட்டவும்.

வேறு வகையும் உண்டு.

ஓம் நம: (தலையில்)

[ஓம்] ஶ்ரீம் நம: (புருவங்களின் இடையில்)

[ஓம்] ஹ்ரீம் நம: (இரு கண்களிலும்)

[ஓம்] க்லீம் நம: (இரு காதுகளிலும்)

[ஓம்] க்லௌம் நம; (இரு காது துவாரங்களிலும்)

[ஓம்] கம் நம: (வாய்ப்புறத்தில்)

[ஓம்] கணபதயே நம: இதயத்தில்)

[ஓம்] வர நம: (வலது கையில் இடது கையால்)

[ஓம்] வரத நம: (இடது கையில் வலது கையால்)

[ஓம்] ஸர்வஜனம் நம: [தொப்பூழில்]

ओं मे ओं शिखायै [वषट्] । ओं वश [म्] ओं कवचाय [हुम्] । ओं मा [आ]नय ओं नेत्रत्रयाय [वौषट्] । ओं स्वाहा ओं अस्त्राय [फट्] । अन्यश्च — [ओं] नमः शिरसि । [ॐ] श्रीं नमः भ्रूमध्ये ओं ह्रीं नमः नेत्रयोः । [ओं] क्लीं नमः श्रोत्रयोः [ओं] ग्लौं नमः नासापुटयोः । [ओं] गं नमः वक्त्रे ॥

[ओं] गणपतये नमः (हृदये)

[ओं वर नमः दक्ष ह (स्ते)

[ओं] वरद नमः वाम ह (स्ते)

[ओं] सर्वजनं नमः (नाभौ)

[ஓம்] மே நம: (மறைவிடத்தில் ஆடைக்கு மேலாக)

[ஓம்] வசம் நம: (வலது காலில்)

[ஓம்] ஆனய நம: (இடது காலில்)

[ஓம்] ஸ்வாஹா நம: (கழுத்தில்)

(இதுவரையில் மந்த்ர பாத ந்யாஸங்கள்)

பிறகு மூலமந்த்ரம் முழுவதையும் சொல்லி இரு கைகளாலும் தலை முதல் கால் வரையில் நியாஸம் செய்யவும். அல்லது மூலமந்த்ரம் முழுவதையும் சொல்லியவாறு மாத்ருகா நியாஸ இடங்களிலும் செய்யலாம்.

குறிப்பு

நியாஸங்கள் செய்யும் விஷயத்தில் மேலும் பல விபரங்கள் உண்டு. கர ந்யாஸங்களும் ஹ்ருதயாதி நியாஸங்களும் கட்டாயமானவை மந்த்ரபாத ந்யாஸம் இங்கு சொல்லப்பட்டுள்ளது. இது போல் ஒவ்வொரு எழுத்தையும் சொல்ல ந்யாஸங்கள் உண்டு. அவை செய்யப்படுவது நல்லதே. ஆனால் யந்த்ர பூஜை ஆவரண பூஜை செய்யப்படும் காலத்தில் கட்டாயம் செய்யப்பட வேண்டும்.

இந்த ந்யாஸங்களுக்கான மந்த்ரங்கள் சொல்லப்படுவதற்கு முன்பாக 'ஓம்' பிரணவம் கட்டாயம் சொல்லப்பட

[ओं] मे नमः (गुह्ये)

[ओं] वशम् नमः (दक्षिणपादे)

[ओं] आनय नमः (वाम पादे)

[ओं] स्वाहा नमः (कन्धरे)

इति [मन्त्र] पादन्यासः ॥

सर्वमन्त्रेण व्यापकं [कुर्यात्] अथवा सर्वमूलेन मातृकास्थानेषु कुर्यात् ॥

வேண்டும் என்பதனால் சுவடியில் சொல்லாமல் விடப்பட்டிருந்தாலும் சேர்க்கப்பட்டுள்ளது மேலும் ந்யாஸங்கள் (தொடுதல்) செய்யப்படும் சமயம் வலது புறம் முதலிலும் இடது புறம் அடுத்தும் செய்யப்படவேண்டும் தவிரவும், பெரும்பாலும் வலது கை ஆட்காட்டி விரலையும் கட்டை விரலையும் சேர்த்துக்கொண்டு இந்த ந்யாஸங்களைச் செய்யவேண்டும்.

ஆரம்பத்தில் ரிஷி, சந்தஸ், தேவதா ந்யாஸம் சொல்லுமிடத்திலும் பீஜம், சக்தி, கீலகம் முதலான ந்யாஸங்கள் சொல்லுமிடத்திலும் நாவில்' என்று உள்ள தால் நாவைத் தொட்டால் கை அலம்பப்படவேண்டும். ஆனால் எழுந்திருத்தல் கூடாது என்பதால் பாவனையாக வாய்ப்புறத்தை மனதால் நாவைத் தொடுவதாக எண்ணிச் செய்யவும். மறைவிடம் மூலாதாரம் எனும்போதும் அணிந்துள்ள ஆடைக்கு மேலாகத்தான் தொடவேண்டும்.

மாத்ருகா நியாஸம் என்பது அந்தர் மாத்ருகா, பஹிர் மாத்ருகா நியாஸம் என்று இரு வகைப்படும். ஓம் அம் நம:, ஓம் ஆம் நம: ஓம் இம் நம: + ஓம் க்ஷம் நம: என்று புற உடலின் 51 இடங்களில் நியாஸம் செய்யப்பட வேண்டியதுண்டு. உடலிற்கு தூய்மை ஊட்ட இந்த ந்யாஸ முறைகள் செய்யப்படவேண்டியதுண்டு. இங்கு கூறப்படின் விரிவாகிவிடும் என்பதால் அது பற்றி பிற நூல்கள் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

மூலம் [மூலமந்த்ரம்]

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே வர வரத ஸர்வ ஜனம் மே வசமானய ஸ்வாஹா.

मूलम् — ओं श्रीं ह्रीं क्लीं ग्लौं गं गणपतये वर वरद सर्वजनं मे वशमानय स्वाहा ।

பிறகு நியாஸம்.

அஸ்ய ஸ்ரீ மஹாகணபதி மந்த்ரஸ்ய கணக ருஷி: । (ஹி) நிச்ருத் காயத்ரீ ச்சந்த: । மஹாகணபதிர் தேவதா, உபாஸ்ய வித்யாங்கத்வேன ந்யாஸே விநியோக: (ருஷி சந்தஸ் தேவதா முதலான ந்யாஸங்களை நினைவு படுத்திக்கொண்டு மறுபடியும் கராங்க ந்யாஸம் வரை செய்துவிட்டு)

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஓம் காம் ஹ்ருதயாய நம:
ஓம் ,, ,, ,, ஸ்ரீம் கீம் சிரஸே ஸ்வாஹா
ஓம் ,, ,, ,, ஹ்ரீம் கூம் சிகாயை வஷட்
ஓம் ,, ,, ,, க்லீம் கைம் கவசாய ஹூம்
ஓம் ,, ,, ,, க்லௌம் கம் நேத்ர த்ரயாய வௌஷட்
ஓம் ,, ,, கம் க: அஸ்த்ராய ப்பட்

இவ்வாறே அங்குஷ்ட்டாப்யாம் நம: என்பது முதல் கரதல கர - ப்ருஷ்ட்டாப்யாம் நம: முடிய செய்துவிட்டு

अथ न्यास: । अस्य श्रीमहागणपतिमन्त्रस्य गणक ऋषि: । निचृद्गायत्री छन्द: । महागणपतिर्देवता । उपास्यविद्याङ्गत्वेन न्यासे विनियोग: । ऋष्यादिकं स्मृत्वा । मूर्धादिषु विन्यस्य कराङ्गन्यास माचरेत् ।

ओं ३ [ओं श्रीं ह्रीं क्लीं] ओं गां हृदयाय नम:
,, ,, ,, ,, ,, श्रीं गीं शिरसे स्वाहा
,, ,, ,, ,, ,, ह्रीं गूं शिखायै वषट्
,, ,, ,, ,, ,, क्लीं गैं कवचाय हुं
,, ,, ,, ,, ,, ग्लौं गं नेत्रत्रयाय वौषट्
,, ,, ,, ,, ,, गं ग: अस्त्राय फट् ।
एवमेवाङ्गुष्ठादिषु विन्यस्य ।

தியானம் செய்யவும். இங்கு கர ந்யாஸங்களில் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கம் க: கரதல கரப்ருஷ்ட்டாப்யாம் நம: என்று சொல்லி உள்ளங்கைகள் புறங்கைகள் இவற்றை ஆரம்ப விளக்கத்தில் கூறியுள்ளது போல் செய்ய வேண்டும்.

தியானம்

ஹஸ்தீந்த்ரானனம் இந்துசூடம் அருணச்சாயம்
த்ரிணேத்ரம் ரஸாத்

ஆச்லிஷ்டம் ப்ரியயா - ஸபத்மகரயா ஸ்வாங்கஸ்த்தயா
ஸந்ததம்

பீஜாபூர க்தேக்ஷு கார்முக ருஜா சக்ராப்ஜ பாசோத்பல।
வ்ரீஹ்யக்ர ஸ்வவிஷாண ரத்ன கலச ப்ரோத்யத்கராம்
போருஹ:।

த்யேயோ வல்லபயா ஸபத்மகரயா ச்லிஷ்டோஜ்வலத்
பூஷயா

விச்வோத்பத்தி விநாச ஸம்ஸ்திதிகரோ விக்னோ
விசிஷ்டார்த்த த:

தியான ச்லோகத்தின் பொருள், தியானம் செய்வதற்கு வசதியாகத் தரப்படுகிறது. மஹா கணபதிக்கு வல்லபா கணபதி என்றும் பெயர் உண்டு. கணபதி

ध्यानम् — हस्तीन्द्राननमिन्दुचूडमरुणच्छायं त्रिणेत्रंरसा-
दाश्लिष्टं प्रियया सपद्मकरया स्वाङ्कस्थया सन्ततम् ।
बीजापूर गदेक्षुकार्मुकरुजा चक्राब्जपाशोत्पल-
व्रीह्यग्रस्वविषाणरत्नकलशप्रोद्यत्कराम्भोरुहः ।
ध्येयो वल्लभया सपद्मकरया श्लिष्टोज्ज्वलद्भूषया
विश्वोत्पत्ति विनास संस्थितिकरो विघ्नो विशिष्टार्थदः ॥

इत्यादि ध्यात्वा पूजयित्वा जपेत् ।

என்பவர் சிவபெருமானின் மகனாகக் கூறப்படுவதுண்டு. ஆனால் மஹா கணபதி என்பவர் ப்ரம்மா, விஷ்ணு, சிவபெருமான் முதலானோராலும் வழிபாடு செய்யப்படும் மூல சக்தியுடன் கூடிய மூலப்பொருள். அம்மூவரையும் படைத்து முத்தொழிலில் ஈடுபடுத்திய பரம்பொருள். பராசக்தியுடன் இணைபிரியாதிருப்பவர். இவர் விஷ்ணு சிவபெருமான் முதலானோரின் சக்திகளையும் ஆயுத வடிவில் பெற்றிருப்பவர். இவருக்கு 10 கைகள் உண்டு. வலதுபுறம் அடிக்கையிலிருந்து ஆரம்பித்து மேல்புறம் வரையில், பிறகு இடது கை மேல்புறமிருந்து அடிக்கை வரையில் உள்ள ஆயுதங்கள் ஓம் வடிவில் கூறப்படுகின்றன. மாதுளம்பழம், கதாயுதம், கரும்பு வில், அங்குசம், சக்கரம் (இவ்வைந்தும் வலப்புறக்கைகளில் அடியிலிருந்து மேல் வரையில்) சங்கு, பாசம், நீலோத்பலம், தான்யக்கதிர் தன் ஒரு ஒடிந்த கொம்பு இதைத் தவிர துதிக்கையில் ரத்னங்கள் நிறைந்த கலசம் உண்டு. மேலிருந்து இரண்டு (வலது, இடது) கைகளிலும் உள்ள ஆயுதங்களை மனதால் பார்த்தால்,

சக்ரம்	—	சங்கு
அங்குசம்	—	பாசம்
கரும்பு வில்	—	நீலோத்பலம்
கதாயுதம்	—	தான்யக்கதிர்
மாதுளம் பழம்	—	தன் ஒடிந்த கொம்பு

இவற்றைக்கொண்டு பார்க்கையில் ஸ்ரீ மஹா கணபதியின் மேலிரு கைகளிலும் விஷ்ணுவின் ஆயுதங்களும் அடுத்துள்ள இருகைகளில் சிவபெருமானின் ஆயுதங்களும், அடுத்து மன்மதனுக்கு உரியவையும் அடுத்து பூவராக மூர்த்திக்கு உரியவையும் அடுத்து அடி இரு கைகளிலும் கணபதிக்குரியவையான மாதுளம்பழமும், ஒடிந்த தந்தமும் உள்ளன. மூலமந்திரத்தினையும் நோக்கினால் முதல் பீஜாக்ஷரம் "ஸ்ரீ மகாலக்ஷ்மீ - திருமாலுக்கும், "ஹ்ரீம்"

பார்வதி - சிவபெருமானுக்கும், "க்லீம்" ரதி - மன்மதனுக்கும், "க்லௌம்" பூமி - வராஹமூர்த்திக்கும், "கம்" புஷ்டி-புஷ்டிபதி எனும் கணேசமூர்த்திக்கும் உரியதாக அமைந்துள்ளது.

மேலும், மஹாகணபதிக்கு உரிய பூஜாயந்த்ரத்திலும் முதல் ஆவரணம் எனப்படும் முக்கோணத்தின் எதிரில் லக்ஷ்மீ நாராயணமூர்த்தி ஜோடியும் வலப்புறம் பார்வதி பரமேச்வரர்களும், பின்புறம் ரதி மன்மதர்களும், இடப்புறம் பூ வராகமூர்த்திகளும் நடுவில் ஸ்ரீ வல்லபா மஹா கணபதிகளும் உள்ளனர். ஆகவே இந்த மஹாகணபதி, விஷ்ணு, சிவபெருமான் முதலானோருக்குக் காரணமான ஆதிசக்தி ஆதிசிவமே எனும் உண்மை தெரியவருகிறது. இந்த இணைந்த மூல சக்தியும் மூல சிவமுமே இன்று பலவாறாகப் பேசப்படும் பல தெய்வத் திருவடிவங்களைத் தோற்றுவித்த காரண ப்ரம்மம் என்றாகிறது.

மந்த்ர சித்தி

எந்த மந்திரத்தையும் ஸத்குருவினிடத்திலிருந்து — தீக்ஷா முறைப்படியோ — வேறுவகையிலோ பெற்ற சிஷ்யன் அதனை சித்தி செய்ய முயற்சி செய்யவேண்டும். ஒரு குருவினிடமிருந்து மந்திரத்தைப் பெற்றுவிட்டதாலேயே நமக்கு சித்தி ஏற்பட்டுவிடும் என்றோ தேவதா பிரஸாதம் ஏற்பட்டுவிடும் என்றோ சொல்லமுடியாது. ஏதோ ஒரு சிலர் தம் பூர்வ புண்யப் பயனாக மந்திரத்தை உபதேசம் பெற்றவுடன் சித்தி பெறவே செய்கின்றனர் என்பதற்காக எல்லோருமே அதே நிலையில் தம்மையும் வைத்துப் பார்த்தல் சரியல்ல. ஒரு மந்திரத்தை சித்தி பெறுவது அத்தனை சுலபமல்ல.

இதற்கென ஒரு வழிமுறை சொல்லப்பட்டுள்ளது. இந்த வழிமுறைக்கு "புரச்சரணம்" என்று பெயர். புரஸ் - முன்பாக. பிரயோகங்கள் செய்வதற்கு முன்பாக,

'சரணம' — 'சர்யா' — அனுஷ்டித்தாக வேண்டிய செயல் முறை என்பதால் இதனை அப்பெயரிட்டுச் சொல்லு கிறார்கள். இதனை தினந்தோறும் செய்யவேண்டிய பூஜைக்குப்பிறகு செய்தல் வேண்டும்.

புரஸ்ச்சரணம்

இது 5 அங்கங்களைக்கொண்டது.

1. ஜபம்
2 ஹோமம்
3. தர்ப்பணம்
4. மார்ஜனம்
5. போஜனம்

இவ்வைந்து அங்கங்களைக்கொண்ட 'புரஸ்ச்சரண'த்தை ஒவ்வொரு சாதகனும் செய்தேயாக வேண்டும். அப்பொழுது தான் அந்த தேவதையின் கருணைக்குப் பாத்திரராக முடியும்.

ஜபம்

ஒவ்வொரு மந்திரத்தையும் ஸித்தி செய்வதற்கு ஒரு எழுத்திற்கு ஒரு லக்ஷம் வீதம் ஒரு மந்திரத்தில் எத்தனை எழுத்துக்கள் உள்ளனவோ அத்தனை லக்ஷம் ஜபம் செய்ய வேண்டும் என்பது பொதுவாகச் சொல்லப்படும் விதி. ஆனால் ஒரு மந்திரத்தில் 100 எழுத்துக்கள் இருப்பதாக வைத்துக்கொண்டால் 100 லக்ஷம் 1 கோடி ஜபம் செய்வது கடினம். உதாரணமாக ஸ்ரீ மஹாகணபதி மந்திரத்தில் 28 எழுத்துக்கள் உள்ளன. இதனை சித்தி செய்ய 28 லக்ஷம் ஜபம் செய்யவேண்டும் என்று விதி இருப்பினும் மந்த்ரங் களைக் கண்ட ரிஷிகள் மந்திரங்களைச் சித்தி செய்ய இவ்வளவு புரஸ்ச்சரண ஜபம் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டிருக்கின்றனர் என்பதால் அவ்வாறு விதிக்கப் பட்ட எண்ணிக்கைப்படி ஜபம் செய்யத்தான் வேண்டும்.

இந்த மஹாகணபதி மந்திரத்திற்கு ஒரு சிலர் 4 லக்ஷத்தி 44 ஆயிரத்து 444 ஜபம் செய்ய வேண்டும் என்று கூறு கிறார்கள். வேறு சிலர் 4 லக்ஷம் ஜபம் போதுமானது என்று கூறியுள்ளார்கள். அதற்கேற்ப 4 லக்ஷம் ஜபத்தை யும் செய்வதற்கு முன்பாக சில ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

இத்தனை நாட்களில் 4 லக்ஷம் ஜபம் செய்துவிட முடியும் என்று உடல்நிலை -- சூழ்நிலைகளை அனுசரித்துத் திட்டமிடவேண்டும். 45 நாட்களில் அல்லது 100 நாட் களில் என்று தமது தகுதிக்கு ஏற்ப முதலில் தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்த பிறகு 4 லக்ஷம் ஜபத்தை 45 தினங்களில் முடிக்க இயலும் என்றால் தினந்தோறும் 8888 ஜபம் செய்யவேண்டும். இதனை அதிகப்படுத்தவும் கூடாது. தினந்தோறும் 8888 ஜபம் செய்ய இயலவில்லையென்றாலும் குறைத்துச் செய்யலாம். தவறில்லை. 100 நாட்களில் என்றால் ஒரு நாளைக்கு 4000 ஆவர்த்தி (தடவை) ஜபம் செய்ய வேண்டும். மந்த்ர சித்திக்கான வழிவகைகளைக் கூறும் நூல்களில் விதிவிலக்கு சொல்லப்படவே இல்லையென்பதால் இவ் விஷயமாக நூல்களில் கூறப்பட்டுள்ளவாறு எல்லாவற்றை யும் செய்யவேண்டியதுதான். எவருக்கும் விதிவிலக்கு இல்லை. எவ்விஷயத்திலும் இல்லை.

ஜபம் செய்யும் இடம்

புரஸ்ச்சரண ஜபம் செய்வதற்கு உகந்தவையென சில இடங்கள் நூல்களில் கூறப்பட்டுள்ளன.

* 1. கடற்கரை. மலைமுகடு. கடலில் கலக்கும் ஆற்றின் (வலது) கரை, ஜனங்கள் அதிகம் புழக்கமில்லாத இடம், விஷ்ணு ஆலயம் அல்லது தன் சொந்த வீடு (சொந்த வீடு

---

* 1. समुद्रतीरेऽप्यथवाद्रिशृङ्गे समुद्रगानां सरितां च पारे ।
जपेद्विविक्ते निज एव गेहे विष्णोर्गृहे वा पुरुषो मनस्वी ।।

இல்லாதவர்கள் கூறப்பட்டிருக்கும் பிற இடங்களில் ஒன்றைத் தேர்வு செய்துகொள்ளவேண்டியதுதான்).

* 2. வேறு சில நூல்களில் — மேலே கூறப்பட்டுள்ளவற்றுடன், வில்வ மரத்தின் அடிப்பகுதி, மார்பளவு நீர், பசுக்கள் எருமையல்ல) கட்டுமிடம். அரச மரத்தின் அடிப்பகுதி ஆகியவைகளும் சிறந்தவையே என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு சில நூல்களில் மிகமிக எளிதான முறையில் சித்தி பெறும் வழி வகைகள் இவை என்று கூறப்பட்ட சான்றுகளும் காணப்படும். ஆனால் அவை போலி என்றும், ஜனங்களுக்கு மந்த்ர சித்தி பெறுவதற்கு ஊக்கம் ஊட்டுவதற்காகக் கூறப்பட்டதாக உணருதல் வேண்டும்.

ஜப காலம்

புரஸ்ச்ரண ஜபம் செய்வதற்கு உகந்தகாலமாவது விடியற்காலை ஐந்து மணி முதல் நண்பகல் வரையிலும் ஆகும். அதற்குமேல் ஜபம் செய்வதில் பலன் தருவதாக இருக்காது. 'சிவ கீதை' முதலான வேறு சில நூல்களிலோ புரஸ்ச்சரண ஜபம் செய்வதற்குக் கால நியமம் ஏதும் இல்லை. எப்போதும் ஜபம் செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

நியமம்

புரஸ்ச்ரரண காலத்தில் சாதகன் உணவு முறையில் சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதுண்டு. ஒரு வேளை மட்டுமே உண்ணுதல் வேண்டும். தூயவனாக இருந்துகொண்டு மௌனம், ப்ரம்மசர்யம் மேற்கொண்டு,

---

* 2. अद्रेःशृङ्गे नद्यास्तटे बिल्वमूले हृद्घ्ने तोये गोकुले विष्णुगेहे ।
अश्वत्थाधस्तादम्बुधेश्चापि तीरे स्थानेष्वेतेष्वासीन एकैकशस्तु ॥

ஆசைகள் அற்றவனாகவும், சாந்தமான மனதுடனும், தாமரை மணிமாலையைக் கொண்டு ஜபம் செய்ய வேண்டும். பசுக்களுக்கு புல்பிடுங்கிக் கொடுக்கலாம். ஜபிக்கப்படும் மந்த்ரத்திற்கு உரிய தெய்வத்தையும், துர்கா தேவியையும் வணங்கி தியானித்த வண்ணம் ஜபம் செய்ய வேண்டும். தம்முடைய அன்றாடக் கடன்களைச் செய்து கொண்டும் காலை, நண்பகல், மாலை வேளைகளில் ஸ்நானம் செய்துகொண்டும், உண்ணும் உணவில் பழங்கள், காய்கறிகள், கிழங்குகள், பசும்பால், பசுந்தயிர், மோர், பிக்ஷை எடுத்துக் கிடைக்கும் அன்னம், சத்துமாவு (பச்சரிசியைச் சற்றே வறுத்து சூடு ஆறிய பிறகு இடித்துப் பொடியாக்கப்பட்ட மாவு சத்துமாவு எனப்படும்) இதனை மோருடன் கலந்தும் உண்ணலாம். நாட்டுச் சர்க்கரை அல்லது வெல்லம் கலந்தும், சிறிதளவு ஜலம், தேன் கலந்தும் உண்ணலாம். சுவையாகவும் பசி தாங்கக் கூடியதாகவும் எளிதில் ஜீரணமாகக் கூடியதாகவும், விரத காலத்திற்கு ஏற்றதாகவும் இருக்கும்.

பிக்ஷையெடுத்து உண்பது என்பது இது போன்ற விரத காலத்திற்கு உகந்த ஒன்று என்பதாலும் அகங்காரம் நீங்கும் என்பதுடன் பலர் சமைத்த உணவு என்பதால் நாவடக்கமும் ஏற்படும் என்பதனாலும் சிறந்ததெனக் கூறப்பட்டது. இங்கு கூறப்பட்டதில் ஏதேனும் ஒருவகை உணவினை அமைத்துக்கொள்ளலாம் இந்த புரஸ்ச்சரண காலத்தில் பகலில் தூங்குவது கூடாது. பலருடன் முக்கியமாகக் பெண்களுடன் கலந்துரையாடுதல் வாக்குவாதம் செய்தல் தவிற்கப்படவேண்டும். இரவில் ஜபம் செய்தல் கூடாது. நித்ய பூஜை, இயன்ற அளவு தானம் செய்வது, தெய்வ ஸ்தோத்ரங்களைச் சொல்வது, குரு, தெய்வம் இருவரும் ஒன்றே என்ற அசையாத நம்பிக்கை ஆகிய வற்றை மேற்கொள்ளுதல் நலம். கெட்டோர் சகவாஸம், வெற்றிலை சீவல் (தாம்பூலம்) தரித்தல் ஒரு வேளைக்கு மேல் உண்ணுதல், கவலை, வெறுப்பு, சோர்வு, மனதிற்கு உளைச்சல் தருபவை ஆகியவற்றை விலக்கி சுயநல

சிந்தனை இன்றி நாம் செய்யும் யாவற்றையும் உபாஸிக்கும் தெய்வம் கண்காணிக்கிறது என்ற உணர்வுடன் ஜபம் செய்துவருவதல் வேண்டும்.

ஆசனம்

பட்டு, புலித்தோல், மரவுரி, கம்பளம் தர்ப்பைப் புல்லால் அமைக்கப்பட்ட ஆஸனம் ஆகியவற்றில் அமர்ந்து ஜபம் செய்வது நல்லது. வீராஸனம் சுகாசனம், ஸ்வஸ்திகாஸனம் அமைத்துக்கொண்டு ஜபம் செய்ய நலம் உண்டு. மரப்பலகை மீதோ, புல்வெளியில் அமர்ந்தோ, இலைகள் மீது அமர்ந்தோ, ஜபம் செய்வது கூடாது.

திக்கு

புரஸ்ச்ரண ஜபம் செய்யும் சாதகன் கிழக்கு அல்லது வடக்கு முகமாகவோ அமர்ந்து அல்லது சூரியனை நோக்கியவாறு ஜபம் செய்ய வேண்டும். வீராஸனம், ஸ்வஸ்திகாஸனம் முதலானது பற்றி குரு முகமாகவோ பிற நூல்களைக் கொண்டோ அறியவும்.

ஜபம் செய்யும் முறை

இது மூன்று வகைப்படும். வாசிகம், உபாம்சு, மானஸம் [1]பிறர் காதில் விழும் வண்ணம் உறக்க ஒலியெழுப்பி மந்திர ஜபம் செய்தல் வாசிகமாகும். (இது கூடாது). தன் காதிற்கு மட்டும் எட்டும் வகையில் உதடுகளை அசைத்து காற்று வடிவில் ஒலியெழுப்பி ஜபம்

---

1. उच्चैर्जपोऽधमः प्रोक्त उपांशुर्मध्यमः स्मृतः ।
उत्तमो मानसो देवि त्रिविधः कथ्यते जपः ।
अतिह्रस्वो[वे] व्याधिपीडा अतिदीर्घ[र्घे]स्तपःक्षयः ॥
अक्षराक्षरसंयुक्तं जपेन्मौक्तिकहारवत् ॥

செய்யப்படுவதற்கு உபாம்சு என்று பெயர். உதடுகளை அசைக்காமல் மனதிற்குள் ஜபம் செய்யும் முறை மானஸ ஜபம் என்று பெயர். இதுவே மிக மிக உயர்ந்ததாகும். மந்திர எழுத்துக்களைத் தேவைக்குக் குறைவாகக் குறுக்கியோ அதிகமாக நீட்டியோ சொல்லுதல் கூடாது. ஒரு எழுத்துடன் அடுத்த எழுத்தை முத்துக்கோர்வை போல் இணைத்து உச்சரித்து ஜபிப்பதுவே சிறந்தது.

இவ்வாறு நியமங்கள் மேற்கொண்டு குறிப்பிட்ட எண்ணிக்கை ஜபம் செய்யப்பட்டதும் அதே நாளில் ஜப எண்ணிக்கையில் பத்தில் ஒரு பாகம் ஹோமம் செய்யப் படுவதும் உண்டு. ஜபம் செய்யவேண்டிய எண்ணிக்கை முழுவதையும் நிறைவு செய்துவிட்டு பின்னர் தாமேயோ அல்லது பிற உபாசகர் துணைகொண்டோ செய்யவும் தடையில்லை. [1]ஹோமம் செய்ய வழி இல்லாவிட்டாலோ அல்லது புரஸ்ச்சரணத்தில் எந்த அங்கம் செய்ய இயல வில்லையோ அந்த அங்கத்திற்கு விதிக்கப்பட்ட எண்ணிக் கைக்கு இரு மடங்கு ஜபம் செய்தால் அந்த அங்கம் செய்யப் பட்டதற்கான, பலன் உண்டு. தாந்த்ரிக மந்த்ரங்களை உபதேசம் பெறுவதற்கு எல்லோருக்கும் அதிகாரம் (உரிமை) உண்டு. பக்தியுள்ளோர் அனைவருமே தாந்த்ரிக (தந்த்ர நூல்களில் கூறப்பட்டுள்ள) மந்த்ரங்களைப் பெற்று முறைப்படி ஜபித்துச் சிறப்படையலாம்.

ஹோமம்

புரஸ்ச்சரணத்தில் செய்யப்படும் ஜபத்தின் எண்ணிக்கை யில் பத்தில் ஒரு பங்கு எண்ணிக்கை "த்ரிமது" "அஷ்ட திரவியம்" போன்ற பொருள்களைக் கொண்டு அக்னியில் ஹோமம் செய்தல் வேண்டும். புரஸ்ச்சரணம் செய்வதற் காகத் தேர்வு செய்யப்பட்ட இடத்திலேயே வசதியான ஒரு இடத்தைத் தேர்வு செய்துகொண்டு ஹோம

1. यद्यदङ्गं विहीयेत तत्सङ्ख्याद्विगुणो जपः ॥

குண்டத்தை அங்கு அமைத்திடல் வேண்டும். ஹோமகுண்டம், சதுரச்ரம் (சதுரமாக) அல்லது அரைச்சந்திரன் போன்று அல்லது முக்கோண வடிவில் அல்லது வட்ட வடிவமாக அமைக்கப்படலாம். ஆனால் [1]சதுரவடிவிலான குண்டமே எல்லாவற்றிற்கும் சிறந்தது. 25 அங்குலம் சதுரமாக அமைக்கப்பட்டால் அதே அளவு ஆழம் இருத்தல் வேண்டும். ஒரு அங்குல உயரமுள்ள மேசலையுடன் குண்டத்தை அமைத்துக்கொண்டு பிற உபாஸகர்களின் உதவியுடனோ தாமே தனியாகவோ ஹோமம் செய்யலாம்

ஹோமவிதானம்[2]

வேதம் ஓதுவாராகில், அவர் எந்த வேதப் பிரிவைச் சேர்ந்தவரோ, அந்த வேதத்திற்குரிய 'கிருஹ்ய ஸூத்ர' நூலில் கூறப்பட்ட முறைப்படியும், மற்றோராகில் லௌகிக அக்னியிலும் உபாஸிக்கும் தெய்வத்தைப் பூஜித்து விட்டு ஹோமம் செய்யவேண்டும். இந்த புரஸ்சரண காரியங்கள் யாவும், குருநாதரின் சன்னிதியில் குருநாதரின் ஆதரவு பெற்றுச் செய்யப்படுவது மிகவும் உயர்வானதாகும். பூஜைமுறை, ஹோம விதி பற்றிச் சுருக்கமாகப் பின்னால் தரப்பட்டுள்ளது.

---

1. तेषां मध्ये चतुरश्रं सार्वकामिकम् ।
   तेन तत्सर्वहोमसाधारणम् ।
   तेन तदेव कुण्डं कार्यम् ॥
   प्रपञ्चसार सार सं – 1962 on Page 53

2. स्वगृह्योक्तविधानेन अग्निं प्रज्वाल्य देशिकः ।
   कुण्डे वा स्थण्डिले वापि ब्राह्मणैरथवा स्वयम् ।
   औपासने यदि स्वार्थमितरेषां तु लौकिके ॥

ஹோமத்திற்கான த்ரவியம்

புரஸ்ச்சரண அங்கமாவ ஹோமத்தில், ஹோம
திரவியமாக த்ரிமது (நெய், தேன், நாட்டுச்சர்க்கரை
அல்லது குழவு ஜீனி) கலந்த அஷ்ட திரவியம் (ஸ்ரீ மஹா
கணபதி மந்த்ர விஷயத்தில்) பயன்படுத்தப்படவேண்டும்
அஷ்ட[1] திரவியங்கள் — எட்டுப் பொருள்கள் மோதகம்,
சுத்தப்படுத்தப்பட்ட அவல், நெல்பொறி, ஸத்துமாவு,
கரும்பு, தேங்காய், எள்ளு, பூவன் வாழைப்பழம் ஆகிய
இவை எட்டுப் பொருள்களையும் கலந்து த்ரிமது சேர்த்து
ஹோமம் செய்யப்படவேண்டும்.

பூஜா யந்த்ரத்தில் எவ்வாறு ஆதாரசக்தி முதலாக
பூஜை செய்யப்படுமோ அவ்விதமே அக்னியிலும் தெய்வத்
தைப் பரிவார தேவதைகளுடன் கூடியவராக பாவித்
துப் பூஜித்துவிட்டு ஹோமத்தைச் செய்யவேண்டும்.
புரஸ்ச்சரண ஜப ஹோமத்திற்கான பலன் உபாஸிக்கும்
தெய்வத்தின் ப்ரீதி, ஸந்தோஷம் ஒன்றேயாகும்.
புரஸ்ச்சரண ஹோமம் செய்து பிற அங்க காரியங்களான
தர்ப்பணம், மார்ஜனம், போஜனம் முதலானதுகளை
நிறைவு செய்த பிறகு மந்த்ரஸித்தி ஏற்படும். (மந்த்ரம்
ஸித்தியானதா இல்லையா என்பது இந்த புரஸ்ச்ரண
காலத்திலேயே ஏற்படும் நிமித்தங்கள் கொண்டு அறிய
முடியும். மன மகிழ்ச்சி, ஆரோக்யமான உடல், மனம்,
சுபசகுனங்கள், போகுமிடங்களில் ஏற்படும் கௌரவம்,
கனவில் தெய்வ ஸாக்ஷாத்காரம் போன்ற நல்ல நிமித்
தங்கள் ஏற்படுவதன் மூலம் இதனை உணரலாம்)

அதற்குமேல் பல்வேறு பலன்களைக் கருதி ஜப
ஹோமம் செய்யப்பட்டால் அந்தந்த பலன்கள் கட்டாயம்

---

1. मोदकपृथुकसलाजाः ससक्तवश्चेक्षुनारिकेलतिलाः ।
कदलीफलसहिता इत्यष्टद्रव्याणि सम्प्रदिष्टानि ॥

ஏற்படும். ஒரே தெய்வத்தை முறைப்படி வழிபட்டு அதற்கான மந்திரத்தை ஜபம் செய்துவிட்டு என்ன பலன் ஏற்பட வேண்டுமென விருப்பமோ அதற்குரிய பலவிதமான பொருள்களை ஹோமம் செய்யவேண்டும். தெய்வத்தில் மாற்றமில்லை. மூல மந்த்ரத்தில் மாற்றமில்லை. ஆனால் பலன் என்ன சித்திக்க வேண்டுமோ அதற்கான திரவியத்தை ஹோமாக்னியில் பூஜிக்கப்பட்ட தெய்வத்திற்கு வழங்கினால்தான் அந்த குறிப்பிட்ட பலன் கிடைக்கும். ஹோம திரவியம் மாறினால் பலனும் மாறிவிடும். இதனைப் பலரும் அறியாமல் ஒவ்வொரு பலனுக்கு வெவ்வேறு மந்த்ரங்கள் இருப்பதாகத் தாம் நினைக்கின்றதோடு பிறரையும் நம்பச் செய்து குழப்பிவிடுகின்றனர். உதாரணமாக திருமணமாவதற்குத் தாமதப்படும் ஒரு பெண்ணிற்கு/ஆணுக்கு நல்ல வரன் / பெண் அமைய வேண்டும் திருமணத் தடைகள் விலகி சௌபாக்கியங்கள் ஏற்பட வேண்டும் என்று கருதினால் மஹா கணபதி ஹோமம் செய்யலாம். ஆனால் அதற்கு உரிய ஹோம திரவியம், த்ரிமது கலந்த சுத்தப்படுத்தப்பட்ட நெல் பொறியேயாகும் இதனை ஸ்ரீ மஹா கணபதி மூலமந்த்ரம் சொல்லி ஹோமம் செய்தால் (1 முறை மட்டும் செய்தால் போதுமானதில்லையென்பது வேறுவிஷயம்) நிச்சயம் இடையூறுகள் விலகி திருமண அனுகூலங்கள் ஏற்படவே செய்யும். இதனுடன் வேறு அப்பம், மோதகம் போன்ற பொருள்களைச் சேர்த்து ஹோமம் செய்தால் எதிர் பார்த்த பலன் ஏற்படாது. வேறு சுப பலன்கள் ஏற்படலாம். எனவே ஹோம திரவியம் மாறினால் எதிர் நோக்கப்படும் பலனும் மாறிவிடும் என்பதால், இன்ன பலன் தேவையெனில் இன்ன திரவியத்தால் ஹோமம் செய்ய வேண்டும் எனும் வழியை அனுசரிப்பது அவசியம் என்று ஏற்படுகிறது.

* திரவியம்	ஏற்படும் பலன்
தேன்	ஸ்வர்ண லாபம்
பசும்பால்	பசுக்கள் விருத்தி
நெய்	லக்ஷ்மீ ப்ராப்தி
நாட்டுச்சர்க்கரை	புகழ்
தயிர்	சகல சௌபாக்யங்கள்
அன்னம்	அன்னவிருத்தி
எள் கலந்த அரிசி	செல்வ விருத்தி
ஜாதீ புஷ்பங்கள்	தலைமைப் பதவி
குஸும்ப புஷ்பம், அறளியுடன்	நல்ல ஆடைகள்
தாமரைகள்	நிலம், வீடுகள்
ஆம்பல் (வெள்ளை உத்பலம்)	மந்திரிப்பதவி
அச்வத்த (அரசு) ஸமித்துக்கள்	ஜனவச்யம்
மாவினால் செய்யப்பட்ட பண்டங்கள்	,,
உப்பு	அதிகம் மழை வேண்டாம் எனில் அல்லது மழையே பெய்யக்கூடாது (என்று பகை நாட்டை மனதில் கொண்டு செய்யப்படுமானால்)
நீர் நொச்சி ஸமித்துக்கள்	மழை பெய்வதற்கு

---

* स्वर्णाप्त्यै मधुनाथ गव्यपयसा गोसिद्धये सर्पिषा
लक्ष्म्यै शर्करया जुहोतु यशसे दध्ना च संवर्धये ।
अन्नैरन्नसमृद्धये च सतिलैर्द्रव्याप्तये तण्डुलैः
जातीभिः पतये कुसुम्भकुसुमैः साम्बारिजैर्वाससे ॥

தர்ப்பணம்

புரஸ்ச்ரணத்திற்கு அங்கமான தர்ப்பணம் என்பது ஹோமம் எவ்வளவு செய்யப்பட்டதோ அதில் 10ல் ஒரு பாகம் செய்யப்படவேண்டும். இவ்வாறு பூஜாபீடத்தின் மீது, உரிய முறையில் தர்ப்பணம் செய்யப்பட்டால் ஸ்ரீமஹாகணபதியின் திருவருளைக் கட்டாயம் பெற முடியும்.

எனவேதான்

அலங்காரப்ரியோ விஷ்ணு:
அபிஷேகப்ரியஸ் சிவ: ।
நமஸ்காரப்ரியோ பானு:
கணேசஸ் தர்ப்பணப்ரிய: ॥

என்று வழங்கப்படுகிறது.

ஸ்ரீ மஹா கணபதி உபாஸனையில் தர்ப்பணம் என்பதும் மிக உயர்ந்த ஒரு பகுதியாகும். ஸ்ரீ மஹா கணபதியை உளமாற உபாஸிப்பவர்கள் "சதுராவர்த்தி தர்ப்பணம்" என்பதைச் செய்கிறார்கள். இது பற்றி விரிவாகச் சொல்லப்பட வேண்டியதுண்டு. குருமுகமாக அறியவும்.

மார்ஜனம் : இது அபிஷேகம் போன்று யந்த்ரம் மூர்த்திகள் மீது தர்ப்பையாலாகிய கூர்ச்சம் கொண்டு மந்திரத்தைச் சொல்லியவண்ணம் ப்ரோக்ஷணம் (தெளித்

पद्मैर्भूपतिमुत्पलैर्नृपवधूं तन्मन्त्रिण: कैरवै: ।
अश्वत्थादिसमिद्भिरग्रजमुखान्वर्णान्वधू: पिष्टजै: ।
पुत्तल्यादिभिरन्वहं च वशयेज्जुह्वन्नवृष्टये
लोणैर्वृष्टिसमृद्धये च जुहुयान्मन्त्री पुनर्व्रतसै: ॥

தல்) செய்தல். புரஸ்ச்சரணத்தின் நான்காவது அங்கமான இந்த மார்ஜனம் தர்ப்பண எண்ணிக்கையில் 10-ல் ஒரு பாகம் செய்யப்பட வேண்டும்.

போஜனம்

மார்ஜனம் எவ்வளவு செய்யப்படவேண்டுமோ அதில் 10-ல் ஒரு பங்கு நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப் படவேண்டும். இந்த புரஸ்ச்சரண காரியம் சிறப்பாக முடிவுற்றதாகவும் தேவதாபிரஸாதம் பெறுவதற்கு உரிய பாக்யசாலியாகிவிட்டார் என ஆசிகளும் அவர்களிடம் பெறவேண்டும்.

இவ்வாறு மந்த்ர ஸித்தி பெறுவதற்குப் புரஸ்ச்சரண காரியத்தை விதிப்படிக்குச் செய்த ஸாதகன் உபாஸிக்கும் தெய்வத்தின் திருவருளுக்குப் பாத்திரமாகிறார்.

இது பற்றி மீண்டும் வலியுறுத்தப்படுவதாவது:— இந்த புரஸ்ச்சரணம் செய்யும் நாட்களில் இடையூறுகள் ஏற்படவே செய்யும் இது நிறைவு பெறும் வரையில் ஸாதகன் க்ஷவரம் செய்துகொள்ளலாகாது. உடல் மனக்

सूत उवाच —

श्रृणुध्वं मुनयः सर्वे वेदवेदान्तपारगाः ।
येनोपायेन सिद्धिःस्यात् भवतां तु तपोधनाः ॥
मन्त्रोद्धारं प्रवक्ष्यामि सर्वसिद्धिकरं परम् ।
प्रणवं पूर्वमुच्चार्य श्रीबीजं च ततः परम् ॥
महामायां ततः प्रोच्य कामराजं ततः परम् ।
चतुर्दशस्वरारूढं गकारं सेन्दुबिन्दुमान् [कम्] ।
महाशब्दं ततोद्धृत्य पश्चाद्गणपतेति च ।

கட்டுப்பாடு மிக மிக அவசியம். பிரம்மசர்யம், அஹிம்சை, மௌனம், இரு முறையாவது (மும்முறை செய்யவேண்டும் என்பதே விதி) ஸ்நானம் — ஒருவேளை போஜனம் — நித்ய பூஜை, உபாஸிக்கும் தெய்வத்தின் துதிப்பாடல்களைப் பாடுதல் அல்லது சொல்லுதல் ஆகிய நியமங்களை வழுவாது செய்துவர வேண்டும்.

वरशब्दं द्विधा कुर्यात् दशब्दं च पुनर्वदेत् ।
सर्वशब्दं ततोद्धृत्य जनशब्दं ततोद्धरेत् ।
मे शब्दं तु पुनः कुर्याद्वशमानय इत्यपि ।
वह्निपत्न्या समायुक्तं अष्टाविंशाक्षरं परम् ।
मन्त्रराजस्य बीजेन कृतकृत्यो भवेन्नरः ।
ऋषिर्वै गणको ज्ञेयश्छन्दो गायत्रमुच्यते ।
गणेशो देवता सिद्धिर्मन्त्रस्यास्य च कथ्यते ।

अथ न्यासः —

ह्रीं गीं शिरसे स्वाहा
ह्रूं गूं शिखायै वषट्
ह्रैं गैं कवचाय हुं
ह्रौं गौं नेत्रत्रयाय वौषट्
ह्रः गः अस्त्राय फट्

ओं श्रां ह्रां क्लां ग्लां गां हृदयाय नमः
ओं श्रीं ह्रीं क्लीं ग्लीं गीं शिरसे स्वाहा
ओं श्रूं ह्रूं क्लूं ग्लूं गूं शिखायै वषट्
ओं श्रैं ह्रैं क्लैं ग्लैं गैं कवचाय हुं
ओं श्रौं ह्रौं क्लौं ग्लौं गौं नेत्रत्रयाय वौषट्
ओं श्रः ह्रः क्लः ग्लः गः अस्त्राय फट्

ஸ்ரீ மஹாகணபதி பூஜாவிதானம்

தினந்தோறும் ஸ்நானாதி அனுஷ்டானம் செய்த பிறகு ஸ்ரீமஹாகணபதி பூஜைக்குரிய யந்த்ரம் 'பூர்ஜ' எனும் இலையில் சந்தனம், கோரோசனை, குங்குமப்பூ முதலான கலவையால் எழுதியோ, சுவர்ணம் அல்லது வெள்ளி அல்லது தாமிரத் தகட்டில் அமைத்தோ, குருநாதரால் அனுக்ரஹிக்கப்பட்டுள்ளதை வைத்து தினந்தோறும் அதில் ஸ்ரீமஹாகணபதியை பூஜித்தல் வேண்டும்.

பூஜை தொடங்குவதற்கு முன்பாகத் தயார் செய்ய வேண்டிய பொருள்கள்:

தீபம், சுத்தமான ஜலம், பச்சக்கற்பூரம், குங்குமப்பூ கலந்து அரைக்கப்பட்ட சந்தனம், சிகப்பு புஷ்பங்களுடன்

ओं गां ग्लां क्लां ह्लां श्रां हृदयाय नमः
ओं गीं ग्लीं क्लीं ह्लीं श्रीं शिरसे स्वाया
ओं गूं ग्लूं क्लूं ह्लूं श्रूं शिखायै वषट्
ओं गैं ग्लैं क्लैं ह्लैं श्रैं कवचाय हुं
ओं गौं ग्लौं क्लौं ह्लौं श्रौं नेत्रत्रयाय वौषट्
ओं गः ग्लः क्लः ह्लः श्रः अस्त्राय फट्

अथ ध्यानम् । पूर्वलिखितमेव द्रष्टव्यम् ॥

नद्यां देवखाते वा स्नात्वा नित्यं (अनुष्ठेयं) कृत्वा पूजनं कृत्वा आवरणानि पूजयित्वा (पूजां सावरणं कुर्यात्) ।

तत्र रमा रमेशादि मिथुनं चतुष्कोणेषु पूजयेत् ।
आमोदविघ्नषट्कं च षड्दलेषु च पूजयेत् ॥
ततः शङ्खनिधिद्वन्द्वं पार्श्वयोश्च प्रपूजयेत् ।
तथैव च ॥
इन्द्रादिलोकपालांश्च आयुधानि तथैव च ॥

தாமரை மல்லிகை முதலான புஷ்பங்கள் உதிரியாகவும், தொடுத்ததாகவும் சிகப்பு அக்ஷதை (முழுமையான அரிசி) நல்ல வாசனை வத்தி, நெய் பூசப்பட்ட திரியுடன் தீபம் ஏற்றுவதற்கு உரிய சாதனம், நிவேதனத்திற்கான பொருள்கள், தாம்பூலம், அபிஷேகத்திற்கான பால், பன்னீர்ப்புட்டி, தேன் மற்றும் குங்குமம், கிண்ணங்கள், அபிஷேகம் செய்வதற்குரிய உயரமான (தீர்த்தவல்லி என்று சொல்லப்படும்) பீடம், பஞ்சபாத்ரம், உத்தரணி, ஆசனப் பலகை முதலானதுகள் — கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக ஆசனத்தில் அமர்ந்து, ஆசமனம்

ஓம் ச்ரீம் ஆத்மதத்வம் சோதயாமி நம: ஸ்வாஹா
ஓம் ஹ்ரீம் வித்யாதத்வம் ,, ,,
ஓம் க்லீம் சிவதத்வம் ,, ,,
ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஸர்வதத்வம் ,,

என்று சொல்லி அருந்திவிட்டு, மூலமந்த்ரத்தால் ப்ராணாயாமம் செய்துகொண்டு,

ஸங்கல்பம்: (கையில் அக்ஷதை எடுத்துக்கொண்டு) சுபேதினே சோபனே முஹூர்த்தே, அத்ய ப்ரம்மண:

ब्रह्मणे पृथिवीतत्वात्मने, विष्णवे उदकतत्वात्मने, रुद्राय आकाशतत्वात्मने, ईश्वराय अग्नितत्वात्मने, सदाशिवाय वायुतत्वात्मने, गणक्षेत्रपालक दुर्गासरस्वत्यै (तीभ्यः) परिवारदेवताभ्यो नमः । इत्यर्चनम् ॥

अथ यन्त्रम् ।

बीजं षट्कोणमध्ये स्फुरदनलपुरे तारगे दिक्षु लक्ष्मी-
मायाकन्दर्पभूमीस्तदनु रसपुटेष्वालिखेद्बीजषट्कम् ।
तत्सन्धिष्वङ्गमन्त्रान् वसुदलकमले मूलमन्त्रस्य वर्णान्
शिष्टान्मन्त्रेषु विद्वान् विलिखतु गुणशश्चान्त्यमन्त्ये पलाशे ॥

த்விதீய பரார்த்தே, ச்வேத வராஹ கல்ப்பே வைவஸ்வத மன்வந்த்ரே அஷ்டாவிம்சதிதமே கலியுகே, ப்ரதமே பாதே ஜம்பூத்வீபே, பாரதவர்ஷே, பரதக்கண்டே, மேரோஹோ, தக்ஷிணே பார்ச்வே, சகாப்தே, அச்மின் வர்த்தமானே வ்யாவஹாரிகே ப்ரபவாதீனாம் ஷஷ்ட்யா: ஸம்வத்ஸ-ராணாம் மத்யே ... ... நாம ஸம்வத்ஸரே உத்தராயணே / தக்ஷிணாயனே ...... ருதௌ, ... மாஸே, சுக்ல / க்ருஷ்ண பக்ஷே, ... சுபதிதௌ .. ... வாஸரயுக்தாயாம், ... நக்ஷத்ர யுக்தாயாம் அஸ்யாம் சுபதிதௌ மம ஸஹ குடும்பஸ்ய ஸ்ரீ மஹாகணபதி ப்ரஸாத ஸித்யர்த்தம், அஸ்மத் குரு சரண அனுக்ரஹ ஸித்யர்த்தம் ஸ்ரீ மஹா கணபதி பூஜாம் யதா ஸங்கல்ப்பித திரவ்யை: அத்ய கரிஷ்யே. (அக்ஷதையை வலப்புறம் கீழே போட்டுவிட்டு உத்தரணியால் ஜலம் எடுத்து கையை அலம்பவும்).

குறிப்பு: இங்கு பூத சுத்தி ஆத்ம-பிராண, பிரதிஷ்டா முதலானதுகள் செய்யப்படவேண்டியது உண்டு பூஜை முறை இங்கு எழுதப்படுவதில் வித்யாசங் களும், இன்னும் சேர்க்கவேண்டிய அம்சங்களும் இருக்கும். அப்பகுதிகளைக்கேட்டு எழுதிக்கொண்டு செய்வதே நல்லது. இதில் கூறப்படுவது பூஜைபற்றி மேலோட்ட மாகத் தெரிந்துகொள்வதற்கேயன்றி, இதுதான் பூஜை முறை என்பதல்ல. குருநாதரின் வழியாகக் கேட்டு அறிந்து செய்வதே உயர்ந்தது.

(கையில் புஷ்பாக்ஷதம் எடுத்து அமரும் இடத்தில் கீழே பூஜிக்கவும்)

आवीतं लिपिभिः क्रमोत्क्रमवशात् पाशाङ्कुशाभ्यामपि
क्ष्मागेहद्वितयेन संवृतमिदं यन्त्रं गणाधीशितुः ।
लाक्षारोचनकुङ्कुमैर्मृगमदैर्भूर्जे वरे हेम्नि वा
... ... सकलैः श्रियं लभेत् (?) ॥

ஆஸனமஹாமந்த்ரஸ்ய ப்ருதிவ்யா: மேரு ப்ருஷ்ட்ட ரிஷி: ஸுதலம் சந்த: கூர்மோ தேவதா ஆஸனே விநியோக:

ப்ருத்வி த்வயா த்ருதா லோகா: தேவி த்வம் விஷ்ணுனா த்வம் ச தாரய மாம் தேவி பவித்ரம் குரு ச ஆஸனம் [த்ருதா

விக்ன உத்ஸாரணம் : (அக்ஷதை மட்டும் எடுத்து ஜலமும் சேர்த்து சுற்றிலும் தெளிக்கவும்)

அபஸர்ப்பந்து தே பூதா: யே பூதா புவி ஸம்ஸ்திதா:
யே பூதா விக்ன கர்த்தார: தே நச்யந்து கணாக்ஞயா ।
அபக்ராமந்து பூதானி பிசாசாஸ் ஸர்வதோ திசம்
ஸர்வேஷாம் அவிரோதேன பூஜாகர்ம ஸமாரபே ॥

(பூஜை மணியை வலது கையால் அடித்தல்)

ஆகமார்த்தம் து தேவானாம் கமனார்த்தம் து ரக்ஷஸாம் ।
குர்யாம் கண்டாரவம் சாத்ர தேவதா ஹ்வான லாஞ்ச்சனம்।

தீப பூஜை

(புஷ்பாக்ஷதை எடுத்துக்கொண்டு) தீபத்தை நன்கு எரியச் செய்து

தீபதேவி மஹாதேவி சுபம் பவது மே ஸதா,
யாவத் பூஜா ஸமாப்திஸ்யாத் தாவத் ப்ரஜ்வல
[ஸுஸ்த்திரா

(தீபத்தின் அடியில் போடவும்)

கலச பூஜை

பஞ்சபாத்ரம் உத்தரணியுள்ள பாத்ரத்திற்கு நாற்புறமும் சந்தனம் குங்குமம் இட்டு, பாத்திரத்தில் உள்ள ஜலத்தில் பாவனையாக, ஸ்ரீ மஹாகணபதி பீஜாக்ஷரங்களை எழுதிக்கொண்டு அல்லது முக்கோணம், பாவனையாக எழுதி நடுவில் 'கம்' என்றும் எழுதி புஷ்பம், அக்ஷதை எடுத்து பூஜித்து வலது கையால் அதனை மூடிக்கொண்டு பின்வரும் மந்த்ரத்தைச் சொல்லவேண்டும்.

கலசஸ்ய முகே விஷ்ணு: கண்டே ருத்ரஸ் ஸமாச்ரித:
மூலே தத்ர ஸ்திதோ ப்ரம்மா மத்யே மாத்ருகணாஸ்ஸ்திதா:
குக்ஷௌ து ஸாகராஸ்ஸர்வே ஸப்த த்வீபா வஸுந்தரா
ருக்வேதோ஽த யஜுர்வேத: ஸாமவேதோபி அதர்வண:
அங்கைஸ்ச ஸஹிதாஸ் ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா:
ஸர்வே ஸமுத்ராஸ் ஸரித: தீர்த்தானி ச நதா ஹ்ரதா:
ஆயாந்து கண பூஜார்த்தம் துரித க்ஷயகாரகா:
கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி ஜலே஽ஸ்மின் ஸந்நிதிம் குரு

(கையில் அக்ஷதை புஷ்பம் எடுத்துக்கொண்டு)

சங்கு பூஜை

சங்கு வெள்ளியால் அல்லது தங்கத்தால் கட்டப்பட்டு அதில் ஒரு முத்து, பவழம், தங்கமணி (வெள்ளியில் கட்டப்பட்டிருப்பின்)யும் கட்டப்பட்டதாக இருக்கவேண்டும். வலம்புரி சங்காகில் மிக உத்தமம். இடம்புரி சங்கும் பூஜைக்குரியதா எனப்பார்த்து கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். கலசத்தில் உள்ள ஜலத்தை உத்தரணியில் எடுத்து சங்கில் விட்டு நிரப்பவும். விடும்பொழுது மூல மந்த்ரத்தை (மூலமந்த்ரம் என்பது ஸ்ரீ மஹாகணபதி மூல மந்த்ரமே)ச் சொல்லிக்கொண்டே விடவும். பிறகு கையில் புஷ்ப அக்ஷதை எடுத்துக்கொண்டு பின்வரும் மந்த்ரம் சொல்லி அந்த சங்கில் போடவும்.

சங்கம் சந்திரார்க்க தைவத்யம் குக்ஷௌ வருணதைவதம் !
ப்ருஷ்ட்டே பிராஜாபதிஸ்சைவ அக்ரே கங்காஸரஸ்வதீ !

(சங்கை கை கூப்பி வணங்கியவாறு)

த்வம் புரா ஸாகரோத்பன்ன:
விஷ்ணுனா வித்ருத: கரே
பூஜிதஸ்ஸர்வ தேவைஸ்ச
பாஞ்சஜன்ய நமோ஽ஸ்துதே

த்ரைலோக்யே யானி தீர்த்தானி
வாஸுதேவஸ்ய ச ஆக்ஞயா
சங்கே திஷ்ட்டந்தி பக்ஷீந்த்ர
தஸ்மாத் சங்கம் ப்ரபூஜயேத்

(கையில் புஷ்பாக்ஷதம் எடுத்துக்கொண்டு)

சங்கின் அடிப்புறத்தில்		ப்ரம்மணே நம:
,,	நடுவில்	விஷ்ணவே நம:
,,	நுனியில்	சிவாய நம:

என்று சொல்லிப் போடவும். பிறகு சங்கில் உள்ள ஜலத்தை உத்தரணியால் எடுத்து முன் பூஜித்த கலச ஜலத்தில் விடவும். உடன் புஷ்பாக்ஷதம் எடுத்து சங்கராஜாய நம: ஸர்வோபசாரான் ஸமர்ப்பயாமி என்று சொல்லி சங்கின் மீது போடவும்.

மறுபடி கலச ஜலத்தை உத்தரணியால் எடுத்து, பூஜைக்கான எல்லா சாமான்கள் மீதும் தெளிக்கவும். மேலும் ஒரு உத்தரணி ஜலம் எடுத்து 'வர்தனீ கலசம்' எனப்படும் அபிஷேகத்திற்கென வைத்திருக்கும் பெரிய பாத்திரத்தில் உள்ள ஜலத்தில் விடவும்.

முக்கிய குறிப்பு

பூஜிக்கப்பட்ட கலசத்தையும் சங்கையும் அசைக்க—நகர்த்தலாகாது.

பிறகு அபிஷேகம் செய்ய உதவியாக உள்ள உயரமான தீர்த்தவல்லியில், பூஜா பீடத்தை வைத்து (யந்த்ரத்தை) கையில் புஷ்பாக்ஷதம் எடுத்து பின்வரும் ஒவ்வொரு மந்த்ரத்தின் முடிவிலும் பீடத்தின் மீது (நடுவில்) போடவும்.

"ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்" இதை எல்லாவிடத்திலும் முன்னால் சொல்லிவிட்டுத்தான் பின்வரும் மந்த்ரங்களைச்

சொல்ல வேண்டும். அதனைக் குறிப்பிடுவதற்காக, சொல்லப்படும் மந்த்ரத்திற்கு முன்பாக ஓம் 3 என்று குறிப்பிடுவோம்.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கும் குருப்யோ நம:
,, கம் கணபதயே நம:
,, ஆதாரசக்த்யை நம:
,, மூலப்ரக்ருத்யை நம:
,, ஆதிகூர்மாய நம:
,, அனந்தாய நம:
,, ப்ருதிவ்யை நம:
,, இக்ஷுஸமுத்ராய நம:
,, ச்வேத த்வீபாய நம:
,, ரத்ன மண்டபாய நம:
,, கல்பக விருக்ஷாய நம:
,, ச்வேதச்சத்ராய நம:
,, ஸித சாமராப்யாம் நம:
,, ரத்ன ஸிம்ஹாஸனாய நம:
,, தர்மாய நம:
,, க்ஞானாய நம:
,, வைராக்யாய நம:
,, ஐச்வர்யாய நம:
,, அதர்மாய நம:
,, அக்ஞானாய நம:
,, அவைராக்யாய நம:
,, அனைச்வர்யாய நம:
,, ஸம் ஸத்வாய நம:
,, ரம் ரஜஸே நம:
,, தம் தமஸே நம:
,, மம் மாயாயை நம:
,,

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் சலிப் விம் வித்யாயை நம:
" அம் அனந்தாய நம:
" பம் பத்மாய நம:
" அம் ஸூர்ய மண்டலாய நம:
" உம் ஸோம மண்டலாய நம:
" மம் வன்னி மண்டலாய நம:
" அம் ஆத்மனே நம:
" உம் அந்தராத்மனே நம:
" மம் பரமாத்மனே நம:
" ஓம் ஹ்ரீம் ஞானாத்மனே நம:
" தீவ்ராயை நம:
" ஜ்வாலின்யை நம:
" நந்தாயை நம:
" போகதாயை நம:
" காமரூபிண்யை நம:
" உக்ராயை நம:
" தேஜோவத்யை நம:
" ஸத்யாயை நம:
" விக்னநாசின்யை நம:
" ஸர்வசக்திகமலாஸனாய நம:

ஓம் 3 தியானச்லோகம் சொல்லி மூலமந்த்ரத்தையும் புஷ்பாக்ஷதம் எடுத்து) அஸ்மின் பூஜாயந்த்ரே—

ஓம் ஸ்ரீம் ஆத்ம தத்வ வியாபினம் ஸ்ரீ மஹாகணபதிம் தியாயாமி (பீடத்தில் போட்டுவிட்டு மறுபடி புஷ்பாக்ஷதம் எடுத்துப் போடவும்)

ஓம் ஹ்ரீம் வித்யா தத்வ வியாபினம் ஸ்ரீ மஹாகணபதிம் தியாயாமி

ஓம் க்லீம் சிவதத்வ வியாபினம் ஸ்ரீ மஹாகணபதிம் "

ஓம் 3 ஸர்வதத்வ வியாபினம் ஸ்ரீமஹாகணபதிம் தியாயாமி

ஓம் 3 அஸ்மின் பூஜா யந்த்ரே ஸ்ரீ மஹாகணபதிம்
ஆவாஹயாமி (புஷ்பாக்ஷதம் போடவும்)

ஸ்ரீ குருநாதர் — ஸ்ரீ மஹாகணபதி யந்த்ரத்தை ஸம்ஸ்காரம் செய்து, பிராணபிரதிஷ்டை செய்துதான் அனுக்ரஹித்திருப்பார் என்பதால் விரிவான பிராண பிரதிஷ்டை மந்த்ரம் எழுதப்படவில்லை. சுருக்கமாக, தினந்தோறும் பின்வரும் பிராணபிரதிஷ்டா மந்த்ரத்தைச் சொல்லவும்.

ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம்–யம் ரம் லம் வம் சம் ஷம் ஸம் ஹம் ஹம்ஸ: ஸோஹம் கணபதி மூலம். ஸ்ரீ மஹா கணபதே: ப்ராணான் ப்ரதிஷ்டாயயாமி என்று சொல்லி புஷ்பாக்ஷதம் யந்த்ரத்தின் நடுவில் போடவும்.

ஓம் 3	ஆவாஹிதோ பவ	(ஆவாஹனீ முத்ரை)
	ஸ்தாபிதோ பவ	(ஸ்தாபனீ ,,)
	ஸந்நிதாபிதோ பவ	(ஸந்நிதாபினீ ,,)
	ஸந்நிருத்தோ பவ	(ஸந்நிரோதினீ ,,)
	ஸம்முகோ பவ	(ஸம்முக ,,)
	அவகுண்டிதோ பவ	(அவகுண்டன ,,)
	ஸுப்ரீதோ பவ	(தேனுமுத்ரை)
	ஸுப்ரஸன்னோ பவ	(யோனிமுத்ரை)
	வரதோ பவ	(இரு கைகளைச் சேர்த்து விரித்துக் காட்டுதல்)

(பிறகு புஷ்பாக்ஷதம் எடுத்து)

ஓம் 3 ஸ்வாமின் ஸர்வஜகன்நாத
யாவத் பூஜாவஸானகம் ।
தாவத் த்வம் ப்ரீதி பாவேன
யந்த்ரே஽ஸ்மின் ஸந்நிதிம் குரு ॥

(சொல்லி யந்த்ர மத்தியில் போடவும்)

மறுபடி புஷ்பாக்ஷதம் எடுத்து

ஓம் 3 ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதே இஹாகச்ச இஹதிஷ்ட்ட இஹ ஸாந்நித்யம் குரு என்று சொல்லி போடவும்.

மறுபடி புஷ்பாக்ஷதம் எடுத்து,

ஓம் 3 ஸ்ரீ மஹாகணபதயே நம: ஸ்வாகதம் கல்ப்பயாமி

" " ஆஸனார்த்தம் புஷ்பாக்ஷம் ஸமர்ப்பயாமி

" " (பாதயோ:) பாத்யம் கல்ப்பயாமி (ஒரு உத்தரணி ஜலம் கிண்ணத்தில் விடவும்)

" " (முகே) ஆசமனீயம் கல்ப்பயாமி (ஒரு உத்தரணி ஜலம் கிண்ணத்தில் விடவும்

" " (ஹஸ்தயோ:) அர்க்யம் கல்ப்பயாமி

" " ஸ்நானம் கல்ப்பயாமி

இங்கு மூல மந்த்ரத்தைச் சொல்லியவண்ணம் அபிஷேகம் சுத்தஜலம் கொண்டு செய்யவும். பிறகு தேன், பழரசம், பால், சந்தனம் அபிஷேகம் செய்யும் போதும் மூலமந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டே இருக்கவும். இவ்விடத்தில் ஸ்ரீருத்ரம், புருஷஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம் சொல்லக்கூடியவர்கள் சொல்லலாம்.

ஓம் 3 ஸ்ரீ மஹாகணபதயே நம: ஸ்நானானந்தரம் ஆசமனீயம் கல்ப்பயாமி (ஒரு உத்தரணி ஜலத்தை கிண்ணத்தில் விடவும்

" " வஸ்த்ரம் கல்ப்பயாமி (புஷ்பாக்ஷதம்)

" " யக்ஞோபவீதம் " (புஷ்பாக்ஷதம்)

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் மஹாகணபதயே நம: ஆபரணம்
கல்ப்பயாமி (புஷ்பாக்ஷதம்)

,, ,, கந்தம் ,, சந்தனம்

,, ,, ஹரித்ரா குங்குமம் (குங்குமம்)

ஓம் 3 மஹாகணபதயே நம: அக்ஷதான் கல்ப்பயாமி

,, ,, புஷ்பமாலாம் கல்ப்பயாமி
(புஷ்பமாலை அணிவித்தல்)

,, ,, பூஷ்பை: பூஜயாமி

,, விக்னேச கணபதயே நம: புஷ்பங்களால் அர்ச்சனை

,, விநாயக ,,

,, வீர ,,

,, சூர ,,

,, வரத ,,

,, ஹஸ்திமுக ,,

,, ஏகதந்த கணபதயே நம:

,, லம்போதர ,,

,, க்ஷிப்ர-ப்ரஸாதன கணபதயே நம:

,, ஸ்ரீமஹாகணபதயே நம: நானாவித பத்ர-புஷ்பாணி
ஸமர்ப்பயாமி

தூபம் : (சாம்பிராணி — வத்திப்புகை காண்பித்தல்)

ஓம்: மூலமந்த்ரம் ஸ்ரீமஹாகணபதயே நம: தூபம்
கல்ப்பயாமி

தூபானந்தரம் ஆசமனீயம் கல்ப்பயாமி
(உத்தரணி ஜலம் கிண்ணத்தில் விடவும்)

தீபம்: (நெய்த்திரி தீபம் காண்பித்தல்)
மூலமந்திரம்: ஸ்ரீமஹாகணபதயே நம:
மங்கள தீபம் கல்ப்பயாமி

தீபானந்தரம் ஆசமனீயம் கல்ப்பயாமி
(ஒரு உத்தரணி ஜலம் கிண்ணத்தில் விடவும்)

நிவேதனம்

மூலமந்த்ரம் சொல்லி நிவேதனத்தை நீர் தெளித்து சுத்தப்படுத்தி — மறுபடி மூலமந்த்ரம் சொல்லியவண்ணம் வலது கையால் தொடவும். அன்னம், பாயஸம் முதலானதுகள் இருப்பினும் தொட்டு மலர் போடவும். இங்கு நிவேதன முறையில் யந்த்ர பூஜையில் சற்று அதிகம் செய்ய வேண்டியதுண்டு! குருமுகமாகக் கேட்டுத் தெளியவும்.

ஓம் 3 மூலமந்த்ரம் சொல்லி
ஸ்ரீமஹாகணபதயே நம: திவ்ய அன்னம் — பாயஸம் மாஷ அபூபம் (வடை) குட அபூபம் (வெல்ல அப்பம்) — நாரிகேலக்கண்டத்வயம் (தேங்காய்) — கதலீபலம் (வாழைப்பழம்) ஸர்வம் மஹாநிவேதனம் நிவேதயாமி. நிவேதனானந்தரம் ஆசமனீயம் கல்ப்பயாமி (ஒரு உத்தரணி ஜலத்தை கிண்ணத்தில் விடவும்)

தாம்பூலம்: நான்கு நல்ல சுத்தமான வெற்றிலை சீவல், களிப்பாக்கு, ஏலக்காய், கிராம்பு, ஜாதிபத்திரி முதலானவற்றை வைத்து மடக்கி மற்றும் 4 வெற்றிலைகளால் அதனை மடக்கி காளாஞ்சி போல் செய்து இப்படி 4 — 8 காளாஞ்சிகள் நிவேதனம் செய்யலாம்.

(இதற்குமேல் பழம் நிவேதனம் செய்கிறதும் உண்டு)

கற்பூர ஆரதீ

ஓம் 3 மூலமந்த்ரம் முழுவதும் சொல்லி ஸ்ரீ மஹாகணபதயே நம: ஸமஸ்த அபராத க்ஷமார்த்தம் கர்ப்பூர நீராஜனம் கல்ப்பயாமி
நீராஜனானந்தரம் ஆசமனீயம் கல்ப்பயாமி
(ஒரு உத்தரணி ஜலத்தை கிண்ணத்தில் விடவும்)

மந்த்ர புஷ்பம்

ஓம் 3 ஸ்ரீமஹாகணபதயே நம: மந்த்ரபுஷ்பாஞ்ஜலிம் ஸமர்ப்பயாமி,

இதற்குமேல் * ஆவரண பூஜை

ஸ்ரீமஹாகணபதி யந்த்ரத்தில் ஐந்து ஆவரணங்கள் உண்டு.

1. வட்டத்துடன் ஒரு முக்கோணம்
2. அதற்கு வெளியில் 6 கோணங்கள். அதனைச் சுற்றி ஒரு வட்டம்.
3. அதையனுசரித்து 8 இதழ்கள் கொண்ட தாமரை.
4. அதற்குமேல் இரு கோடுள்ள சதுரம். இது நான்கு திசைகளில் (கிழக்கு-தெற்கு. மேற்கு-வடக்கு) வாசல்களுடன் இருக்கும். இதுவே ஸ்ரீ மஹா கணபதிக்கான பூஜாயந்த்ரமாகும். இப்பகுதிகளுக் குள் 5 ஆவரணங்கள் உள்ளன. அங்கு உள்ள ஸ்ரீ மஹாகணபதியின் ஆளுகைக்குட்பட்ட தேவதை களையும் பூஜித்தல் வேண்டும். இந்த ஆவரண தேவதைகளையும் பூஜித்து மறுபடியும் இந்த பூஜிக் கப்பட்ட ஆவரண தேவதைகளுடன் கூடிய மஹா கணபதியையும் பூஜித்தால்தான் பூஜை நிறைவு பெற்றதாக ஆகும் என்பதால் அதன் விபரங்கள் அதிகம் விரிவுபடுத்தாமல் இந்த பூஜை பற்றிய பூர்வாங்க அறிவு ஏற்படும் வகையில் தரப்படு கின்றன.

(கையில் புஷ்பாக்ஷதம் எடுத்துக்கொண்டு)

ஸ்ரீ மஹாகணபதியிடம் அனுமதி கோருதல்

ஓம் 3 ஸச்சின்மய கணாதீச பராம்ருதரஸப்ரிய அனுக்ஞாம் குரு மே தேவ பரிவாரார்ச்சனாய—தே என்று சொல்லி யந்திர மத்தியில் போட்டு அனுமதி வேண்டி பிரார்த்திக்க வேண்டும்.

முதல் ஆவரணம்

கீழ்நோக்கிய முக்கோணம். அதன் இடையில் ஒரு வட்டம் — ஓங்கார வடிவமான அதன் நடுவில் ஸ்ரீமஹா

* ஆவரணம் — பிரதான தெய்வத்தைச் சுற்றி வெளியில் உள்ள தெய்வங்களின் இருப்பிடம்.

கணபதி வல்லபை சக்தியுடன் இருக்கிறார். முக்கோணத்தின் வெளியில் நுனிப்பகுதிக்கு வெளியில் ஸ்ரீலக்ஷ்மியுடன் திருமாலும் இருக்கின்றனர் — இது மஹா கணபதிக்கு கிழக்கு திசையாகும்.

பூஜிப்பவர் எந்த திசை நோக்கி அமர்ந்திருந்தாலும் கிழக்கு நோக்கியோ, வடக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ அமர்ந்திருப்பினும் பூஜிக்கப்படும் தெய்வம் சாதகனை நோக்கி இருப்பதாக பாவனை செய்யவும். அப்பொழுது அந்த தெய்வத்திற்கும் பூஜிப்பவருக்கும் இடைப்பகுதி தெய்வத்திற்கு கிழக்கு திசையாகும். அதை யனுஸரித்து ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் மஹாவிஷ்ணுவும் மஹா கணபதிக்குக் கிழக்கில் வில்வ மரத்தினடியில் இருப்பதாக பாவனை செய்து பூஜிக்கவும். இதுபோல பகவானுக்கு வலது புறம் முக்கோணத்திற்கு வெளியில் ஸ்ரீ பார்வதியும் பரமசிவனும் ஆலமரத்தின் அடியில் இருப்பதாக பாவனை செய்து பூஜிக்கவும். இவ்வாறே பகவானுக்கு மேற்கில் (பின்புறம்) ரதிதேவியும், மன்மதனும் அத்தி மரத்தின் அடியிலும், பகவானுக்கு இடப்புறம் பூமிதேவியுடன் வராஹமூர்த்தி நாகமரத்தின் அடியிலும் வீற்றிருப்பதாக பாவித்து பூஜிக்க வேண்டும்.

கையில் புஷ்பாக்ஷதை எடுத்துக்கொண்டு பின்வரும் மந்த்ரங்களைச் சொல்லி பூஜிக்கவும்.

ஓம் 3	ரமாயை நம:	ஓம் 3	ரமேசாய நம:	1
,,	உமாயை நம:	,,	மஹேச்வராய நம:	2
,,	ரத்யை நம:	,,	புஷ்ப—பாணாய நம:	3
,,	மஹ்யை நம:	,,	வராஹாய நம;	4

(இங்கு தூபதீப நிவேதனம் முதலானதுகள் செய்வதுண்டு) (மறுபடி புஷ்பாக்ஷதம் எடுத்துக்கொண்டு)

ஓம் 3 அபீஷ்ட ஸித்திம் மே தேஹி சரணாகதவத்ஸல ।
பக்த்யா ஸமர்ப்பயே துப்யம் ப்ரதமாவரணார்ச்சனம் ॥

என்று சொல்லி முதல் ஆவரண தேவதைகளுக்கு சமர்ப்பிக்கவும்.

இரண்டாவது ஆவரணம்

"த்விதீயாவரண தேவதாப்யோ நம:" என்று சொல்லி புஷ்பாஞ்ஜலி செய்யவும் (புஷ்பாக்ஷதம் எடுத்துக் கொண்டு) ஆறு கோணங்களில் பூஜை செய்யவும்.

ஓம் 3 ருத்யை நம:	ஓம் 3 ஆமோதாய நம:	1
,, ஸம்ருத்யை நம:	,, ப்ரமோதாய நம:	2
,, காந்த்யை நம:	,, ஸுமுகாய நம:	3
,, மதனாவத்யை நம;	,, துர்முகாய நம:	4
,, மதத்ரவாயை நம:	,, அவிக்நாய நம:	5
,, த்ராவிண்யை நம:	,, விக்னகர்த்தரே நம:	6
,, வஸுதாராயை நம:	,, சங்கநிதயே நம:	7
,, வஸுமத்யை நம:	,, பத்மநிதயே நம:	8

பகவானுக்கு எதிரில் உள்ள கோணம் 1. பகவானுக்கு முன்புறம் வலது பக்கமுள்ள கோணம் 2. முன்புறம் இடது பக்கமுள்ள கோணம் 3. பின்புறம் உள்ள கோணம் 4. பின்புறம் வலது பக்கம் உள்ள கோணம் 5. பகவானுக்கு பின்புறம் இடது பக்கமுள்ள கோணம் 6. இடப்புறம் ஆறு கோணத்திற்கு வெளியில் 7. வலப்புறம் ஆறு கோணத்திற்கு வெளியில் 8. இவர்களை ஜோடி ஜோடியாக பூஜிக்க வேண்டும். (இதற்கு மேல் தூப, தீப, நிவேதனம் முதலானதுகள் கர்ப்பூர ஆரதி வரை செய்வது உண்டு)

பிறகு புஷ்பாக்ஷதம் எடுத்துக்கொண்டு.

ஓம் 3 அபீஷ்டஸித்திம் மே தேஹி சரணாகத வத்ஸல ।
பக்த்யா ஸமர்ப்பயே துப்யம் த்விதீயாவரணார்ச்சனம் ।

என்று சொல்லி இரண்டாவது ஆவரண தேவதைகளுக்குச் சமர்ப்பிக்கவும்.

மூன்றாவது ஆவரணம்

[இந்த ஆவரணம் (ஷட்கோண) ஆறுகோணத்தின் இடைவெளிகள் ஆகும்.] புஷ்பாக்ஷதம் எடுத்துக்கொண்டு "த்ருதீயாவரண தேவதாப்யோ நம:" என்றுசொல்லி 3வது ஆவரண தேவதைகளுக்குச் சமர்ப்பிக்கவும்.

ஓம் 3	காம்*	ஹ்ருதய சக்த்யை நம:
,,	கீம்	சிரஸ்சக்த்யை நம:
,,	கூம்	சிகா சக்த்யை நம:
,,	கைம்	கவச-சக்த்யை நம:
,,	கௌம்	நேத்ர த்ரய சக்த்யை நம:
,,	க:	அஸ்த்ர சக்த்யை நம:

இங்கும் தூப தீப நைவேத்யங்கள் முதலானவை செய்யப் படுவதுண்டு. மறுபடி புஷ்பாக்ஷதை எடுத்துக்கொண்டு

ஓம் 3 அபீஷ்ட ஸித்திம் மே தேஹி சரணகத வத்ஸல ।
பக்த்யா ஸமர்ப்பயே துப்யம் த்ருதீயாவரணார்ச்சனம் ॥

என்று சொல்லி சமர்ப்பிக்கவும்.

இதற்குப் பிறகு குருமண்டல பூஜை செய்யவேண்டிய துண்டு. தீக்ஷை மூலம் மந்த்ரங்களைப் பெற்றவர்களுக்கு இந்தப் பூஜை செய்தாகவேண்டிய கட்டாயம் உண்டு. தீக்ஷையின்றி மந்த்ரத்தைப் பெற்றவர்கள் விரிவாகச் செய்யாவிட்டாலும் பின்வரும் மந்த்ரங்கள் சொல்லிச் செய்யலாம்.

(முக்கோணம் மேல் கோட்டிற்கும் ஷட்கோணத்திற்கும் இடையில்)

திவ்யௌகேப்யோ நம:
ஸித்தௌகேப்யோ நம:
மானவௌகேப்யோ நம: என்று சொல்லி பூஜிக்கவும்.

* இது மூலமந்த்ரத்தின் ஹ்ருதயாதி ந்யாஸத்தில் உள்ள மந்த்ரம். உபதேசத்தில் இதில் மாறுதல் இருக்குமாதலால். அதன்படி சொல்லவும்.

நான்காவது ஆவரணம்

புஷ்பாக்ஷதை எடுத்துக்கொண்டு "துரீயாவரண தேவதாப்யோ நம:" என்று சொல்லி மண்டலத்தில் ஷட்கோணத்திற்கு அடுத்துள்ள 8 தாமரை இதழ்களில் சமர்ப்பிக்கவும். இந்த நான்காவது ஆவரணமாவது ஆறுகோணப்பகுதிக்கு அடுத்து, எட்டு இதழ்கள் கொண்ட தாமரையாகும். அதில் ஸாதகனுக்கும் பகவானுக்கும் எதிரில் உள்ள இதழ் 1 என்று வைத்துக்கொண்டு வலமாக (பிரதக்ஷிண முறையில்) 8 இதழ்களிலும் பூஜிக்கவும்.

ஓம் 3 ப்ராம்—ப்ராம்யை நம:
,, மாம்—மாஹேச்வர்யை நம:
,, கௌம்—கௌமார்யை நம:
,, வைம்—வைஷ்ணவ்யை நம:
,, வாம்—வாராஹ்யை நம:
,, மாம்—மாஹேந்த்ர்யை நம:
,, சாம்—சாமுண்டாயை நம:
,, ஹ்ரீம்—மஹாலக்ஷ்ம்யை நம:

இங்கும் தூபதீப நிவேதனம் முதலானதுகள் செய்யப்படுவதுண்டு.

புஷ்பாக்ஷதை எடுத்துக்கொண்டு,

ஓம் 3 "அபீஷ்ட ஸித்திம் மே தேஹி சரணாகத வத்ஸல ।
பக்த்யா ஸமர்ப்பயே துப்யம் துரீயாவரணார்ச்சனம்" ।

மண்டலத்தில் அர்ப்பணம் செய்யவும்.

ஐந்தாவது ஆவரணம்

இது 8 தளமுள்ள தாமரைக்கு அடுத்துள்ள சதுரமான பகுதியாகும். இங்கு கிழக்கு முதலான திசைகள் பற்றிய கருத்து வேறுபாடுகள் உண்டு. பூஜை செய்யும் தெய்வத்திற்கும் ஸாதகனுக்கும் பூஜை செய்யப்படும் தெய்வத்திற்கும் இடையில் உள்ள பகுதி கிழக்கு என்று வைத்துத்தான்

பூஜையில் பிற திசைகள் பற்றிக் கூறப்படும் இடங்களைத் தீர்மானித்தல் வேண்டும். இவ்விஷயத்தில் திக்பாலகர்களின் (கிழக்கு முதலான திசைகளின் அதிபதிகள்) பூஜையில் மாத்திரம் சூரியன் உதிக்கும் திசை எதுவோ அதுவே கிழக்கு என்று கருதவேண்டும் என்று ஒரு சிலர் கூறுவர். பிரபஞ்ச ஸார ஸார ஸங்கிரக நூலில் பூஜையில் சாதகன் எந்த திசை நோக்கி அமர்ந்து பூஜை செய்தாலும் பூஜகன் பூஜ்யம் (தெய்வம்) இருவருக்கும் இடைப்பட்ட இடமே கிழக்கு என்று கற்பித்துக்கொண்டு பூஜிக்கச் சொல்லப் பட்டுள்ளது என்பதால் இந்த இடத்தை கிழக்கெனக் கொண்டே பிறதிசைகளையும் திக்பாலகர்களையும் காண வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்பதால் இங்கு பிரபஞ்ச ஸாரஸார ஸங்கிரஹத்தையனுசரித்து திக்பால பூஜை தரப்பட்டுள்ளது.

"பஞ்சமாவரண தேவதாப்யோ நம:" என்று புஷ்பாக்ஷதைகளை 5வது ஆவ்ரண தேவதைகளுக்குச் சமர்ப்பிக்கவும். சாதகனுக்கும் தெய்வத்திற்கும் இடைப்பட்ட இடம் கிழக்கு என்று பாவித்து அதில் இந்திரனையும் அதனைத் தொடர்ந்து அக்னி யமன் முதலான திக்பாலகர்களையும் பூஜை செய்யவும்.

ஓம் 3 லம் இந்த்ராய ஸுராதிபதயே குலிசதராய ஐராவத வாஹனாய ஸ்ரீ மஹாகணபதி பார்ஷதாய நம:

,, ரம் அக்நயே தேஜ அதிபதயே சக்திதராய மேஷ வாஹனாய ஸ்ரீ மஹாகணபதி பார்ஷதாய நம:

,, ஹம் யமாய ப்ரேதாதிபதயே தண்டதராய மஹிஷ வாஹனாய ஸ்ரீ மஹாகணபதி பார்ஷதாய நம:

,, ஷம் நிர்ருதயே ரக்ஷ அதிபதயே க்கட்கதராய ப்ரேத வாஹனாய (நரவாஹனாய என்பது பாடாந்தரம்) ஸ்ரீ மஹா கணபதி பார்ஷதாய நம:

इन्द्रादीनां विकल्पित दिक्क्रमेणैव पूजाक्रमः । न तु यथास्थितदिक्क्रमेण ॥

Prapancha Sara Sara Sangraha Part I, TNJ. 1962 Edn., Page. 72

ஓம் 3 வம் வருணாய ஜலாதிபதயே பாசதராய நக்ர வாஹனாய ஸ்ரீமகா கணபதி பார்ஷதாய நம:

,, யம் வாயவே ப்ராணாதிபதயே அங்குசதராய ஹ்ரிண வாஹனாய ஸ்ரீ மஹாகணபதி பார்ஷதாய நம:

,, ஸம் ஸோமாய நக்ஷத்ராதிபதயே கதாதராய சச வாஹனாய (அச்வ வாஹனாய என்றும் பாடாந்தரம் உண்டு) ஸ்ரீ மஹாகணபதி பார்ஷதாய நம:

,, சம் ஈசானாய வித்யாதிபதயே த்ரிசூலதராய விருஷப வாஹனாய ஸ்ரீ மஹாகணபதி பார்ஷதாய நம:

[இங்கு இதற்கு மேல், அனந்த — ப்ரம்மா இருவருக்கும் பகவானுக்கு ஈசான திக்கிலும், நிர்ருதி திக்கிலும் பூஜை செய்ய வேண்டும். இந்த இருவருக்கும் (அனந்தன்-ப்ரம்மா) ஸ்ரீ மஹாகணபதி சம்பந்தப்பட்ட பூஜையில் இடமில்லையென்று எண்ணும் வகையில் சில நூல்களில் இவர்களுக்குப் பூஜை சொல்லப்படவில்லை. ஆனால் பிரபஞ்சாஸார ஸாரஸங்க்ரஹ நூலை அனுசரித்து அவ்விருவருக்கும் பூஜை உண்டு]

ஓம் 3 அனந்தாய நாகாதிபதயே சக்ரதராய கூர்ம வாஹனாய ஸ்ரீ மகா கணபதி பார்ஷதாய நம:

ஓம் 3 ப்ரம்மணே லோகாதிபதயே பத்மதராய ஹம்ஸ வாஹனாய ஸ்ரீ மஹாகணபதி பார்ஷதாய நம:

இங்கு இந்த ஐந்தாவது ஆவரண தேவதைகளுக்குத் தூபம், தீபம், நிவேதனம் முதலானதுகள் செய்யப்படுவதுண்டு.

மறுபடி புஷ்பாக்ஷதம் எடுத்து—

ஓம் 3 அபீஷ்ட ஸித்திம் மே தேஹி சரணாகத வத்ஸல ।
பக்த்யா ஸமர்ப்பயே துப்யம் பஞ்சமாவரணார்ச்சனம் ॥

ஐந்தாவது ஆவரண தேவதைகளை சமஷ்டியாக (யாவருக்கும் சேர்த்து) பூஜிக்கவும்.

இந்த ஐந்து ஆவரணங்களில் உள்ள தேவதைகளைப் பூஜித்த பிறகு இவர்களோடு கூடிய — ஸ்ரீமஹாகணபதியையும் சமஷ்டியாகப் பூஜித்தல் வேண்டும்.

ஓம் 3 ஸர்வாவரண தேவதா ஸஹிதாய ஸ்ரீ வல்லபா சக்தி ஸமேதாய ஸ்ரீ மஹாகணபதயே நம: ஆஸனார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி

என்று ஆஸனம் முதல் சந்தனம், குங்குமம், அக்ஷதம், புஷ்பம் சமர்ப்பித்துப் ஸ்ரீம்ஹாகணபதி ஸஹஸ்ரநாமாக்களாலோ — (1000 நாமாக்கள்) — அல்லது அஷ்டோத்தர சத நாமாக்களாலோ — (108 நாமாக்கள்) — பூஜை செய்து தூப், தீப், நிவேதனம், தாம்பூலம், நீராஜனம் செய்து புஷ்பாஞ்ஜலி செய்ய வேண்டும்.

புஷ்பாஞ்ஜலி

ஓம் மூலமந்த்ரம் சொல்லி ஸர்வாவரணதேவதா ஸஹிதாய ஸ்ரீ வல்லபா சக்தி ஸமேதாய ஸ்ரீ மஹா கணபதயே நம: மந்த்ர புஷ்பாஞ்ஜலிம் ஸமர்ப்பயாமி என்று சொல்லி யந்த்ரத்தின் நடுவில் ஸ்ரீ வல்லபா மஹா கணபதி மூர்த்தி மீது சமர்ப்பித்துப் பின்வரும் மந்த்ரம் சொல்லியவாறு மும்முறை பிரதக்ஷிணம் செய்யவும்:

பிரதக்ஷிணம்

ஓம் 3 யானி கானி ச பாபானி ஜன்மாந்தரக்ருதானி ச ।
தானி தானி விநச்யந்தி பிரதக்ஷிணபதே பதே ॥

ப்ரக்ருஷ்ட பாப நாசாய ப்ரக்ருஷ்ட பல ஸித்தயே ।
ப்ரதக்ஷிணம் கரோமி த்வாம் ப்ரஸீத கணநாயக ॥

அஷ்டாங்க நமஸ்காரம் செய்யவும்

பிரார்த்தனை செய்து ஒரு உத்தரணி ஜலம் எடுத்து,

"ஓம் 3 ஸ்ரீ வல்லபா சக்தி ஸமேதாய ஸ்ரீ மஹா கணபதயே ப்ரஸன்னார்க்யம் இதம் ஸமர்ப்பயாமி" என்று சொல்லி அர்க்யம் அளித்து மறுபடியும் ஒரு உத்தரணி ஜலம் எடுத்து,

இத: பூர்வம் ப்ராண புத்தி தேஹ தர்மாதிகாரத: ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி அவஸ்தாஸு மனஸா, வாசா கர்மணா, பத்ப்யாம், உதரேண, சிச்னா யத் ஸ்மிருதம் யத் உக்தம் யத் க்ருதம் யதனுஷ்ட்டிதம் தத் ஸர்வம் ப்ரம்மார்ப்பணம் பவது ஸ்வாஹா, மாம் மதீயம் ச ஸகலம் அஸ்மத் ஸ்வாமினே ஸ்ரீ மஹாகணபதயே ஸம்யக் அர்ப்பயே ஓம் தத் ஸத். பகவானுக்கு முன்னால் கீழே விடவும்.

சங்க உத்வாஸனம்

சங்கை ஜலத்துடன் எடுத்து, பின்வரும் மந்த்ரம் சொல்லி பகவானைச் சுற்றி வலமாக மூன்று சுற்றுச் சுற்றி தம் கையில் விட்டு, தன்னையும் தன் குடும்பத்தாரையும், பந்து மித்ரர்களையும் ப்ரோக்ஷிக்கவும். அவர்கள் மீது தெளிக்கவும்.

"சங்க மத்யஸ்திதம் தோயம் ப்ராமிதம் ஸ்ரீ கணோபரி ।
அங்க லக்னம் மனுஷ்யாணாம் ப்ரம்மஹத்யாயுதம் தஹேத்॥

பிறகு சங்கை சுத்தமாகத் துடைத்து பாதுகாப்பாக வைத்துவிட்டு, அபிஷேகம் செய்யப்பட்ட தீர்த்தத்தை ஒரு உத்தரணி எடுத்து பின்வரும் மந்த்ரம் சொல்லி அருந்தவும்.

அகாலமிருத்யு ஹரணம், ஸர்வ வியாதி நிவாரணம் ।
ஸமஸ்தபாப க்ஷய்கரம் கணபதிதோதகம் சுபம் ॥

என்று, இவ்வாறு தினமும் பூஜை செய்துவிட்டு, புரஸ்ச்சரண ஜபம் முதலானவற்றைச் செய்யவும். இந்த மஹாகணபதி விதானத்தில் ஒரு லக்ஷம் புரஸ்ச்சரணம் (பூர்வசேவை) போதும் என்று உள்ளது.

குறிப்பு: இந்தப் பூஜையில் விசேஷார்க்யம் என்ற பகுதி சொல்லப்படவில்லை. அதை குருமுகமாகக் கேட்டு அறியலாம்.

महागणपतिविधानग्रन्थस्य शिष्टो भागः —

सुवर्णप्राप्त्यै मधुना । गोघृतेन लक्ष्म्यै, उर्व्याप्तये तण्डुलैः ॥ यन्त्रं कार्यम् । साधनं सम्प्रवक्ष्यामि देहशुद्धिकरं परम् । पर्वताग्रे नदीतीरे अश्वत्थे च शिवालये । गोष्ठे मनोहरे रम्ये शुचौ देशे च साधयेत् । पूर्वसेवा—लक्षजपः । अयुतहोमः । द्रव्यम्—मोदक लाजा नारिकेलघृतयुतैः कदलीफलमातुलुङ्गैस्तु पुष्पैः [पुष्परसैः] ॥ देवे प्रसन्ने जाते । ततः प्रयोगः । वश्य आकर्षण पुष्टि मारण—उच्चाटन स्तम्भननिर्देशः । खिलनं । वेतालसाधनम् । रसापणवि॰ पादुका । अञ्जनम् । घुटिका । खड्गम् । राजवश्यम् । स्त्रीवश्यम् । यक्षिणीसाधनम् । एवमादिसाधनम् ।

स्थाने शुभे शुचिर्भूत्वा रक्तगन्धानुलेपनः ।
रक्तपुष्पैः समभ्यर्च्य गणेशं सर्वकामदम् ।
जपेदष्टसहस्राणि होमं कुर्याद्दशांशतः ।
रक्तश्च मारपुष्पाणि(?) होमयेत् त्रिमधुप्लुतैः ।
[मारपुष्पाणि अरविन्दादिकानि]
राजानो वश्यतां यान्ति सभृत्यबलवाहिनीम् ।

इति राजवश्यम् ॥

रक्तचन्दनमिश्रितै रक्तपुष्पैर्होमयेन् सर्वलोकवश्यम् । ब्राह्मण-वश्यम् । ब्रह्मवृक्षपुष्पैर्होमयेत् घृतप्लुतैः ॥ पूर्वसङ्ख्यानुक्रमेण । स्त्रीवश्ये ८००० जपः । राजिकालवणेन दशांशहोमः । तद्भस्म वामहस्तेन गृहीत्वा तां ताडयेत् । स्वयमायाति । शिवालये लक्षं जपेन् । त्रिमध्वायसामह — अर्थलाभः । आयुतं पायसं सर्पिर्युतं होमः । कीर्ति [कीर्तये] लक्ष(म्) उत्पलैः मधुसंयुक्तैरष्टसहस्रं होमः । राजवश्यम् राजपत्न्या सह । एरण्डसमिद्भिरष्टसहस्रं विधवा वशम् अर्थदा भवति । अष्टसहस्रं जातीकुसेमेन होमः । मेधावी वेदार्थल०(?) दूर्वाङ्कुरसमिद्भिः अयुतं जुहुयात् मृत्युञ्जयो भवति । अरिसेनास्तम्भनम्—अयुतद्वयहोमेन पीतपुष्पैः समाहितः । रिपुसैन्यं स्तम्भयेत् ।

विभीतकसमिद्भिस्तु जुहुयाच्चायुतद्वयम् ।
उच्चाटनं न सन्देहः स्वस्थानप्राप्तिः ।
गिरिवृक्षादीनामयुच्चाटनं किं मनुस्याः ॥
अधोपुष्पी तथा लज्जा श्वेता च गिरिकर्णिका ।
लजावर्तसमायुक्तं मधुकर्पूरमिश्रितम् ।

मन्त्रेणायुतद्वयहोमः । अनेनाञ्जनमात्रेण निधानानि च पश्यति ॥ वटवृक्षसमीपे लक्षं जपेत् । यक्षिणी सिद्धा भवेत् । द्रव्यदा भवति । रात्रावुपवासेन वचामानीय स्नानं कृत्वा देवं पूजयित्वा वचां स्पृष्ट्वाऽयुतं जपेत् । सूक्ष्मचूर्णकापिलाज्येन युतं स्वल्पमात्रं प्राशयेत् । एवं मासमात्रं कृत्वा कविर्भवति । अथ घुटिका ॥ अथ श्रीचक्रयन्त्रनिर्माणप्रकारः । अथवा हैमरौप्याभ्यां तपस्त्रेण बहुधातुभिः । पट्टं विरज्य श्रीखण्डरक्तचन्दनसम्भवे ; पट्टे

संस्थाप्य विलिखेल्लेखन्या हेमया प्रिये । रोचनाकुङ्कुमाभ्यां तु कस्तूरीचन्दनेन्दुभिः । गण्डकीतीरपाषाणे स्वर्णे रजतताम्रके । काश्मीरदर्पणे भूर्जे चारुपीठ लिखेद्बुधः । इति ।। लिखनप्रकारः —

ईशानादग्निपर्यन्तामृजुरेखां समालिखेत् ।
ईशादग्नेस्तथाग्राभ्यां रेखे आकृष्य देशिकः ।।
एकीकृत्य च वारुण्यां शक्तिरेखा परप्रिये ।
त्रिकोणाकाररूपं तु शक्तिद्वयमुदाहृतम् ।
पूर्वशक्त्यग्रभागे तु मानं यष्टिवदालिखेत् ।।
रेखां तु परमेशानि वायुराक्षसकोणगाम् ।
सन्धिभेदक्रमेणैव तयोः शक्त्योः परस्परम् ।।
रेखे आकृष्य कोणाभ्यां तदग्रात्पूर्ववत्कुरु ।
वह्निमण्डलमेतत्तु पूर्वाग्रं वीरवन्दिते ।
चक्रत्रयमभूदन्ते ततः शृणु वरानने ।।
पूर्वशक्तिशवह्निभ्यां कोणाभ्यां सुरवन्दिते ।
पूर्वरेखां तु विस्तार्य तथा पश्चिमवह्नितः ।
वायुराक्षसकोणाभ्यां रेखां पश्चिमगां लिखेत् ।।
विस्तार्य योजयेद्देवि सन्धिभेदक्रमेण तु ।
योन्यग्रगां पूर्वदेशे दक्षिणोत्तरतःक्रमात् ।
तथा रेखा तथा संस्थे पश्चिमस्यां दिशि क्रमात् ।।
तथैव देवदेवेशि द्वितीयं दशकोणकम् ।
ईशानवह्निगे रेखे पूर्वयोन्यग्रयोः क्रमात् ।
विस्तार्य योजयेत्पश्चात् पश्चिमस्यां दिशि क्रमात् ।
वायुराक्षसकोणाग्रे रेखे विस्तार्य पूर्ववत् ।

पश्चिमाग्रे तदा देवि योजयेदिन्द्रदिग्गते ।
एकां तु पूर्वकोणाग्रचुम्बिनीं तु मनोहराम् ।
योजयेद्देवदेवेशि यथा पङ्क्त्यस्रकं भवेत् ।
दशकोणस्य देवेशि त्यक्त्वा कोणचतुष्टयम् ।
दशकोणान्तयोर्देवि मध्यरेखां प्रकाशयेत् ।
द्वे दक्षिणे विभागे तु तथा चोत्तरभागगे ।
षट्कोणस्य ततो देवी सन्धिभेदक्रमेण तु ।
योनिं वह्निं च संयोज्य शक्रारं जायते तदा ।
कक्षाकक्षागत रेखा ऋजुरेखास्तु योजयेत् ।
ऋज्वाकृति यथा देवि जायतेऽतिमनोहरम् ।
सम्मुखं पञ्चशक्त्यग्रं प्रागग्रं चतुरस्रकम् ।
वह्नित्रिकोणवस्वारचक्रमेतद्वरानने ।
मध्यचक्रं तु जानीहि दशारयुगलं तथा ।
शक्रयोन्यङ्कितं देवी बाह्यमध्यगतं भवेत् ।
एतच्चक्रं महेशानि सर्वसौभाग्यवर्धनम् ।
सर्वसाम्राज्यदं चैव शिवेन कथितं पुरा ।

॥ इति महागणपतेर्मन्त्रयन्त्रविधानं सम्पूर्णम् ॥

॥ श्रीगणेशार्पणमस्तु ॥

॥ श्रीरस्तु ॥

॥ शुभमस्तु ॥

॥ ऐश्वर्यमस्तु ॥

॥ दीर्घायुरस्तु ॥

ஹோமம் : (அக்னிகார்யம்)

புரஸ்ச்சரணத்தின் அங்கமாக ஹோமம் செய்யப்பட வேண்டும் என்பதால் ஹோமம் செய்ய வேண்டிய விதிகள் சுருக்கமாகத் தரப்படுகின்றன. வைதிக முறைப்படிக்கான ஹோம விதிகள் இங்கு தரப்படவில்லை. அந்தந்த வேத வழிகளைப் பின்பற்றுகிறவர்கள். அந்தந்த "கிருஹ்ய ஸூத்ர" விதிகளையனுசரித்து ஹோம குண்டத்தில் "முகாந்தம்" செய்துவிட்டு அந்த அக்னியில் ஆதார சக்தி முதல் பீட சக்தி தேவதைகள் முடிய பூஜை செய்துவிட்டு, பகவானை ஆவாஹனம் செய்து பிராணப் பிரதிஷ்டை செய்து 'ஷோடச' அல்லது 'தச' அல்லது 'பஞ்ச' உபசார பூஜை செய்துவிட்டுத் தயார் செய்யப்பட்டுள்ள அஷ்ட திரவ்யங்களைக் கொண்டு ஹோமம் செய்ய வேண்டும்.

ஹோம குண்டம் : சதுரமான குண்டத்திலோ அல்லது 1 அங்குல உயரமான பீடத்தில் அமைக்கப்பட்ட வேதிகையில் அமைக்கப்பட்ட [ஸ்த்தண்டிலம்] ஹோம குண்டத்திலோ அக்னியை வளர்த்து ஹோமம் செய்யலாம். முன்பாகச் செய்யப்பட்ட ஜப எண்ணிக்கையில் 10ல் ஒரு பாகம் ஹோமம் தசாம்ச ஹோமம் செய்யப்படவேண்டும்.

க்ருஹ்ய ஸூத்ர வழியைப் பின்பற்ற முடியாதவர்கள் லௌகிக அக்னியில் ஆவாஹனம் செய்து ஹோமம் செய்யலாம். லௌகிக அக்னியிலும் ஹோமம் செய்ய சில விதிமுறைகளைப் பின்பற்றியாக வேண்டும். தாந்திரிக ஹோம விதிகள் மிகவும் கடினமானவை என்பதால் எளிதாகக் கூறப்பட்ட வழியில் பிரபஞ்சஸார ஸார ஸங்கிரஹத்தை அனுசரித்து ஹோம விதிகள் எழுதப் படுகின்றன.

அக்னி ஜனனம் — அக்னி ப்ரதிஷ்டை

ஹோமம் செய்வதற்குத் தயார் செய்யப்படும் அக்னியை எக்காரணம் கொண்டும் 'நெருப்பு' என்று

சொல்லலாகாது. 'அக்னி' என்றே சொல்லப்பட வேண்டும். ஸாமான்ய அர்க்ய (சங்கு) ஜலத்தால் ஹோம குண்டத்தை ப்ரோக்ஷித்து (அதன்மீது தெளித்து) ஒரு சமித்தால்* அந்த குண்டத்தில் மேற்கு – கிழக்காக மூன்று கோடுகளும் தெற்கு – வடக்காக மூன்று கோடுகளும் எழுதி (இதிலும் மாற்றம் உண்டு) அந்தக் கோடுகளில் ஓம் 3. ப்ரம்மணே நம:, ஓம் 3. யமாய நம:, ஓம் 3. ஸோமாய நம:, ஓம் 3 ருத்ராய நம: ஓம் 3 விஷ்ணவே நம: ஓம் 3 இந்த்ராய நம: என்று புஷ்பாக்ஷதம் கொண்டு பூஜிக்கவும். பிறகு ஹ்ருதயாதி அங்க ந்யாஸ முறையில் பின்வரும் மந்த்ரம் சொல்லி தன் உடலில் ந்யாஸங்கள் செய்யவும்.

ஓம் ஸஹஸ்ரார்ச்சிஷே	ஹ்ருதயாய நம:
,, ஸ்வஸ்தி பூர்ணாய	சிரஸே ஸ்வாஹா
,, உத்திஷ்ட்ட புருஷாய	சிகாயை வஷட்
,, தூம வ்யாபினே	கவசாய ஹும்
,, ஸப்த ஜிஹ்வாய	நேத்ரத்ரயாய வௌஷட்
,, தனுர்தராய	அஸ்த்ராய ப்பட்

அக்னி மந்த்ரஸ்ய 'ப்ருகு' ரிஷி:, காயத்ரீ ச்சந்த:, ஹுதாசனோ தேவதா, என்று ரிஷ்யாதி நியாஸங்கள் செய்துகொண்டு முன்னாள் சொல்லப்பட்ட ஷடங்க மந்த்ரங்களால் (ஓம் ஸஹஸ்ரார்ச்சிஷே முதல்) குண்டத்தை பூஜிக்கவும். அந்தக் குண்டத்தில் 8 கோணம், 6 கோணம், முக்கோணம் கொண்டதான அக்னி மண்டலத்தை எழுதி பாவனையாக எழுதப்பட்ட த்ரிகோணத்தின் நடுவில் அக்னி பீட சக்திகளை பிரணவத்துடன் பின்வரும் மந்த்ரம் சொல்லிப் பூஜிக்கவும்.

---

* 'ஸமித்து' என்பது மந்த்ரம் சொல்லி அக்னியில் ஹோமம் செய்வதற்குத் தகுதியான சிலவகை மரங்களின் சாண் அளவுள்ள குச்சி. இதை 'ஸமித்து' என்று சொல்ல வேண்டும்.

1) ஓம் பீதாயை நம: 2) ச்வேதாயை நம: 3) அருணாயை நம: 4) க்ருஷ்ணாயை நம: 5) தூம்ராயை நம: 6) தீவ்ராயை நம: 7) ஸ்ப்புலிங்கின்யை நம: 8. ருசிராயை நம: 9) ஜ்வாலின்யை நம:

பிறகு தம் தமஸே நம:, ரம் ரஜஸே நம:, ஸம் ஸத்வாய நம: ஆத்மனே நம:, அந்தராத்மனே நம:, பரமாத்மனே நம:, க்ஞானாத்மனே நம:, என்று அர்ச்சனை செய்துவிட்டு தோன்ற இருக்கும் அக்னியின் பெற்றோர்களான வாகீச்வரி – வாகீச்வரன் இருவரையும் அதே பீடத்தில் அர்ச்சனை செய்து ஹ்ராம் — வாகீச்வரீ வாகீச்வராப்யாம் நம: என்று சொல்லி அவர்களை தியானித்து அரணிக் (வன்னிக்) கட்டையைக் கடைந்தோ சூரிய ஒளியைக் காந்தக் கல்லில் செலுத்தியோ யாகம் செய்த அந்தணரின் வீட்டிலிருந்து அல்லது தம் வீட்டிலிருந்தோ அக்னியைத் தருவித்து அதை மண் அல்லது தாமிரப் பாத்திரத்தில் வைத்து குண்டத்திற்கு அக்னி மூலையிலோ, ஈசான்ய மூலையிலோ நிர்ருதி திசையிலோ வைத்து அந்த அக்னியில் உள்ள க்ரவ்யாத (ராக்ஷஸ) அம்சத்தை நிர்ருதி திசையில் தியாகம் செய்து (சிறிது எடுத்துப் போட்டுவிட்டு) அந்த அக்னியைப் பார்த்தல், ப்ரோக்ஷித்தல், அடித்தல், (தாடனம்) அவகுண்டனம் முதலானவற்றால் சுத்தம் செய்து.

ஓம் வைச்வானர, ஜாதவேத, இஹாவஹ லோஹிதாக்ஷ, ஸர்வ கர்மாணி ஸாதய ஸ்வாஹா என்று சொல்லியவாறு, மூலாதாரத்திலிருந்து எழும்பிய ஞானாக்னியை நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்படுவதாக பாவித்து அந்த அக்னியை குண்டத்தில் உள்ள அக்னியில் சேர்க்கவும்.

பிறகு அந்த அக்னியை 'ப்பட்' என்று ஸம்ரக்ஷணம் செய்து பூஜித்து, 'ஹெளம் வெளஷட்' எனும் மந்த்ரம் சொல்லி தேனு முத்ரை காண்பித்து (கடைசியில் விளக்கம் உள்ளது) குண்டத்தின் மேல்புறமாக 3 முறை வலமாகச்

சுற்றி "வாகீச்வர பீஜாய நம:" என்று சொல்லி அந்த அக்னியை வாகீச்வரனின் பீஜமாக பாவித்து அந்தக் குண்டத்தில் இடவும். பிறகு,

"அக்னிம் ப்ரஜ்வலிதம் வந்தே ஜாதவேதம் ஹுதாசனம் ।
ஸ்வர்ண வர்ணம் அமலம் ஸமித்தம் ஸர்வதோ
(விச்வதோ) முகம் ॥"

எனக்கூறி வணங்கி, ஹூம் என்னும் மந்திரம் சொல்லி, விறகுக் குச்சிகளால் அந்த அக்னியை மூடி, அக்னியை ஜ்வாலையுடன் கூடியதாக பின்வரும் மந்த்ரம் சொல்லி "உத்திஷ்ட்ட புருஷ ஹரித பிங்கல லோஹிதாக்ஷ. ஸர்வ கர்மாணி ஸாதய ஸ்வாஹா" (அக்னியை எழச் செய்து) "சித்பிங்கள, ஹன ஹன, தஹ தஹ, பச பச, ஸர்வக்ஞ ஆக்ஞாபய ஸ்வாஹா" என்று சொல்லி, அக்னியை ஜ்வாலையுடன் கூடியதாக எரியச்செய்து, வாகீச்வரியின் கர்ப்பத்தில் அக்னி தரிக்கப்பட்டதாக தியானித்து, "கர்ப்பாக்னயே நம: என்று கூறி புஷ்பாக்ஷதை கொண்டு பூஜித்து, கர்ப்ப ரக்ஷைக்காக 7 தர்ப்பைகளால் ஒரு கங்கணம் வளையமாகச் செய்து, வாகீச்வரியின் கையில் பாவனையாக அணிவித்து, கர்ப்பாதானம் பும்ஸவனம் முதலான கர்மாக்களைச் செய்யவேண்டும். அவை பின்வருமாறு:—

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் நம என்று பூஜித்து.

கர்ப்பாதானம் : ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கர்ப்பாதான கர்ம கல்ப்பயாமி நம:
3 முறை எள்ளால் ஹோமம் செய்க

பும்ஸவனம் : " " பும்ஸவன கர்ம கல்ப்பயாமி ஸ்வாஹா
3 முறை எள்ளால் ஹோமம் செய்க

ஸீமந்த உன்னயனம்: ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஸீமந்த உன்நயன கர்ம கல்ப்பயாமி வஷட்
3 முறை எள்ளால் ஹோமம் செய்க

ஜனனம் : ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஜனனகர்ம கல்ப்பயாமி ஹூம் [3 முறை எள்ளால் ஹோமம் செய்க

கர்ப்ப மலம் நீங்க ஸ்நாநம்: ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கர்ப்ப மலாபஹ ஸ்நாநம் கல்ப்பயாமி நம: தர்ப்பைகளால் அக்னியை எரியச் செய்க

வாகீச்வரியின் கையில் பாவனையாகக் கட்டப்பட்ட தர்பை வளையத்தை அவிழ்த்தெறிந்து வாகீச்வரி ஸ்வர்ண வளையல்கள் அணிந்ததாக பாவனை செய்து புஷ்பாக்ஷதம் கொண்டு "நம:" என்று சொல்லி அர்ச்சித்து—

ஜனனத் தீட்டு விலக: ஒரு கிண்ணத்தில் ஜலம் எடுத்து 'ப்பட்' என்று சொல்லி ஜபம் செய்து அந்த நீரால் குண்டத்தை புரோக்ஷித்து. தர்பை எடுத்து 'ப்பட்' எனச் சொல்லி குண்டத்தை அடிக்கவும்.

பரிஸ்தரணம்

அக்னியின் பாதுகாப்பிற்காக குண்டத்தின் கிழக்கு மேற்கு திசையில் வடக்கு முகமாக சில தர்பைகள் போட்டும், வடக்கு தெற்கு திசையில் கிழக்கு முகமாக தர்பைகள் போட்டும், (இதற்கு பரிஸ்தரணம் என்று பெயர்) ஐந்து ஸமித்துக்களை எடுத்து அவற்றின் அடியிலும், நுனியிலும் நெய் தடவப்பட்டு. 'ப்பட்' எனக் கூறி ஒவ்வொன்றாக அல்லது ஐந்தையும் சேர்த்து ஹோமம் செய்யவும்.

புஷ்பாக்ஷதம் எடுத்து குண்டத்தைச் சுற்றி கிழக்கில், தெற்கில், மேற்கில், வடக்கில் போடப்பட்டுள்ள தர்பை களை,

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ப்ரம்மணே நம:
" " விஷ்ணவே நம:
" " ருத்ராய நம:
" " ஈச்வராய நம: எனப் பூஜிக்கவும்.

திக்பால பூஜனம்

மறுபடி புஷ்பாக்ஷதம் எடுத்து குண்டத்தின் கிழக்கு, தென்கிழக்கு. தெற்கு. தென்மேற்கு. மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு திசைகளில்,

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் இந்த்ராய நம:
,, ,, அக்னயே நம:
,, ,, யமாய நம:
,, ,, நிர்ருதயே நம:
,, ,, வருணாய நம:
,, ,, வாயவே நம:
,, ,, ஸோமாய நம:
,, ,, ஈசானாய நம:

ஸ்ருக்ஸ்ருவ ஸம்மார்ஜனம்

வலது கையில் இரு தர்பைகளையும் இடது கையில் 'ஸ்ருக்' 'ஸ்ருவம்' எனும் ஹோமம் செய்வதற்காகவுள்ள இரண்டு (மரத்தாலான நீண்ட கரண்டிகள் போன்றவை அல்லது இரு மாவிலைகள்) சாதனங்களையும் வைத்துக் கொண்டு சேர்த்து அக்னியில் காண்பித்து ஜலத்தை தர்பைகளால் தொட்டு எடுத்து. ஸ்ருக் — ஸ்ருவங்களை ப்ரோக்ஷனம் செய்து (மீது தெளித்துத் துடைத்து) மறுபடி அவ்வாறே அக்னியில் காண்பித்து தனக்கு இடது புறத்தில் தர்பைகள் மீது ஸ்ருக் – ஸ்ருவங்களை வைத்து, கையில் உள்ள தர்பைகளை அக்னியில் போட்டுவிட்டு புஷ்பாக்ஷதம் எடுத்து 'நம:' என்று சொல்லி ஸ்ருக் ஸ்ருவங்களை பூஜிக்கவும்,

(இந்த ஸ்ருக் - ஸ்ருவம் இரண்டும் அத்தி அல்லது கருங்காலி மரத்தால் செய்யப்பட்டவை. யாகத்திற்குப் பயன்படும் மரத்தாலும் செய்யப்படுவதுண்டு. இவை அடிக்கடி ஹோமம் செய்பவருக்குப் பயன்படுபவை என்பதால் அத்தி அல்லது கருங்காலி போன்ற மரத்தால்

செய்து வைத்துக்கொள்வர். ஆனால் எப்போதாகிலும் ஹோமம் செய்பவர்கள் நல்ல பூச்சியரிக்காத முற்றிய மாவிலைகளை இதற்கு உபயோகிப்பர்.)

(ஆஜ்ய நெய் ஸம்ஸ்காரம்)

பிறகு, உருக்கிய பசு நெய்யை மரத்தாலான அல்லது வாயகன்ற பித்தளை கிண்ணத்திலோ வேறு தாமிரப் பாத்திரத்திலோ (டபரா போன்றது) எடுத்து அதனை,

'நம;' எனக் கூறிப்பார்த்து,
'வஷட்' எனக்கூறி ப்ரோக்ஷித்து,
'ப்பட்' என்று தர்ப்பையால் தாடனம் செய்து,
'ஹூம்' என்று அவகுண்டனம் செய்து,

தன் உடலை ப்ரம்ம மயமாக பாவித்துக்கொண்டு, அந்த ஆஜ்ய பாத்ரத்தை அக்னி குண்டத்தின் மேலாக மூன்று முறை வலமாகச் சுற்றி அக்னி திக்கில் வைத்து தர்பையால் நெய்யை யெடுத்து ஓம் ஹாம் ப்ரம்மணே ஸ்வாஹா என்று அக்னியில் ஹோமம் செய்து,

மறுபடி தன் உடலை விஷ்ணு மயமாகப் பாவித்து நெய்ப் பாத்திரத்தை ஈசான்ய திக்கில் வைத்து தர்பையால் நெய்யெடுத்து "ஓம் ஹ்ரீம் விஷ்ணவே ஸ்வாஹா" என்று சொல்லி அக்னியில் ஹோமம் செய்து பிறகு தன் உடலை ருத்ர மயமாக பாவித்து தொப்பூழ் ஸ்தானத்தில் வைத்து தர்பையால் நெய்த்துளிகளை யெடுத்து ஓம் ஹூம் (ஹூம்) ருத்ராய ஸ்வாஹா எனச் சொல்லி அக்னியில் ஹோமம் செய்து — நெய்ப்பாத்திரத்தைத் தனக்கு வடக்கில் வைத்து பிறகு குண்டத்தின் வெளியில் எதிரில் வைத்து இரு தர்பைகளையெடுத்து அதைத்திரித்து ஒரு முடிச்சிட்டு அதை அந்த நெய்ப்பாத்திரத்தில் வைத்து மும்முறை அரைத்து (முன்னும் பின்னுமாகத் தள்ளுவது இதற்கு 'உத்பவனம்' என்று பெயர்) பிறகு அந்த முடிச்சிட்ட தர்பையை அவிழ்த்து அக்னியில் வைக்கவும். பிறகு ஒரு

தர்பையை யெடுத்து அக்னியில் வைக்கவும். பிறகு ஒரு தர்பையை யெடுத்து அக்னியில் காண்பித்து எரியச் செய்து பிறகு 'நம:' என்று சொல்லி நெய்ப்பாத்திரத்தில் காண்பித்து 'ப்பட்' எனக்கூறி அக்னியில் போடவும்.

மறுபடி ஒரு தர்பையை அக்னியில் எரியச் செய்து அதை நெய்ப்பாத்திரத்திற்கு 'ஹூம்' என்று கூறிக் காண்பித்துவிட்டு அக்னியில் போடவும்.

மறுபடி ஒரு சாண் அளவுள்ள இரண்டு தர்பைகளை முறுக்கி — நடுவில் முடிச்சு உள்ளதாகச் செய்து அதனை 'ஓம்' எனக் கூறி நெய்ப்பாத்திரத்தில் நெய் நடுப்பகுதியில் கிழக்கு நுனியாக வைத்து — அதன் வலப்புறம் கிருஷ்ண பக்ஷம் (தேய்பிறை) எனவும் இடது புறம் சுக்ல பக்ஷம் (வளர்பிறை) யெனவும் பாவிக்கவும். மேலும் நெய்யில் வைக்கப்பட்ட பவித்திரத்தில் வலப்புறத்தை 'பிங்களா' நாடியாகவும், இடப்புறத்தை 'இடா' நாடியாகவும் நடுப் பகுதியை 'ஸுஷும்னா' நாடியாகவும் பாவிக்கவும். பிறகு அந்த வலது பக்கத்து நெய்யை ஸ்ருவத்தால் எடுத்து 'ஓம் ஹாம் அக்னயே ஸ்வாஹா' என்று அக்னியின் வலது கண்ணில் ஹோமம் செய்து, மறுபடி இடது பக்கத்து நெய் யெடுத்து 'ஓம் ஹாம் ஸோமாய ஸ்வாஹா' என்று சொல்லி அக்னியின் இடது கண்ணில் ஹோமம் செய்து மறுபடி நடுப்பகுதியில் நெய்யெடுத்து 'ஓம் ஹாம் அக்னீ ஷோமாப்யாம் ஸ்வாஹா' என்று சொல்லி அக்னியின் நடுக்கண்ணில் ஹோமம் செய்து மறுபடி நெய்யெடுத்து ஓம் ஹாம் அக்னயே ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா'-என்றுகூறி அக்னியில் வாய்ப்புறத்தில் கொஞ்சம் ஹோமம் செய்து விட்டு மீதியை 'ஹா' எனக் கூறி நெய்ப்பாத்திரத்திலேயே விடவும். இது ஹோமகாலம் தேய்பிறையானால் ஹோமம் செய்யும் முறையாகும். வளர்பிறையானால் பின்வருமாறு செய்யவும்.

ஓம் ஹாம் ஸோமாய ஸ்வாஹா (இடது கண்ணில்)
ஓம் ஹாம் அக்னயே ஸ்வாஹா (வலது கண்ணில்)

ஓம் ஹாம் ஸோமாக்னிப்யாம் ஸ்வாஹா (நடுக்கண்ணில்)
(ஓம் ஹாம்) அக்னயே ஸ்விஷ்ட்டகிருதே ஸ்வா — ஹா

என்று அக்னியின் வாய்ப்புறம் நெய்ப்பாத்திரம் இவற்றில் ஹோமம் செய்யவும்.

பிறகு நெய்ப்பாத்திரத்தினை 'ஓம்' என்று சொல்லி புஷ்பாக்ஷதையால் பூஜித்து 'ப்பட்' என்ற மந்த்ரம் சொல்லி வலது கையால் நெய்ப்பாத்திரத்தைக் கவிழாமல் மேடுபள்ள மற்ற இடத்தில் தனக்கு முன்பாக வைத்து. "ஹூம்" என்று சொல்லி அதற்கு அவகுண்டன முத்திரை காண்பித்து. ஸ்ரீ மஹாகணபதி மூலமந்த்ரத்தைச் சொல்லி தேனு முத்ரையில் (பின்னால் விளக்கம் உள்ளது. அதனை "அம்ருதீகரணம்" செய்து. மறுபடி மூலமந்த்ரம் சொல்லி பூஜித்து இவ்வாறு 'ஸம்ஸ்காரம்' செய்யப்படாத நெய்யில் சேர்த்து சோதனம் செய்யவும்.

நாமகரணம் முதலான ஸம்ஸ்காரங்கள் :

பிறகு நாமகரணம் செய்யும் முறையாக, ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் என்று சொல்லி அக்னியை அர்ச்சனை செய்து பூஜித்து. மூன்று முறை எள் எடுத்து. ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் நாமகரண கர்ம கல்ப்பயாமி நம: என்று சொல்லி ஹோமம் செய்யவும்.

மறுபடி புஷ்பாக்ஷதம் எடுத்து 'உணவு ஊட்டுதல்' எனப்படும் 'அன்ன ப்ராசனம்' செய்விப்பதாக பாவித்து. ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் நம: என்று சொல்லி பூஜித்து, எள்ளால் பின்வரும் மந்த்ரம் சொல்லி 3 முறை ஹோமம் செய்யவும். ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் அன்னப்ராசன கர்ம கல்ப்பயாமி நம: என்று.

பிறகு ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் நம: புஷ்பாக்ஷதம் எடுத்து பூஜை செய்துவிட்டு எள்ளால் 7 முறை ஹோமம் செய்யவும்.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் சௌள கர்ம கல்ப்பயாமி நம: பிறகு ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் நம: புஷ்பாக்ஷதம் எடுத்து பூஜை செய்துவிட்டு, எள்ளால் 7 முறை ஹோமம். ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் உபநயன கர்ம கல்ப்பயாமி நம: பிறகு ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் நம: புஷ்பாக்ஷதத்தால் பூஜை செய்து 7 முறை எள் எடுத்து ஹோமம் செய்யவும். ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் விரத ஸமாவர்த்தன கர்ம கல்ப்பயாமி நம: பிறகு ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் நம: புஷ்பாக்ஷதை எடுத்து பூஜை செய்துவிட்டு 7 முறை எள்ளால் ஹோமம். ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் விவாஹ கர்ம கல்ப்பயாமி நம:

ஓம் வாகீச்வரீ — வாகீச்வராப்யாம் நம: சொல்லி, வாகீச்வராளை பூஜித்து அவர்களை உத்வாஸனம் செய்து விஸர்ஜனம் செய்யவும். (எழச்செய்யவும்)

அக்னித்யானம் : (பின்வருமாறு)

த்ரிணயனம் அருணாபம் பத்தமௌலிம் ஸுசுக்ல
அம்சுகம் அருணம் அநேகாகல்ப்பம் அம்போஜ
ஸம்ஸ்த்தம் ।

அபிமத வரசக்தி ஸ்வஸ்திகாபீதிஹஸ்த்தம்
நமத கனகமாலாலங்க்ருதாம்ஸம் க்ருசானும் ॥

பிறகு அக்னி சக்கரத்தில் பாவனைப்பர்க எழுதப்பட்ட 8 கோணத்தில் புஷ்பாக்ஷதம் கொண்டு பூஜை செய்யவும்.

ஓம் ஜாத வேதஸே நம:
,, ஸப்த ஜிஹ்வாய நம:
,, ஹவ்ய வாஹனாய நம:
,, அச்வோதராஜாய நம:
,, வைச்வானராய நம:
,, கௌமாரதேஜஸே நம:
,, விச்வமுகாய நம:
,, தேவமுகாய நம:

பூஜை செய்த பிறகு.

6 கோணங்களில்

ஓம் ஸஹஸ்ரார்ச்சிஷேஹ்ருதயாய நம:
,, ஸ்வஸ்திபூர்ணாய சிரஸேஸ்வாஹா
ஓம் உத்திஷ்ட்ட புருஷாய சிகாயை வஷட்
,, தூமவ்யாபினே கவசாய ஹும்
,, ஸப்தஜிஹ்வாய நேத்ரத்ரயாயவௌஷட்
,, தனுர்தராய அஸ்த்ராய ப்பட்
என்று சொல்லி அர்ச்சித்து

த்ரிகோணத்தின் நடுவில் உள்ள முக்கோணத்தில் அக்னியை ஓம் உத்திஷ்ட புருஷ, ஹரித, பிங்கள லோஹிதாக்ஷ தேஹி மே தாபய ஸ்வாஹா என்று சொல்லி பூஜித்து.

பின்வரும் மந்த்ரங்கள் சொல்லி ஒவ்வொரு முறை (ஆஜ்யஹோமம்) நெய்யால் ஹோமம் செய்யவும்.

ஓம் ஹிரண்யாயை நம: ஸ்வாஹா (7 முறை ஆஜ்யஹோமம்)
ஓம் கனகாய நம; ,, ,, ,,
ஓம் ரக்தாயை நம: ,, ,, ,,
ஓம் க்ருஷ்ணாயை நம: ,, ,, ,,
ஓம் ஸுப்ரபாயை நம: ,, ,, ,,
ஓம் பஹு ரூபாயை ,, ,, ,,

அக்னி — பூர்ணாஹுதி

பிறகு அக்னியின் கர்ப்பாதானம் முதலான ஸம்ஸ்காரங்கள் நிறைவு பெற்றமைக்காக அக்னியின் மூல மந்த்ரத்தால் 'ஸ்ருவத்தில்' நெய்யை நிரப்பிக்கொண்டும் அதன் வாய்ப்புறத்தில் 'ஸ்ருக்' கைக் கவிழ்த்து வைத்துக் கொண்டும். "வைச்வானர ஜாதவேத + லாதய ஸ்வாஹா வௌஷட்" என்று சொல்லியவாறு ஹோமம் செய்து விட்டு — "வைச்வானர, உத்திஷ்ட்ட, சித் பிங்கல ஹன ஹன, தஹ த்ஹ, பச பச ஸர்வக்ஞ ஆக்ஞாபய ஸ்வாஹா" என்ற மந்த்ரம் சொல்லி 3 முறை ஆஜ்ய ஹோமம் செய்யவும்.

பிறகு அக்னியில் 'பஹுரூபோ' எனும் பெயருள்ள நாக்கில் உபாஸ்யமான தெய்வத்தை (ஸ்ரீ மஹாகணபதியை) ஆவாஹணம் செய்து பிராண ப்ரதிஷ்ட்டை முதலானதுகள் செய்து பூஜை செய்து ஆவரண தேவதைகளையும் பூஜித்து கர்ப்பூர ஆரதிக்குப் பிறகு "அஷ்ட திரவிய"த்தால் (முன்பே தயார் செய்து வைக்கப்பட்டது) ஹோமம் செய்யவும். சிலர் நிவேதனஸ்தானத்தில் ஹோமம் செய்வர். இதனை குரு முகமாகக் கேட்டு தீர்மானம் செய்துகொள்ளலாம்.

முக்ய குறிப்பு

அக்னியில் ஹோமம் செய்யப்படும் பொழுது ஸ்வாஹா என்ற சொல்லை 'தீர்க ஸ்வரிதம்' எனும் ஸ்வரத்தோடு சொல்லியே ஹோமம் செய்தல் வேண்டும் என்பது விதிமுறை. தாந்த்ரிக மந்த்ரங்கள் பலவும் பெரும்பாலும் ஸ்வாஹா என்ற சொல்லுடன் முடிவுற்றிருக்கும். அந்தச் சொல் மந்த்ரத்தோடு சேர்ந்தது. அக்னியில் ஹோமம் செய்யும் சமயம் மந்த்ரம் முழுவதையும் சொல்லிய பிறகு மறுபடி ஸ்வாஹா என்று சொல்லி ஹோமம் செய்ய வேண்டும் எனும்போது 'ஸ்வாஹா' சொல் முடிவாகவுள்ள மந்த்ரத்தை முழுவதும் சொல்லி மறுபடியும் 'ஸ்வாஹா' என்று சொல்லி ஹவிஸ்ஸை அக்னியில் ஹோமம் செய்யவேண்டுமா! வேண்டாமா! இது பற்றி தந்த்ர நூல்களில் ("காளீ தந்த்ரம்" முதலானவற்றில்) மந்த்ரத்தின் முடிவில் உள்ள ஸ்வாஹா' எனும் சொல் மந்த்ர அங்கமானது. அம்மாதிரி மந்த்ரம் சொல்லி ஹோமம் செய்யப்படும்பொழுது இன்னொரு 'ஸ்வாஹா' சொல்லை தீர்க ஸ்வரித ஸ்வரத்துடன் சொல்லியே ஹோமம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் மூலமந்த்ரத்திலுள்ள 'ஸ்வாஹா' எனும் சொல்லை சாஸ்த்ர முறையில் 'ஆவர்த்தி' செய்துகொள்ளலாம் என்பதால் ஸ்வாஹா சொல் உள்ள மந்த்ர விஷயத்தில் இன்னொரு 'ஸ்வாஹா'

சொல் சேர்க்கப்பட வேண்டியதில்லை என்றும் சொல்லப் படுகிறது. இவ்விஷயத்தில் குருநாதர் கூறும் வழியினை அனுசரிப்பதே சரியாகும். குருநாதரின் வார்த்தைகளில் ஆராய்சி செய்துகொண்டிருக்கவேண்டாம். அது எப்படி யாயினும் அவ்வழியினைப் பின்பற்றுவதே நன்மை பயக்கும். எத்தனை ஆவர்த்தி ஹோமம் செய்ய வேண்டுமோ அத்தனை செய்து முடித்து பீடசக்தி முதலாக ஆவரண தேவதைகளுக்கும் ஹோமம் செய்துவிட்டு, மூல மந்த்ரத்தால் 4 முறை நெய்யால் ஹோமம் செய்துவிட்டு, மூலமந்த்ரத்தால் 4 முறை நெய்யால் ஹோமம் செய்த பிறகு, ஸ்ரீ மஹாகணபதிக்கு ஹோமம் செய்த பொருளை அக்னிக்கு 'ஸ்விஷ்டக்ருத்' ஹோமம் முன்போல் செய்து விட்டு பூர்ணாஹுதி செய்யவேண்டும்.

பூர்ணாஹுதி : (ஸ்ரீ மஹா கணபதிக்கு)

இது அவரவர் சக்திக்கு ஏற்ப செய்யத்தக்கது. குறைந்த பக்ஷமாக பூரண (முழு) பழம் ஏதோ ஒன்று (வாழைப்பழமோ வில்வப்பழமோ முழுத்தேங்காயோ) தாம்பூலம் சந்தனம் குங்குமம் புஷ்பம் நெய் தேன் ஹோமம் செய்யப்பட்டு மீதமுள்ள திரவியத்தில் சிறிதளவு இவை வேண்டும். வசதி இருப்பின் பட்டு, பிறபழ வகைகள் மிக உயர்ந்த பொருள்கள் மிகுந்த நெய், தேன் குங்குமப்பூ பருப்பு வகைகள் இனிய பக்ஷணங்கள் யாவும் சேர்க்கலாம்

ப்ரம்மார்ப்பணம்

" இத: பூர்வம் ப்ராண புத்தி தேஹ தர்மாதிகாரத:
ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி அவஸ்த்தாஸு
மனஸா வாசா கர்மணா பத்ப்யாம் உதரேண
சிச்னா - யத் ஸ்ம்ருதம் யத் உக்தம் - யத் க்ருதம்
யத் அனுஷ்டிதம் தத்ஸர்வம் ப்ரம்மார்ப்பணம் பவது
ஸ்வாஹா: "

மூலமந்த்ரம் + வௌஷட் சொல்லி நின்றபடி ஹோமம் செய்யவும். பிறகு ஓம் பூஸ் ஸ்வாஹா. ஓம் புவஸ் ஸ்வாஹா. ஓம் ஸ்வஸ் ஸ்வாஹா. ஓம் பூர்புவஸ் ஸ்வஸ் ஸ்வாஹா என்று வியாஹ்ருதிகளால் ஹோமம் (ஆஜ்ய ஹோமம்) செய்து விச்வே தேவர்களுக்கு "ஓம் விச்வேப்யோ தேவேப்யஸ் ஸ்வாஹா" என்று இரு கைக ளாலும் ஸ்ருக்-ஸ்ருவங்களில் நெய்யெடுத்து ஒரேசமயத்தில் ஹோமம் செய்யவும். (இங்கு ஒரு முக்ய விஷயம் சொல்ல வேண்டியதுண்டு) 'இது எந்த மந்த்ரம் / தெய்வத்தின் பெயர் சொல்லி அக்னியில் ஹோமம் செய்யப்படுகிறதோ அந்த மந்திர தேவதைக்கே தவிர எனக்கல்ல" என்ற கருத்தினைக் கூறும் வகையில் உத்தேச த்யாகம் சொல்லப் படவேண்டும். உதாரணமாக ஸ்ரீ மஹாகணபதயே ஸ்வாஹா ஸ்ரீ மஹாகணபதயே இதம் ந மம. என்ற (இந்த்ராய ஸ்வாஹா இந்த்ராய இதம் ந — மம. என்ற வாறு அந்தந்த ஹோமத்தின் முடிவில் சொல்ல வேண்டும். ஒரே தேவதைக்கு 1000 தடவை ஹோமம் செய்யப்படும் பொழுதும் அந்த 1000 தடவை ஹோமம் முடிந்து அதன் பிறகு சொன்னால் போதும். அடுத்தடுத்து வெவ்வேறு தேவதைகளுக்கு ஹோமம் செய்யப்படும் இடங்களில் மட்டும் அந்தந்த தேவதைகள் பெயரை உடனுக்குடன் சொல்லி நமம என்று உத்தேசத்தியாகம் சொல்ல வேண்டும்.)

பிறகு கற்பூர ஆரதி செய்து விட்டு மந்த்ர புஷ்பாஞ்ஜலி செய்தபிறகு அக்னியை சாதகன், அவன் மனைவி, குழந்தைகள். உறவினர் மற்றோர் எனும் வரிசைப் படி பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

கற்பூர ஆரதி; (நீராஜனம்)

ஓம் 3. மும்முறை சுற்றி ஸர்வாவரண தேவதா ஸஹிதாய ஸ்ரீ மஹாகணபதயே ஓமஸ்தாபராத

க்ஷமார்த்தம் கற்பூர நீராஜனம் தர்சயாமி. நீராஜனா னந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி. (ஒரு உத்தரணி ஜலம் கிண்ணத்தில் விடவும்)

ரக்ஷாம்தாரயாமி.

புஷ்பாக்ஷதத்தை கற்பூரத்தைச் சுற்றிவிட்டு பகவான் மீது போடவும்.

மந்த்ர புஷ்பாஞ்ஜலி

ஓம் 3 நமோ நர-கஜாக்ருதே நலின வர்ண தேஹாக்ருதே
நராஸுர ஸுரேடித ச்ருதி சிரஸ் ஸ்துதாங்க்ரே
விபோ ।
நாகேச்வர வராத்மஜா நயனபத்மபானோ நமோ
நதார்த்தி ஹரணாங்க்ரியுக் கலித ஏஷ புஷ்பாஞ்ஜலி: ॥

ஸர்வாவரண தேவதா ஸஹிதாய ஸ்ரீ மஹா கணபதயே நம: மந்த்ர புஷ்பாஞ்ஜலிம் ஸமர்ப்பயாமி: (பலவித மலர்களை எடுத்து பகவானின் மீது போடவும். பெண்களாயின் பூஜையில் உள்ள பகவான் மீதுதான் போடவேண்டும். அக்னியில் அல்ல.)

பிரதக்ஷிணம் : (மும்முறை) [1]

யானிகானி ச பாபானி – ஜன்மாந்தர க்ருதானி ச ।
தானி தானி விநச்யந்தி – பிரதக்ஷிண பதே பதே ॥
ப்ரக்ருஷ்டபாப நாசாய-ப்ரக்ருஷ்ட(பிரஸித்த)பலஸித்தயே।
பிரதக்ஷிணம் கரோமி த்வாம் ப்ரஸீத கணநாயக ॥

---

1. கணபதிக்கு 3 முறை பிரதக்ஷிணமும், திருமாலுக்கு 4 முறையும், காளி, சாமுண்டா துர்காதேவிக்கு 1 முறையும் சூரியனுக்கு 7 முறையும், சிவனுக்கு அரைப் பிரதக்ஷிணமும் செய்யப்படவேண்டும்.

एका चण्ड्यां रवौ सप्त तथा त्रीणि गणेशितु: ।
हरेश्चतस्रो विज्ञेया: शिवस्यार्धप्रदक्षिणा ॥

நமஸ்காரம் : (பிரார்த்தனை)

ஆவாஹனம் ந ஜானாமி — ந ஜானாமி விஸர்ஜனம் ।
ஸேவாவிதிம் ந ஜானாமி — க்ஷமஸ்வ கணநாயக ॥
அக்ஞானாத் விஸ்மிருதேர் - ப்ராந்த்யா யந்ந்யூனம் அதிகம்
க்ருதம் ।
தத்ஸர்வம் க்ருபயா தேவ — க்ருஹாணாராதனம் மம ॥
அந்யதா சரணம் நாஸ்தி — த்வமேவ சரணம் விபோ ।
தஸ்மாத் காருண்யபாவேன — ரக்ஷ ரக்ஷ கணேச்வர ॥

பிறகு ஓம்பூ:ஸ்வாஹா ... ... எனும் வியாஹ்ருதிகளால் (முன்னால் கூறியவாறு) ஆஜ்ய ஹோமம் செய்துவிட்டு அக்னிக்கு பூர்ணாஹுதி (நெய்யால்) வைச்வானர ஜாதவேத — ஸாதய ஸ்வாஹா என்று சொல்லி ஹோமம் செய்யவும். பிறகு ஸ்ரீ மஹாகணபதிக்குத் தர்ப்பணம் செய்யவேண்டும்.

தர்ப்பணம்

இது புரஸ்ச்சரண அங்கமான தர்ப்பணம் அல்ல ஜபம் செய்து, ஹோமம் நடத்தப்படும் ஹோமங்களில தர்ப்பணமும் செய்தாக வேண்டும். ஹோமம் புரஸ்சரண அங்கமாகச் செய்யப்பட்டாலும் அந்த ஹோம அங்கமான தர்ப்பணமும் உண்டு என்பதால் 8 முறை தர்ப்பணம் செய்யவேண்டும் (புரஸ்ச்சரண அங்கமான தர்ப்பணம் அதிகம் எண்ணிக்கை யாதலால் தனியாகவே செய்யப்பட வேண்டும். அல்லது வசதி இருப்பின் ஹோமத்தின் இந்த கட்டத்தில் புரஸ்ச்சரண அங்க தர்ப்பணம் செய்வதற்கென சிலரை நியமனம் செய்து அவர்களைக்கொண்டும் செய்யப் படவேண்டிய எண்ணிக்கையளவு செய்யலாம். சுத்த மான பசும்பால் அல்லது சந்தனம் பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ முதலானதுகள் கலந்த சுத்த ஜலம் கொண்டு தர்ப்பணம் செய்யலாம்.)

தர்ப்பண ஸங்கல்பம்

"அத்ய அனுஷ்டிதஸ்ய ஸ்ரீ மஹாகணபதி [புரஸ்சரண] ஹுவன கர்மண: ஸாங்கத்வஸித்யர்த்தம் ஸ்ரீ மஹாகணபதி தர்ப்பணம் கரிஷ்யே" என்று ஸங்கல்பம் செய்துகொண்டு மூலமந்த்ரம் + ஸ்ரீ மஹா கணபதிம் தர்ப்பயாமி எனச் சொல்லியவாறு உத்தரணி யால் ஜலத்தை ஒரு கையால் எடுத்து இன்னொரு (வலது) கையில் புஷ்பத்தை வைத்துக்கொண்டு அதில் அந்த ஜலத்தை விடவேண்டும். ஹோம சங்க்யையில்) 10ல் 1 பாகம் தவறாமல் எண்ணிக்கொள்ளவேண்டும்.

"சதுராவர்த்தி தர்ப்பணம்" என்ற ஒன்று உண்டு. அது வேறு: இந்தத் தர்ப்பணத்திற்கும் அதற்கும் சம்பந்த மில்லை. "சதுராவர்த்தி தர்ப்பணம்" தனியாகச் செய்யப் படவேண்டிய ஒன்று. அது பற்றி அறிந்துகொள்ள பிற நூல்களின் துணைகொள்ளவும்.

இந்த தர்ப்பணம் குறிப்பிட்ட எண்ணிக்கை செய்து முடித்த பிறகு

"அனேன தர்ப்பணேன பகவான் ஸ்ரீ மஹாகணபதி:
ஸந்த்ருப்தஸ் ஸுப்ரீதோ பவது—ஸுப்ரஸன்னோ பவது"

என்று சொல்லி — புஷ்பாக்ஷதம் எடுத்து அதில் தர்ப்பணத் திற்கான ஜலத்தையும் விட்டு ஸ்ரீ மஹாகணபதியின் வலது கையில் விடுவதாக பாவிக்கவும்.

இதற்குமேல், மூலமந்திர ஜபம் சொற்ப அளவு செய்துவிட்டு 'விமோசம்' முன்பு கூறியவாறு செய்து

"குஹ்யாதி குஹ்யகோப்தா த்வம்
க்ருஹாணாஸ்மத்க்ருதம் ஜபம்
ஸித்திர் பவது மே தேவ
த்வத்ப்ரஸாதாத் மயி ஸ்த்திரா"

என்று பகவானது வலது கையில் ஸமர்ப்பணம் செய்யவும்.

பலிதானம்

பலி என்பதன் பொருள் பூஜை என்பதே. இது "பலி கொடுப்பது" என்று பேசப்படும் கருத்தில் செய்யப்படுவதல்ல.

சாதகனை நோக்கியுள்ள பகவானுக்கு வலப்புறத்தில் சாதகனுக்கு இடப்புறத்தில் (முன்னால்) சங்கு ஜலத்தால் தரையில் ப்ரோக்ஷணம் செய்து அந்த இடத்தை "ஓம் ஸ்ரீ-ஐம் வ்யாபக மண்டலாய நம என்று சொல்லி புஷ்பாக்ஷதங்களால் பூஜித்துவிட்டு, ஒரு செப்புத்தட்டு அல்லது கிண்ணத்தை அதன் மீது வைத்து அதில் ஹோமம் செய்ததில், மீதமுள்ளதிலிருந்து சிறிது எடுத்து வைத்து தாம்பூலமும் வைத்து சந்தனம் குங்குமம் 'பூஜை செய்த' புஷ்பம் யாவும் எடுத்து அதன் மீது போட்டு, மறுபடி புஷ்பம் அக்ஷதையெடுத்து சிறிது ஜலமும் சேர்த்துக் கொண்டு "ஓம் ஸ்ரீ ஓம் காம் கீம் கூம் கைம் கௌம் க: மஹாகணபதயே, இமம் ஸர்வோபசார ஸஹிதம் பலிம் க்ருஹ்ண க்ருஹ்ண ஸ்வாஹா" என்று சொல்லி அந்த பலி மீது போட்டு சிறிது சங்கு ஜலமும் அதன்மீது விடவும்.

பிறகு கால்களை அலம்பிவிட்டு, ஆசமனம் செய்யவும்.

பிறகு பகவானை வலம் வந்து நமஸ்காரம் செய்து பிரார்த்தனை செய்துகொண்டு அக்னியில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட பகவானை ஓம் ஸ்ரீ. அஸ்மின்குண்டே ப்ரதிஷ்டிதம் ஸ்ரீ மஹாகணபதிம் யந்த்ரே ஸம்யோஜயாமி என்று சொல்லி யந்த்ரத்தில் எழச் செய்து, சுருக்கமான பூஜைசெய்து 108 அர்ச்சனை செய்து சுத்த அன்னம், பாயஸம், மோதகம், அப்பம், வடை, பழம், தாம்பூலம் முதலானவற்றை நிவேதனம் செய்து, கற்பூர ஆரதி, ஸ்தோத்ரங்கள் புஷ்பாஞ்ஜலி, நமஸ்காரம் செய்து பூஜை மட்டும் சொல்லவும். (ஹோமம் செய்யாத சமயம் பூஜை புஷ்பாஞ்ஜலி வரை செய்பவர்கள் பகவானுக்கு பூஜை புஷ்பாஞ்ஜலி வரை செய்துபின்பு நிர்மால்ய பலிதானம், முன்பு செய்தது போல்

செய்ய வேண்டும். நிவேதனம் செய்யப்பட்ட பொருள் களில் சிறிதளவு எடுத்து வைத்து

'ஓம் 3 கணேசவாஹ மூஷாத்யா: காணேசா பக்த புங்கவா:। நிர்மால்யம் கணநாதஸ்ய ஸர்வே க்ருண்ணந்து நிர்மலய்' ॥

என்று சொல்லி இந்த பலியின் மீது புஷ்பாக்ஷதம், சிறிது பூஜித்த புஷ்பம். ஒரு உத்தரணி ஜலம் போடவும்.)

வடுக பூஜை

இதற்கென முன்பே ஒரு திருமணமாகாத. உபநயனம் ஆகிய பிராமணச் சிறுவனை ஏற்பாடு செய்து வைக்க வேண்டும். அச்சிறுவனை அழைத்து பகவானுக்கு எதிரில் ஒரு பலகையில் அமரச் செய்து ஸங்கல்பப் செய்து பூஜை செய்ய வேண்டும்.

வடுக பூஜை ஸங்கல்ப்பம் : அக்ஷதை எடுத்துக் கொண்டு, அத்ய அனுஷ்ட்டித ஸ்ரீ மஹாகணபதி ஸபர்யாங்கத்வேன ஸ்ரீ வடுக பூஜாம் கரிஷ்யே'' என்று சொல்லி அதனைக் கீழே போட்டு கையலம்பவும். கையில் புஷ்பாக்ஷதம் எடுத்து அந்தச் சிறுவனை பகவான் ஸ்ரீமகா கணபதியாக பாவித்து பூஜை செய்யவும். ஓம் 3 வம் வடுகாய நம: பாத்யம் கல்ப்பயாமி / அர்க்யம் கல்ப்பயாமி என்ற விதத்தில் ஆசமனம் ஸ்நானம் செய்வித்து வஸ்திரம்-யக்ஞோபவீதம், சந்தனம். குங்குமம், புஷ்பம், தூபதீப நிவேதனம், முதலானதுகள் சமர்ப்பித்து நீராஜனமும் செய்யவும்.

குரு பூஜனம்

பிறகு குருநாதர் அருகில் இருப்பின் சந்தனம் குங்குமம், புஷ்பம் முதலானதுகள் சமர்ப்பித்து தக்ஷிணை யும் சமர்ப்பிக்கவும் அருகில் இல்லையானாலும் பாவனை யாகச் செய்யவும். பிறகு, பக்தர்களுக்குர் உசிதப்படி கந்த (சந்தனம்) குங்குமாதிகள் கொடுத்து உபசரிக்கவும்.

பூஜா ஸமர்ப்பணம்

ஓம் 3 ஸாது வா அஸாது வா கர்ம-யத்யத் ஆசரிதம் மயா ।
தத்ஸர்வம் க்ருபயா தேவ-க்ருஹாண ஆராதனம் மம ।
தேவ நாத குரோ ஸ்வாமின்-தேசிக ஸ்வாத்மநாயக ।
த்ராஹி த்ராஹி தயாஸிந்தோ-பூஜாம் பூர்ணதராம் குரு ।

என்று சிறுது ஜலத்தைக் கையில் எடுத்து பகவானின் இடது கையில் விடுவதாக பாவித்து விடவும்.

சங்கோத்வாஸனம் : சங்கை எடுத்து பகவான் மீது மூன்று முறை சுற்றி, அச் சங்கு ஜலத்தைத் தம் தலை மீதும் பிறர் மீதும் ப்ரோக்ஷித்து அதனைத் துடைத்து வைக்கவும். பிறகு பூஜா தீர்த்தம் நிர்மால்யம் ஸ்வீகரித்துக் கொள்ளவும்.

உத்வாஸனம்

ஓம் 3 (ஹ்ருத்பத்ம) ஆதார கர்ணிகாமத்யே
சக்த்யா ஸஹ கணேச்வர ।
ப்ரவிச த்வம் கணேசான
ஸர்வைராவரணைஸ்ஸஹ ॥

என்று சொல்லி பகவானைத் தமக்குள் எழுந்தருளச்செய்து, "பஞ்ச பூஜை" செய்து தாமும் பகவானும் இரண்டறக் கலந்த நிலையில் இருக்கவும்

இவ்வாறு 4 லக்ஷம் மூலமந்த்ர ஜபம் ஹோமம், தர்ப்பணம் செய்து மார்ஜனம் போஜனம் ஆகியவற்றையும் முன்னதற்கு அடுத்தது பத்தில் ஒரு பங்கு என்ற விகிதத்தில் செய்தால் மந்த்ரம் ஸித்தியாகும் மந்த்ர ஸித்தி ஏற்பட்ட பிறகும் ஜீவதசை வரையில், நித்ய அனுஷ்டானத்தை விடாமல் செய்து வரவேண்டும். ஸ்ரீ மஹாகணபதியின் ஆராதனை — உபாஸனை தேவி சம்பந்தமான வழிபாட்டிற்கு மிகவும் உதவி செய்யக் கூடியதாகும். இல்வாழ்வில்

எல்லாவித நலன்களையும் பெறுவதற்கு ஸ்ரீ மஹாகணபதி உபாஸனை மிகச் சிறந்த சாதனம் என்பது பலராலும் அனுபவபூர்வமாக உணரப்பட்ட ஒன்றாகும்.

"விக்னேச கல்ப்பம்" எனும் நூலில் கூறப்பட்ட சில பிரயோகங்கள்

1. பிரதி வெள்ளிக்கிழமையும் தேங்காயும் அருகம்புல்லும் கொண்டு ஓராண்டு ஹோமம் செய்து வந்தால் முறையே பெரும் செல்வதையும் நீண்ட ஆயுளையும் பெறலாம்.

2. ஸ்ரீ மஹாகணபதி மந்த்ரத்தைச் சொல்லியவாறு [1] நாயுருவி ஸமித்தைக்கொண்டு ஹோமம் செய்யப் பட்டால் துஷ்ட கிரஹங்களின் பாதிப்பு விலகும்.

3. செந்தாமரை[2] மலரை ஹோமம் செய்தால் கட்டாயம் பெரும் செல்வத்தைப் பெறலாம்.

4. நீலோத்பல[3] மலர்களால் அல்லது செந்தாமரை மலர்களால் ஹோமம் செய்யின் ஸர்வஜன வச்யம் ஏற்படும்.

5. கெட்டித் தயிரைக்[4] கொண்டு ஹோமம் செய்தால் எல்லாவகையான வளமும் ஏற்படும்.

भृगुवारे विशेषेण नालिकेरेण दूर्वया ।
आवत्सरं हुनेन्मन्त्री श्रियमायुश्च विन्दति ॥

१. अपामार्गसमिद्धोमात् ग्रहा नश्यन्ति षण्मुख ।

२. पद्महोमेन साम्राज्यं लभते नात्र संशयः ।

३. उत्पलैर्वश्यमथवा रक्तपद्मैश्च वा हुनेत् ।

४. दध्ना सर्वसमृद्धिः स्याद्वाम्यं रत्नपतिर्भवेत् ।

6. நெல் தான்யம் கொண்டு ஹோமம் செய்யப்படின் உயர்ந்த பொருள்ளைப் பெற்ற தனவந்தனாகலாம்.

7. வெள்ளை [5] நீர்நொச்சி ஸமித்துக்கள் கொண்டு ஹோமம் செய்யின் மழை பெய்யும்.

8. வெல்லம் [6] வாழைப்பழம் இவை கலந்த பால் பாயஸத்தாலும், நெய் கலந்த தேங்காயாலும் ஹோமம் செய்தால் எல்லா விருப்பங்களும் நிறைவேறும்.

முக்ய குறிப்பு:

மேலே கூறப்பட்ட பலன்கள்பெற ஸ்ரீ மஹாகணபதி மந்த்ரத்தில் மாற்றமில்லை. ஹோமம் செய்யப்படும் பொருள்கள் மாறினால் பலன்களும் மாறும். ஒரே மூல மந்த்ரத்தைச் சொல்லியவாறு பொருள்களை மட்டும் மாற்றம் செய்து ஹோமம் செய்தால் பலனும் மாறுபடும். வேறு வேறு பலனுக்கு மந்த்ரங்களை மாற்றிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆனால் மூலமந்த்ரத்தை உரிய முறையில் புரஸ்ச்ரண ஜபம், ஹோமம் முதலானது செய்து ஸித்தி செய்திருக்கவேண்டும். அவ்வளவே.

ஜ்வரம் தீருவதற்கும், எலிக்கடி விஷம் தீருவதற்கும் ஸ்ரீ மஹாகணபதி மூலமந்த்ரத்தை ஸித்தி செய்தவர்கள் பின்வரும் மாலா மந்த்ரத்தைப் பயன்படுத்தலாம். "ஓம் நமோ கணபதயே மஹாவீர, தசபுஜ, மதனகால விநாசன ம்ருத்யும் ஹன ஹன, தம தம, மத மத, காலம் ஸம்ஹர ஸம்ஹர, ஸர்வ கிரஹான், சூர்ணய சூர்ணய, நாகான்

---

५. वृष्टिकाम: प्रजुहुयात् वेतसानां समिद्वरै: ।

६. पायसं गुड़संमिश्रं कदलीफलसंयुतम् ।
आज्याक्तैर्नारिकेलैश्च सर्वकाम्यार्थसिद्धये ॥

மோடய மோடய. (மூடய மூடய) ருத்ரரூப. த்ரிபுவனேச்வர, ஸர்வதோமுக. ஹூம் பட் ஸ்வாஹா" இந்த மந்த்ரத்தை விபூதியில் மந்த்ரித்து ஜ்வரபீடையுள்ளவருக்குக் கொடுத்தால் ஜ்வரம் தீரும்.

இந்த மந்த்ரத்தை சுத்த ஜலத்தில் மந்த்ரித்து எலிக்கடி விஷம் ஏற்பட்டவருக்கு அபிஷேகம் செய்துவைத்தும் உள்ளுக்குக் கொடுத்தும் குணப்படுத்தலாம். இவ்விதமே, நெய், தேன், குழவுஜீனி இம்மூன்றும் கலந்த நெல் பொறி கொண்டு 7 நாட்கள் ஸ்ரீ மஹாகணபதி மந்த்ரத்தால் ஹோமம் செய்தால் ஆண் பெண்களின் திருமணத்தடைகள் விலகி திருமணம் ஏற்படும்.*

ஸ்ரீ மஹாகணபதி மந்த்ரஸித்தி பெற்றவர் ஒரே ஒரு காய்ந்த மட்டைத்தேங்காயை எடுத்து அதன் மேல் மட்டையையும் கொட்டாங்கச்சியையும் தனியே எடுத்து அவற்றைக் கொண்டு தயார் செய்யப்பட்ட அக்னியிலேயே அந்தத் தேங்காயை ஒரே தடவையாக ஹோமம் செய்தால் விரும்பிய பலன் கிட்டும். ஆனால் இந்த ஹோமம் தொடர்ந்து 40 நாட்கள் செய்யப்படவேண்டும்:

एकमपि नारिकेलं सचर्मलोष्टेन्धनं हुनेन्मन्त्री ।
दिनशश्चत्वारिंशद्दिनतः स तु वाञ्छितार्थमभ्येति ॥

இம்மாதிரி பலன்களை எதையும் விரும்பாமல் ஸ்ரீ மஹாகணபதியை ஜபஹோமாதிகளால் ஆராதித்தால் ஸ்ரீ குருநாதரின் அனுக்ரஹத்தால் ஸ்ரீ மஹாகணபதி ஸாக்ஷாத்காரத்தையும் (காணும் பாக்யத்தையும்) அவருடைய அருளால் முக்தி நிலையும் பெறலாம்.

---

* मधुरत्रयसिक्ताभिः लाजाभिः सप्तवासरम् ।
जुहुयात्कन्यकार्थी वा कन्यका वा वरार्थिनी ॥

ஸ்ரீ கணேச பஞ்சரத்ந ஸ்துதி

1. முதாகராத்த மோதகம் ஸதாவிமுக்தி ஸாதகம்
கலாதராவதம்ஸகம் விலாஸிலோக ரக்ஷகம் ।
அநாயகைக நாயகம் விநாசிதேப தைத்யகம்
நதாசுபாசு நாசகம் நமாமி தம் விநாயகம் ॥

2. நதேதராதி பீகரம் நவோதிதார்க்க பாஸ்வரம்
நமத்ஸுராரி நிர்ஜரம் நதாதிகாபதுத்தரம் ।
ஸுரேச்வரம் நிதீச்வரம் கஜேச்வரம் கணேச்வரம்
மஹேச்வரம் தமாச்ரயே பராத்பரம் நிரந்தரம் ॥

3. ஸமஸ்தலோக சங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்ஜரம்
தரேதரோதரம் வரம் வரேபவக்த்ரம் அக்ஷரம் ।
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம் ॥

4. அகிஞ்சனார்த்தி மார்ஜனம் சிரந்தனோக்தி பாஜனம்
புராரி பூர்வ நந்தனம் ஸுராரி கர்வ சர்வணம் ।
ப்ரபஞ்ச நாச பீஷணம் தனஞ்ஜயாதி பூஷணம்
கபோலதான வாரிணம் பஜே புராண வாரணம் ॥

5. அசிந்த்யரூபம் அந்தஹீனம் அந்தராய க்ருந்தனம்
நிதாந்த காந்தி தந்த காந்தம் அந்தகாந்தகாத்மஜம் ।
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகினாம்
தம் ஏக தந்தமேவ ஸம்விசிந்தயாமி ஸந்ததம் ॥

மஹாகணேசபஞ்சரத்னம் ஆதரேண யோऽந்வஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மரன் கணேச்வரம் ।
அரோகதாம் அதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயுரஷ்டபூதிம் அப்யுபைதி ஸோऽசிராத் ॥

சில முக்ய குறிப்புக்ள்

ஸ்ரீ மஹாகணபதி — வல்லபா கணபதி என்றும் வழங்கப்படுகிறார். இவர் சைவ, வைணவ, சாக்த, ஸௌர வழிபாடு செய்பவர்களுக்கும் பொதுவானவர். விடியற் காலை மஹாகணபதிக்கு மிகவும் உகந்த பிடித்த நேரம். பிற்பகல், நள்ளிரவு நேரம் தவிர பிற நேரங்களில் இவருடைய மந்த்ர ஜபம் செய்யப்படலாம். நமது வசதிக்கு ஜப எண்ணிக்கையை அமைத்துக்கொண்டாலும் 'ஆயிரம்' ஆயிரத்தெட்டு அவருக்குப் பிடித்தமானது. சோண பத்ரம் எனும் சிலையில் பூஜை, அபிஷேகம் செய்யப் படுவதை மிகவும் விரும்புவார். தந்தம் வெள்ளெருக்கு வேர் இவற்றால் அமைந்த வடிவத்திலும், யந்த்ரத்திலும் கூட பூஜிப்பதை விரும்புகிறவர். வெள்ளிக்கிழமையும், சதுர்த்தி திதியும் இவருக்குப் பிரியமான நாட்கள். மூல மந்த்ர ஜபம் செய்தவாறு பூஜை செய்வது உகந்தது. தந்த, பாச, அங்குச, விக்ன, பரசு, லட்டுக, பீஜாபூர ஆகிய ஏழு முத்ரைகள் இவருக்குப் பிடித்தமானவை. ஜபம், ஹோமம், தர்ப்பணம், மார்ஜனம், போஜனம் இவை இவருக்கு ப்ரீதிகரமானவையெனினும், தர்ப்பணம் மிகவும் பிடித்த மான ஒன்று.

முத்ரைகள்

பூஜையில் பயன்படுத்தக்க சில முக்யமான முத்ரைகள் பற்றி விளக்கம் தரப்படுகிறது. இவை குருமுகமாக அறியத்தக்கதே. அறிந்துகொண்டு பின்னர் குருநாதரின் அனுமதி — அங்கீகாரம் பெற்றும் பயன்படுத்தலாம்.

ஆவாஹனீ முத்ரை : இணைந்து மேல் நோக்கிய இரு கைகளின் மோதிர விரல்களின் நடுக்கணுவுடன் இரு கட்டை விரல்களையும் சேர்த்தல்.

ஸ்தாபனீ முத்ரை: ஆவாஹனீ முத்ரையே கவிழ்த்த நிலையில்.

ஸந்நிதாபினீ முத்ரை : இணைந்த இரு கைகளின் நான்கு விரல்களையும் மடக்கிக்கொண்டு இரு கட்டை விரல்களை மட்டும் மேல் நோக்கி நீட்டுதல்.

ஸந்நிரோதினீ முத்ரை : ஸந்நிதாபினீ முத்ரையுடன் இரு கட்டை விரல்களையும் மடக்கி நீட்டுதல்.

ஸம்முகீ முத்ரை : இரு கைகளின் கட்டை விரல்களை மட்டும் நீட்டி பிற விரல்களை மடக்கி கவிழ்த்த நிலையில் இரு கட்டை விரல்களும் இணைந்திருத்தல்.

அவகுண்டனீ முத்ரை : ஆட்காட்டி விரல் தவிர்த்த பிற விரல்களை மடக்கிக்கொண்டு கவிழ்த்த நிலையில் அக் கையை பகவானுக்கு எதிரில் வலமாகச் சுழற்றுதல். இது போல் வலது கையால் செய்த பிறகு இடது கையாலும் செய்தல்.

தேனு முத்ரை : இரு உள்ளங்கைகளையும் ஒன்றோடொன்று சேர்த்து வைத்து வலது ஆட்காட்டி விரலை இடது நடுவிரலுடனும், இடது ஆட்காட்டி விரலை வலது நடுவிரலுடனும், வலது மோதிர விரலை இடது நுனி விரலுடனும் இடது மோதிர விரலை வலது நுனி விரலுடனும் இணைத்து இரு கட்டை விரல்களையும் மேல் நோக்கி இணைந்து இருக்கச் செய்தல்.

தந்த முத்ரை : இரு கைகளின் நடுவிரல் தவிர, பிற ஏனைய விரல்களையும் மடக்கிக்கொண்டு நடுவிரல்களை நேராக மேல் நோக்கி நீட்டுதல்.

பாச முத்ரை : இடது முஷ்டியின் ஆட்காட்டி விரலையும் வலது முஷ்டியின் ஆட்காட்டி விரலையும் இணைத்து வலது கட்டை விரல் நுனியை வலது ஆட்காட்டி விரல்

நுனியுடனும் இடது கட்டை விரல் நுனியை இடது ஆட்காட்டி விரல் நுனியுடனும் இணைத்தல்.

அங்குச முத்ரை : நடுவிரலை நேராக நீட்டி ஆட்காட்டி விரலை நடுவிரலின் நடுக்கணுவுடன் சேர்த்து ஆட்காட்டி விரலை சற்றே வளைத்தல், [மற்ற மூன்று (கட்டை விரல், மோதிர விரல், நுனிவிரல்) விரல்களும் இணைந்திருத்தல் வேண்டும்.]

விக்ன முத்ரை : கட்டைவிரலை, ஆட்காட்டிவிரல், நடுவிரல்களுக்கு இடையில் செலுத்தி கீழ் நோக்கிக் கவிழ்த்து நடுவிரலை மட்டும் கீழ்நே ாக்கி நீட்டுதல்.

பரசு முத்ரை : இரு உள்ளங்கைகளையும் ஒன்றோ டொன்று இணைத்து விரல்களையும் நீட்டியபடி ஒன்றின் இடையில் மற்றதைச் செலுத்தி நெருக்கமாக இருக்கும்படி அமைத்தல்,

லட்டுக முத்ரை : மேல் நோக்கிய வலது கைவிரல்கள் சற்றே இடைவெளியுடன் வளைந்தபடி இருக்க உள்ளங்கை சற்று குழிந்திருத்தல்.

பீஜாபூர முத்ரை : (மாதுளம்பழம்) மேல் நோக்கிய (தூக்கிய) இடதுகை முட்டி.

அர்ச்சனைக்கான பதினாறு நாமாக்கள்

1. ஓம் ஸுமுகாய நம:
2. ,, ஏக தந்தாய நம:
3. ,, கபிலாய நம:

4. ஓம் கஜகர்ணகாய நம:

5. ,, லம்போதராய நம:

6. ,, விகடாய நம:

7. ,, விக்னராஜாய நம:

8. ,, விநாயகாய நம:

9. ,, தூமகேதவே நம:

10. ,, கணாத்யக்ஷாய நம:

11. ,, ப்பாலசந்த்ராய நம:

12. ,, கஜானனாய நம:

13. ,, வக்ரதுண்டாய நம:

14. ,, சூர்ப்பகர்ணாய நம:

15. ,, ஹேரம்பாய நம:

16. ,, ஸ்கந்தபூர்வஜாய நம:

இருபத்து ஒன்று நாமாக்கள்

1. ஓம் கணஞ்ஜயாய நம:

2. ,, கணபதயே நம:

3. ,, ஹேரம்பாய நம:

4. ,, தரணீதராய நம:

5. ,, மஹாகணப்தயே நம:

6. ஓம் லக்ஷப்ரதாய நம:

7. ,, க்ஷிப்ர ப்ரஸாதநாய நம:

8. ,, அமோக ஸித்தயே நம:

9. ,, அமிதாய நம:

10. ,, மந்த்ராய நம:

11. ,, சிந்தாமணயே நம:

12. ,, நிதயே நம:

13. ,, ஸுமங்களாய நம:

14. ,, பீஜாய நம:

15. ,, ஆசாபூரகாய நம:

16. ,, வரதாய நம:

17. ,, சிவாய நம:

18. ,, காச்யபாய நம:

19. ,, நந்தனாய நம:

20. ,, வாசாஸித்தாய நம:

21. ,, டுண்டி விநாயகாய நம:

சுபம்

SARASVATI MAHAL LIBRARY PRESS, THANJAVUR